
www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்




# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு ● தை-1993

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாய்த் தேசத்தின் நினைவு சுமந்து நடப்போம்!
மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து
சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!
இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு
நிலவு பொழியும் எம் முற்றத்தில் கைகோர்த்து நின்று
மானுடப் பெருங் காதலில் திளைப்போம்!
இந்தப் புத்தாண்டில், வரும் பொங்கல் திருநாளில்
புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க

**வாழ்த்துகிறோம்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு

தை 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
c/o T. C. C - France
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

# சமாதானமும் சுதந்திரமும்

1993ம் ஆண்டினுள் நாம் காலடி எடுத்து வைக்கிறோம். இவ்வாண்டு தமிழீழ மக்களுக்கு சமாதான ஆண்டாக அமையுமா என்பதே அனைவரது கேள்வியுமாகும். சமாதானம் என்பது தமிழீழ மக்களின் பூரண சுதந்திரத்தையே குறித்து நிற்கிறது. இதனைக் கருதியே தலைவர் பிரபாகரன், மாவீரர் தினச் செய்தியில், சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்துள்ளதாக தெரிவித்தார். இதனை அடியொற்றியே, விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம், ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. தமிழீழ மக்கள் சுதந்திரத்தை சமாதான ரீதியில் பெறமுடியுமா என்பதற்கு, தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடக்கி, நடத்திக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கமே பதிலிறுக்க வேண்டும். காரணம் அத்தகு நல்லெண்ணச் சமிக்ஞைகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்தோ, சிங்கள தேசத்திடமிருந்தோ இதுவரை வரவில்லை. யுத்த நடவடிக்கைகள், போருக்கான ஆயத்தங்கள், பொருளாதாரத் தடைகள், சுற்றி வளைப்புகள், கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், சிங்களக் குடியேற்றங்கள் என்ற அடக்குமுறைகளே தமிழ் மக்கள் மீது அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன.

மேலும், ஸ்ரீலங்கா அரசாங்கம், தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான நியாயபூர்வமான மாற்றுத் திட்டம் எதனையும் முன்வைக்கவில்லை. தமிழ் மக்களின் அபிலாசைகளையோ, நிதர்சன நிலைமைகளையோ கணக்கில் எடுத்ததாகத் தெரியவில்லை. அரசியல் ஏமாற்றே தொடர்ந்து அரங்கேற்றப்படுகின்றது. கொழும்பில் உள்ள சிலர், ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் மீது எஜமான விசுவாசம் தெரிவித்து வாலை ஆட்டினார்கள். அவர்களில் அதிவிசுவாசி ஒருவரினூடாக சில எலும்புத் துண்டுகள் வீசப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு அமைந்த சமஷ்டி என்பதே அவ்வெலும்புத்துண்டு. பின்னர், சமஷ்டி என்பதும் தரம் குறைக்கப்பட்டு, இந்திய அரசியல் யாப்பு வடிவம் எனக் கூறப்பட்டது. அரை சமஷ்டி வடிவில் அமைந்த இந்திய அரசியல் யாப்பை, எப்படி ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பினுள் அடக்குவது எனத் தெரிவிக்கவில்லை. எவ்வித அதிகாரமுமற்ற 13 வது திருத்தச் சட்டத் திருத்தத்தில் அமைந்த மாகாண சபைகளே ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பை மீறுவதாக ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றத்தில் ஒரு சாராரால் கூறப்பட்டது. அவ்வாறாயின் இந்திய அரசியல் யாப்பு வடிவத்தை கொண்டு வருவதாயின், அது ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சித் தன்மையை மீறுவதாக இருப்பதால் பாராளுமன்றத்தில் 2/3 பங்கு (மூன்றில் இரண்டு பங்கு) பெரும்பான்மையால் நிறைவேற்றப்படவேண்டும் என்பதோடு, சர்வஜன வாக்குரிமைக்கு உட்படுத்தப்படவும் வேண்டும். இத்தகு பிரச்சினைகளைக் காரணங் காட்டி, இந்தியாவின் தூண்டுதலின் பேரில் உருவான 13 வது சட்டத்திருத்தத்திற்கு கீழ்ப்பட்ட அதிகாரங்களை உடைய வடக்கு, கிழக்கு எனப் பிரிந்த மாகாண சபைகளை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. இங்கு நாம் காணக்கூடிய உண்மை என்னவெனில், இந்திய அரசியல் அமைப்புக் கூட தமிழீழ மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கமுடியாது என்பதும், தமிழீழ மக்கள் தங்கள் இறைமையை நிலைநாட்டக்கூடிய சமத்துவத்தைத் தரக்கூடிய, அவர்களது சுயநிர்ணய உரிமையிலான, அடிப்படையிலான ஒரு திட்டத்தைப் பரிசீலிக்க விரும்புகிறார்கள் என்பதே. ஆனால், ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி முறைக்குள்ளான தீர்வை ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களின் பாரதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையைக் காட்டிக் கொடுத்த கொழும்புத் தமிழ்க் குழுக்களையே திருப்தி படுத்தமுடியாத நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற கண் துடைப்பிலேயே தோல்விகண்டு, அம்பலப்பட்டுப் போய் நிற்கிறது. தமிழ் மக்கள் மீதான போரைத் தொடரவும், இக்குழுக்களைத் திருப்திப்படுத்தத் தக்கதான சமாளிப்புக்களைச் செய்யவும் வசதியாக அரசாங்கத்திற்கு உதவுவதற்கு மேலும் எம்மக்களிடையே ஒரு சில துரோகிகளாவது இருந்து கொண்டிருப்பார்கள் என்பதே எமது துரதிஷ்டமாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்து சமாதானத்துக்கான அறிகுறிகள் எதுவும் வரமுடியாது என்ற நிலையில், தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, விடுதலையை விரைவு படுத்த கடுமையான உழைப்பும், அர்ப்பணிப்பும், தற்கொடையும் அவசியமாகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## "சமூகப் புரட்சி என்பது பண்பாட்டு மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக அமையவேண்டும்"

"நான் கலை கலைக்காக அல்லாமல், மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவன்.

...... கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களை சிந்திக்கத் தூண்ட வேண்டும். பழைமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும். மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

...... இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்துக்கு அமைய கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புக்களை சிருஷ்டிக்க வேண்டும். இந்த புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாக அவை அமைய வேண்டும்.

...... சமூகப் புரட்சி என்பது பண்பாட்டு மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புற நிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது அக நிலையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமானது. பழைய முரண்பாடுகள் நிறைந்த சமூக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமூக உறவுகளை கட்டியெழுப்பும்போது இந்த சமூக மாற்றத்திற்கு ஏற்ப மக்களின் மனவுலகிலும் ஒரு புரட்சி நிகழவேண்டும். புதிய சமுதாயத்தில் புதிய உறவுகளைக் கொண்ட, புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒரு புரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். இங்குதான் பண்பாட்டு மறுமலர்ச்சி முக்கியமாகிறது.

...... மிகத் தொன்மை வாய்ந்த நீண்ட வரலாறுடைய எந்தவொரு பண்பாட்டு அம்சங்களிலும், பழைமைவாத, கருத்துக்களும், வேரூன்றியிருப்பது இயல்பு. எமது பண்பாடும் இதற்கு விதி விலக்கல்ல. பண்பாடு என்ற கோலத்தில் எமது சமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை, கருத்தோட்டங்களை நாம் இனம் கண்டு களைதல் அவசியம்."

தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் முத்தமிழ் விழா வாழ்த்துச் செய்தியில் இருந்து தொகுக்கப்பட்டவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# களத்தில் கலைஞர்கள்

ஆனையிறவுப் போர் ஆரம்பித்துவிட்டது. ஒவ்வொரு காலையும் வீரமரணப் பட்டியல் வந்து கொண்டேயிருக்கிறது. சாவை எதிர்பார்த்தபடியேதான் நாம் சண்டைக்குப் போவோம்.

சாவுக்கு முன்னால், சாவுக்குள் நின்றுதான் சண்டை பிடிப்பது என்று எமக்குத் தெரியும்.

ஆனாலும் உள்ளத்தில் ஏக்கத்தின் அலைகள். எத்தனை போராளிகளை இழக்கின்றோமோ? எந்தெந்தப் போராளிகளை கடைசியாகவேனும் காணாமல் விடுகின்றோமோ? அன்றைய இரவு யுத்தம் எமக்கு எப்படி அமைந்ததோ என மனதினில் கேள்விகள் அரித்தபடி இருக்கும். ஆனால் கேள்விகளை மட்டுமே கேட்டுக் கொண்டிருக்க முடியுமா எம்மால்? எல்லோரும் தத்தம் கடமைகளில் இசைந்து போயிருந்தனர்.


இரண்டாம் நாள் வீரமரணப் பட்டியல் வந்து விட்டது. அமைதியான ஏக்கம் எல்லோரையும் கவ்விக்கொள்ள வேலையின் வேகம் குறைகிறது.

ஒருவரிடம் செய்திகள் சொல்லப்படுகின்றன. "கஸ்தூரியின் வீரமரணம்" கேட்டுக்கொண்டிருந்தவரின் பதில்க்கேள்வி 'எந்தக் கஸ்தூரி'? உங்கடை கஸ்தூரிதான். இதயத்தைப் பிய்த்துவிட்ட விடை. எம்மை அப்படியே உறைந்து போக வைக்கின்றது. உண்மையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஜீரணிக்கமுடியாத செய்தி. நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால்., எம்மால் ஜீரணிக்க முடியவில்லை என்றால் உண்மை பொய்யாகிப் போகுமா? ஒவ்வொரு காலையிலும் முற்றத்தில் ஒற்றைக் கால் 'ஜீன்ஸ்'சினை மடித்தபடி திரியும் அவள் பாதப் பதிவுகளை தேடி ஒரு பார்வை படர்கிறது. ஆம் கஸ்தூரி!

அவள் வித்தியாசமானவள். அவளிடம் வித்தியாசமான திறமைகள் இவைதான். அவளை நாங்கள் இழக்க விரும்பாமைக்குக் காரணங்கள்.

1987 செப் 18. நல்லூர் வீதியில் பார்க்கும் இடமெங்கும் மனிதத் தலைகள்தான். மேடையில் திலீபன் அண்ணாவின் உண்ணாவிரதத்தை ஆதரித்து மேடையில் பேச்சுக்கள், கவிதைகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு பெண் கவிக்குரல் உண்மையை உரைக்கின்றது. உள்ளத்தில் இருந்து அது வருகின்றது. திலீபன் அண்ணா மீண்டும் வாசிக்கச் சொல்கின்றார். எல்லாப் போராளிகளும் ஏக்கத்தோடு திலீபன் அண்ணாவைப் பார்க்கின்றார்கள். அத்தனை மக்களும் கண்ணீர் மல்க விம்முகிறார்கள். இது அந்தக் கவிதைக்கு மட்டுமே உரித்தான சக்தி. ஆம் அதற்கு மட்டுமே உண்டு. இந்தக் கவிதைதான் கஸ்தூரியை எமக்கு இனங்காட்டியது.

சின்ன வயதிலேயே கலை உணர்வும், எழுத்துக்களும், உண்மையும் இவள் சொந்தங்களாயின. அப்போது கஸ்தூரிக்குப் பன்னிரெண்டு வயது. கஸ்தூரியின் அக்காவும் இன்னும் ஊர்ப்பிள்ளைகளும் சேர்ந்து நாடகம் ஒன்றை



பாரதியின் பெற்றோர் 'காதோடு சொல்லிவிடு' புத்தக வெளியீட்டு விழாவில் முதலாவது பிரதியைப் பெறுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேடையேற்றுவதற்காகத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாடகத் தயாரிப்பாளரிடம் சென்று கஸ்தூரி சிறுமிக்குரிய கோபத்துடன் அடம்பிடித்துக்கொண்டு நிற்கிறாள். தானும் அதில் நடிக்க வேண்டும், தனக்கும் ஒரு பாத்திரம் வேண்டும் என்று. இந்த ஆவலை மதித்த தயாரிப்பாளர் 'புறோக்கர்' பாத்திரம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கிக் கஸ்தூரிக்குக் கொடுக்கிறார். மிகப்பெரிய மகிழ்ச்சியுடன் நடித்த கஸ்தூரிக்குத்தான் அதில் நடிப்புத் திறமைக்கான முதல் பரிசு கிடைக்கிறது. தொடர்ந்து அவளின் திறமையும் தந்தையின் அனுசரணையும் இணைய 'பூதத்தம்பி....'இப்படிப் பல நாடகங்கள் அவள் திறமையை வெளிப்படுத்தின.

எங்களுடைய போராட்டத்தில் தன்னுடைய பிள்ளையும் ஆயுதப் போராளியாக வரவேண்டும் என்ற ஒரு அப்பாவினால் அனுப்பப்பட்டவள்தான் கஸ்தூரி.

நினைவுகள் பின்னோக்கிச் செல்ல மனதினுள் எங்களுக்குள் ஒவ்வொரு இரவும் நீளக்கூடாதா என்ற எண்ணம். ஆனால் காலம் என்ன எங்கள் கைகளுக்குள்ளேயா கட்டுப்பட்டு இருக்கிறது? தொடர்ந்தும் வீரமரணப்பட்டியல்..... சண்டையின் நான்காம் நாள் பட்டியல் "வானதி வீரமரணம்" அடுத்த அதிர்வு 'எழுதாத கவிதை' எங்கும் எதிரொலிக்கின்றது. வானதி அக்காவைத் தெரிந்தவர்கள், புரிந்தவர்கள், அரவணைத்தவர்கள், அன்பு காட்டியவர்கள் அத்தனை பேரும் தேடுகிறார்கள். எந்த நேரத்திலும் எப்படிக் கோபம் வந்தாலும், அன்பை மட்டுமே அள்ளி வீசுகின்ற 'வானதி ஆச்சி'யின் அந்தக் கந்தன் 'கருணை'ச் சிரிப்பை.

இதுதான் வானதி அக்கா. ஒவ்வொரு சந்தியிலும் விடுதலைப் பூக்களைப் பிய்த்தெறிய ஆதிக்க மந்திகள் குந்தியிருக்கின்றன.

முரளி அண்ணாவினால் வளர்க்கப்பட்டு அவரது அரசியல் பாசறையில் புடம் போடப்பட்ட வானதி அக்காவிடம் தனது மரணத்தின் பின்னால் இயக்கத்திற்குக் கொடுக்குமாறு ஒப்படைக்கப்பட்ட பெறுமதியான சில பொருட்கள் துரோகிகளினால் காட்டிக் கொடுக்கப்பட்டு வானதி அக்காவின் குடும்பம் ஒரு தாக்குதலுக்கு இலக்காகிய பின் கைப்பற்றப்பட்டு விட்டன. ஓரளவுக்கு வானதி அக்காவை இனங்கண்டு கொள்கிறது இந்திய இராணுவம். முகங்களை மட்டுமே பார்க்கத் தெரிந்த இவர்களுக்கு எம் விடுதலையின் வீச்சைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆதிக்க வெறிக்கு அஞ்சியவர்கள் என்றால் நாங்கள் அடிமைகளாகவே இருந்திருப்போமே? இந்த அடிப்படை உண்மைகளைக் கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை.

இந்திய அரசின் நயவஞ்சகத்தால் வீரமரணமடைந்த 12 போராளிகளினதும் முதலாமாண்டு நினைவஞ்சலிக் கூட்டம் தீருவில் மைதானத்தில் நடைபெறுகின்றது. சுற்றிவர வல்லாதிக்கத்தின் துப்பாக்கி வேலிகள். ஆனாலும் எம் மக்கள் துணிந்துவிட்டார்கள். ஓங்கி ஒலிக்கின்றது வானதி அக்காவின் 'விடுதலைக் குரல்'

இன்று மகளிர் படைப் பிரிவைப் பொறுத்த வரையில் இரண்டு கவிஞர்களை, இரண்டு கலைஞர்களை நாங்கள் இழந்து விட்டோம். காட்டின் பயிற்சி முகாம் வாழ்வில் இருந்து ஆனையிறவில் வீரமரணம் வரை அவர்களின் கவிக்குரல்கள் ஒலிக்காத இடமில்லை.

ஆடவும் பாடவும் மட்டும்தான் பெண்கள் என்ற நிலையில் இருந்து ஆயுதம் ஏந்தவும் முடியும் என்ற புதிய வரலாற்றை உலகிற்கு உருவாக்கிக் காட்டியவர்கள் எமது பெண்போராளிகள். துப்பாக்கி தூக்கிவிட்டால் சுடுவதற்கு மட்டும்தான் இவர்களின் இதயங்களில் இடமிருக்கும் என்றவர்கள் முன்னால் இவர்கள் வெடி குண்டுகளாகத் தெரிந்தவர்கள். எங்கள் தேசத்திற்கு எம் மக்களுக்கு எது தேவையோ அதைச் செய்வோம் என்றுணர்ந்தவர்கள். புல்லின் நுனியைக் கண்டு புளகாங்கிதம் அடையும் கலைக்கண்கள் தான் இவர்கள் கண்கள்.

மக்களின் முன்னால் அவர்களை நேசித்து அவர்கள் அழுதால் தாமும் அழுது அவர்கள் சிரித்தால் தாமும் சிரிக்கும் இவர்கள்தான் எதிரிக்கு முன்னால் எரிமலையாகின்றார்கள். சிலாவத்துறை இராணுவ முகாம் சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



கஸ்தூரி



வானதி

www.tamilarangam.net



முப்படைகளுக்கும் ஈடுகொடுத்த படி முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். எமது போராளிகள் விழ விழ விடுதலையின் வேகம் அதிகரிக்கின்றது. வானதி அக்கா தனது குழுவின் சகல போராளிகளையும் இழந்துவிட்டாள். வேதனை தந்த வேகத்தினால் மிகவும் முன்னே சென்றுவிட்டாள். தாக்குதலின் அடுத்த நடவடிக்கையாக கரும் புலி வாகனம் வரப்போவதாக 'வோக்கி அறிவிக்கின்றது' எல்லோரையும் சற்றுப் பின் வந்து காப்பு எடுக்குமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எல்லோரும் நிலை எடுத்து விட்டார்கள். வானதி அக்கா மட்டும் இன்னமும் நிலை எடுக்கவில்லை.

'பிள்ளைகள் எல்லோரும் போய்விட்டார்கள். நான் என்ரை பொயின்ற் பிடிக்காமல் திரும்ப மாட்டேன்.' இது வானதி அக்காவின் பதில் அறிவிப்பு. நிலை எடுக்குமாறு கட்டளைகளையும் பதிலாக 'பிளிஸ் அவுட்' என்ற பதிலையும் மாறிமாறி வோக்கிகள் அறிவித்தன. இறுதியில் மகளிர் படைப்பொறுப்பாளர் 'வானதி நீங்கள் அந்த இடத்திலேயே நில்லுங்கள், நான் அங்கே வருகிறேன்' என்று அறிவிக்கிறார். வானதி அக்காவுக்குத் தெரியும். எங்கள் தலைமைகட்கு தங்கள் உயிர் முக்கியமில்லை. தங்கள் போராளிகள் அநியாயமாகச் சாகக்கூடாது என்பதுதான் முக்கியம் என்பது. உடனே நிலை எடுப்பதாக அறிவிக்கின்றாள். அந்த விடுதலை உணர்வின் முன்னாலும் அவள் தலைமைக்குக் கொடுத்த மரியாதை இது. அதேபோல் எதிரியுடன் எங்கே சண்டை நடந்தாலும் அந்த இடத்தில் வானதி அக்கா ஒரு எரிமலைக் குழம்பு.


பூவினைப் பார்த்துச் சிரிக்கின்ற இவர்கள்தான் எதிரியின் முன்னால் புயலாகிப் போகின்றார்கள். ஆம்! பலாலியில் இருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் மிகவும் கிட்ட நின்று புயலாகத்தான் அவள் துப்பாக்கி மொழியில் பேசிக்கொண்டாள்.

அப்போதுதான், இப்போதும் அவள் கையில் அடையாளம் இருக்கும் அந்த விழுப்புண்ணை ஏற்றாள். எங்கள் போராளிகள் எல்லோரும் எல்லோரிடத்திலும் அதிகமாக அன்பு செலுத்துபவர்கள்.

காட்டிற்குள் நாம் பத்திரிகைகளில் புதினங்களைத் தேட வானதி அக்கா மட்டும் மரண அறிவித்தல்களைப் பார்ப்பாள். ஏனென்றாள் அவள் காட்டுக்குள் வரும்போது அவரது அப்பா கடுமையாக சுகயீனமாக இருந்தார்.

இவர்கள் எல்லோரும் பந்த பாசங்களைப் பலப்படுத்த விரும்பியவர்கள்தான். ஆனால் விடுதலை அடைந்த எம் தேசத்தில் சுதந்திரம் அடைந்த எம் மக்கள் கூட்டத்தினுள் அவற்றைத் தேடத் துடித்தார்கள்.

கானக வாழ்வில் இருந்து நாட்டுக்கு வந்த ஆரம்ப காலமாகும். மாவட்டச் செயலகத்தில் வானதி அக்கா, கஸ்தூரி இன்னும் பல பெண்போராளிகள். கஸ்தூரியின் அப்பா மெதுவாக அருகில் வருகின்றார். சற்று விலகியபடி "என்னப்பா" என்கின்றாள் கஸ்தூரி. "இங்கே அலுவலாக வந்த இடத்தில் நீ நின்றதால் பார்ப்போம் என்றுதான்....." அவரின் பதில் முடியவில்லை. "அப்பா நீங்கள் அடிக்கடி வந்து பார்த்து பாசத்தை வளர்த்துப் போட்டு நாளைக்குச் சண்டை எண்டு வரேக்க என்ரை உடல் கிடைக்குதோ இல்லையோ தெரியாது. அப்படிக் கிடைத்தாலும் அது எப்படி வருகுதோ தெரியாது. ஆனபடியால் அடிக்கடி நீங்கள் என்னை வந்து பார்க்காதேங்கோ"



இந்த மண் மீட்பு போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகின்றார்கள். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறிக்கிறது.

தலைவர் திரு. வே. பிரபாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதில் அன்பாக ஆனால் உறுதியாக வருகின்றது கஸ்தூரியிடமிருந்து. மகளே! நீ என்னைப் புரிந்துகொண்டது இவ்வளவுதானா? அப்படியிருந்தால் உன்னை நான் இயக்கத்திற்கு அனுப்பியிருப்பேனா? என்றபடி நடக்கின்றார். ஆனால் பிள்ளையைப் பார்த்ததைவிட தன் பிள்ளை இயக்கத்தில் வைத்த பற்றுத்தான் அவரை மகிழ்வோடு நடக்க வைத்தது. ஏனென்றால் இந்த விடுதலைப் போரை, இந்த போராட்டத்தை அதிகமாக நேசித்த தந்தையல்லவா அவர். வார்த்தைக்கு வார்த்தை 'எங்கடை சனம் எங்கடை சனம்' என்று உச்சரிக்கும் இவர்கள் இன்று எங்கடை சனத்துக்கை இல்லை. ஆனால் இந்த சனத்தின்ரை நல் வாழ்வுக்காக அவர்கள் ஒரு சுதந்திரமான மக்களாக வாழ்வதற்காக ஒலித்த இவர்களின் குரல்கள் இன்றும் எம் மக்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இவர்களின் கவிதைகள் எம் மக்களை தட்டி எழுப்பியிருக்கின்றன. வானதி அக்கா மாணவர்களுக்குக் கொடுத்த விளக்கங்கள் அவர் குரலின் ஒரு பக்கம்.

கஸ்தூரி 'புலிகளின் குரல்' வானொலியின் தொடர் நாடகமான 'சிந்தாமணி'யில் ஆச்சியாகக் குரல் கொடுத்தாள். கலை பண்பாட்டுப் பிரிவின் தெருக்கூத்தில் போராளியாக தன்னைப் பாத்திரமாக்கினாள். 'களத்தில் காத்தான்' சிந்து நடைக் கூத்தில் இந்தியச் சிப்பாயாக வந்து எமது மக்கள் இந்திய இராணுவத்தால் பட்ட அவலங்களை தெளிவுபடுத்தினாள். எந்தப் பாத்திரத்தை கஸ்தூரிக்குக் கொடுத்தாலும் அந்தப் பாத்திரம் கஸ்தூரியினால் சிறப்புப் பெற்றுத்தான் ஆகவேண்டும். இது கஸ்தூரியின் திறமையின் வெளிப்பாடு. இன்று எம்மக்கள் அந்தப் பாத்திரங்களைப் பேசிக் கொள்கின்றார்கள். அந்தக் குரலை மீண்டும் கேட்க, அந்த முகங்களை மீண்டும் பார்க்கத் துடிக்கிறார்கள்.

அடிமை இருளிலும், அறியாமைக் குகைக்குள்ளேயும் அடைபட்டுக் கொண்டிருக்கும் பெண்களுக்கு விடுதலை வேண்டும். அடுப்படிப் புகைக்குள்ளேயே இருந்து அடையாளம் தெரியாமற் போன பெண்களின் அவல நிலையை இந்தச் சமூகம் அறிய வேண்டும். கணவனை இழந்த கைம்பெண்ணை நிழலாகத் தொடரும் வேதனைகளை இந்த உலகம் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காய் 'தீக்குளிக்கோம், தீயிட்டெரிப்போம்' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றிய அந்தத் திறமை அவளுக்கு மட்டும்தான் உண்டு.

சண்டைக்குச் செல்லும் போது எமக்குள் பெரிய கற்பனை ஒன்று. சண்டை முடிந்துவர கஸ்தூரிக்கு ஒரு அணியினைக் கொடுத்து தேச விடுதலை, சமூக விடுதலைக் கருத்துக்களை விதைக்க இந்த அணி கலைகளுக்கூடாகச் செய்விக்க வேண்டும். ஒரு பூரண விடுதலையை வென்றெடுக்க இந்த 'கலைஞர்'களைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் அது. அனால்.....

எளிமை! இது அவர்களின் குழந்தை.

தனது புதிய சீருடையை இங்கே யாருக்காவது கொடுங்கள் என வைத்துவிட்டுச் சென்ற கஸ்தூரியையும், தன் பிள்ளைகளோடு ஆண்டியாகவே திரிந்த எம் வானதி அக்காவையும் எம் கண்கள் தேடுகின்றன. ●●●

## பந்திக்கு முந்து

விருந்து மண்டபங்களில் சாப்பாட்டுப் பந்தியை நோக்கி விரைந்து "பந்திக்கு முந்து படைக்குப் பிந்து" எனக் கூறிக்கொண்டே சாப்பாட்டுப் பந்தியை நோக்கிப் போவார்கள். மிகச்சிறந்த வீர உணர்வைக் காட்டி நிற்கவேண்டிய இப் பழமொழி இன்று வெறும் 'சாப்பாட்டுப் பந்திக்கு' ஆகிவிட்டது மிகவும் வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

அந்நாளில் அரசர்கள் தம் பாதுகாப்புக்கென படைகளை வைத்திருந்தனர். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என அவை நான்காகும். இவையல்லாத இவற்றிற்கும் மேலான ஒரு படையும் இருந்தது. அதுவே 'பந்திப்படை' ஆகும். இதை அக்காலத்தில் தற்கொலைப்படை என வழங்குவர். பகைவரது நாட்டின் படை வலிமையை அறிந்து வரவும் வலிமைமிக்க பகைவர் வகுத்தபோர் வியூகத்தை உடைப்பதற்கும் இப்படை பயன்படுத்தப்பட்டது.

இப்படையில் பணியாற்றும் வீரர்கட்கு ஆபத்து மிகுதியாகும். போரில் ஈடுபட்டவர் திரும்பி வருவார்கள் என்ற உறுதி இல்லை. பகைவரது படையைத் துளைத்துக் கொண்டு நுழையும் இப்படை வீரர் அங்கேயே கொல்லப்பட்டு மரணமும் அடையலாம். எனவே உயிரைத் தியாகம் செய்யத் தயாராய் இருக்கின்ற வீரம் செறிந்த ஒருவனே இப்படையில் சேரமுடியும்.

எனவே சுத்த வீரனாகிய ஒருவன் இப்படையில் சேரவே விரும்புவான். நால்வகைப் படையில் இருப்பவர்கள் மிகச்சிறந்த வீரர்களே ஆயினும் நால்வகைப் படையில் சேர விரும்புவதிலும் பார்க்க பந்திப்படையில் சேர முந்திக்கொண்டு செல்வார்கள். இந்த அடிப்படையில்தான் "பந்திக்கு முந்து படைக்கு பிந்து" என்ற பழமொழி இந்நாட்டில் பிறந்தது. இத்தகைய வீரப் பழமொழி இன்று வெறும் சாப்பாட்டுப் பந்திக்கு வழங்குவது மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

துவாரகநாதன்- கிளிநொச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அக்கரைகள்

"உருவகம்"

இளந் தேனியொன்று நீலத் திரைக் கடலின் மேலாகப் பறந்து கொண்டிருந்தது. மனிதர்கள் விமானத்தில் ஏறிப் பறக்கிறார்கள். தேனீயோ தானாகப் பறக்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம். ஆம் அந்தத் தேனீக்கும் தன் சொந்த நாட்டுத் தேன் கசக்கிறதாம். அதனால் அது பரதேசம் நோக்கிப் பறக்கிறதாம்.

"ச்சீ..... அது என்ன வாழ்க்கை, எந்த நேரமும் குண்டு விழும். நிலம் குலுங்கும். நாசமறுவாங்களின்ரை குண்டு கக்கிற புகையாலை நாங்கள் மயங்கிச் சரிவோம். இல்லாட்டி மடிஞ்சு சாவோம். இதுதானே சொந்த நாட்டு வாழ்க்கை. இதாலை தானே ஒண்டுக்கும் மசியாத நானே வெளிநாடு எண்டு வெளிக்கிட்டேன்." அகதி என்று ஓடும் தன் ஆற்றாமையை மறைப்பதற்காக தேனீ இப்படிக் கூறிக் கொண்டது.

உண்மையில் தேனீக்கு வெளிநாடு என்றால் உள்ளுக்குள் கொள்ளை ஆசை. "கண்ணைக் கவருங் கட்டடங்களை..... வண்ண வண்ண நிறத்தில் பூத்துக் குலுங்கும், விதம் விதமான செடிகளையெல்லாம் காணவேண்டும். அவற்றினிடையே மற்றவர்களைப் போலத் தானும் பறந்து திரிய வேண்டும்" எனத் தேனீயின் எண்ணக் கனவுகள் எண்ணிலடங்காதவை.

இந்த உசாரிலை பெற்றாரை, உற்றாரை, உறவினரை எல்லாம் உதறிவிட்டுச் செல்வது தேனீக்கொன்றும் பெரிய காரியமாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில், பிரியும் போது மட்டும் அழுது குழறி கவலைப்படுவதாகக் காட்டிக் கொண்டாலும் பின்னர் அது துளியுங் கலங்கவில்லை. அந்தத் தேனீ தேடி வந்த வெளிநாட்டின் வெள்ளை மணல் எல்லை தெளிவாகத் தெரிந்தது. தேனீக்குச் சந்தோசம் பொறுக்கவில்லை: அது அந்தரத்தில் அங்குமிங்கும் ஆனந்த நடனமாடியது உண்டுகளித்த மானிடர் போல்.

ஆனாலுந் தேனீக்கு ஒரு சின்ன ஏமாற்றம். சொந்த நாட்டின் வெள்ளை மணற்கடற்கரைகளில் உறுதியுடன் நிமிர்ந்து நின்று காவல் காக்கும் கரிய நிறப் பனைகளை, அந்த வெளிநாட்டின் வெள்ளை மணற்கரைகளில் காணாததுதான் அதனது ஏமாற்றத்திற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

"பிறந்த இனத்திற்காக சொந்த சுகங்களைத் துறந்த தாலை பனையளாக உயர்ந்து விட்ட எங்கடை வீரர்கள், அடிமைப்பட்டுக் கிடக்கின்ற எங்களின்ரை சொந்த மண்ணில் மட்டுந்தான் பிறக்கிறார்களோ?"

தேனீயின் எண்ணம் இப்படித் திரும்பியபோது அதன் இறுகிய இதயமும் ஒரு கணம் கண்ணீரால் இளகியது.

வெளிநாட்டிற்குள் பிரவேசித்த தேனீ ஆசை தீர அனைத்தையும் கண்டு களித்தது. ஆனால் எதிர்பார்த்ததைவிட எல்லாம் எதிர் மாறாகவே இருந்தன.

"சொந்த நாட்டின் பாசப் பிணைப்புக்களால் கட்டப்பட்ட குடிசைகளில் இருந்து வேறுபட்ட உயிரோட்டமற்ற கட்டடங்களை.... அதனிடையே இயங்கும் இயந்திர மனிதர்களை.... அது கண்டு களித்தது. அல்ல, அல்ல கழித்தது.

"அடடா.... என்ன இது வயிற்றைக் குடைகிறதே" அப்போதுதான் சாப்பிட்டு பல மணி நேரமாகிவிட்டதென்பதை தேனீ உணர்ந்தது.

"எட நானும் ஒருத்தன் வந்திருக்கிறன். ஒருத்தரும் என்னைக் கவனிக்கிறதாக் காணயில்லை." தேனீ கவலைப்பட்டுக் கொண்டது. அதற்குப் பசி. அகோரப் பசி. தேனீக்கு அழுகையே வந்து விடும் போல் இருந்தது.

இங்க நாங்கதான் எங்கடை பாட்டைப் பார்க்கவேணும் போல ஒருத்தரும் உதவி செய்யிறதாக் காணயில்லை" இப்படி எண்ணிக் கொண்ட தேனீ மலர்களை நாடி மரங்களைத் தேடி அங்குமிங்கும் அலைந்தது.

அதோ ஒரு அழகான மலர். தேனீ அதில் ஆனந்தமாய் அமர்ந்து கொண்டது. அடுத்த கணமே அது விரைந்தெழுந்து பறந்தது.

"எட நான் கூடவா ஏமாந்து போனன், எத்தினை காலமா பூக்களோடை நெருங்கிப் பழகின எனக்கே இது 'பிளாஸ்ரிக்' பூவெண்டு தெரியாமல் போச்சுதே."

தேனீ ஏமாற்றத்துடன் உயர எழுந்து பறந்தது. நிஜமான இயற்கையைத் தேடி, சொந்த நாட்டில் உள்ளது போல் மகரந்த வாசம் வீசும் பூக்களை நாடி பறந்தது.... பறந்தது.

இறக்கைகள் ஓ(டி)யும் வரை பறந்து கொண்டேயிருந்தது.

அங்கே அந்தச் சதுப்பு நிலத்தில்.... தேனீக்கு ஒரே ஆச்சரியம். அது தேடி வந்த சொர்க்கம் வெளிநாட்டில் இப்படியொரு ஓரத்தில் இருக்குமென்பதை அது நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அந்தச் சதுப்பு நிலத்தில் ஆகா! என்ன அழகான தாவரம். வண்ண... வண்ண... நிறத்தில் மின்னும் அந்தப் பகுதி, தேனீ மயங்கியது. பிறகு மெல்ல..... மெல்ல.... கீழே இறங்கியது.

கவர்ச்சியினால் தேனீயின் உணர்ச்சிகள் மரத்துப் போயின.

-விஜயராகவன்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சதுப்பு நிலத்தின் வெடுக்கு நாற்றங்கூட அதன் நாசியைப் பாதிக்கவில்லை.

தாவரத்தின் அந்தப் பகுதியை அணுகிய தேனீ மெல்ல அதில் அமர்ந்தது.

"ஆ.... ஆ..... ஐயோ"

சிலந்தியின் கால்களைப் போல ஏதோ ஒன்று தேனீயைப் பிடித்து உள் நோக்கி இழுத்தது. தேனீ நிதானமாவதற்கு முன்னரே அது உள்ளுக்குள் தள்ளப்பட்டுவிட்டது. ஆம் அந்த வெளிநாட்டுப் பொறிக்குள் தேனீ நன்றாக அகப்பட்டுக் கொண்டது.

> "ச்சீ... அது என்ன வாழ்க்கை, எந்த நேரமும் குண்டு விழும். நிலம் குலுங்கும். நாசமறுவாங்களின்ரை குண்டுகக்கிற புகையாலை நாங்கள் மயங்கிச் சரிவோம். இல்லாட்டி மடிஞ்சு சாவோம். இதுதானே சொந்த நாட்டு வாழ்க்கை.

எவ்வளவு முயன்று பார்த்தும் அதனால் வெளியே வர முடியவில்லை. உடம்பெங்கும் யாரோ கட்டுப் போட்டுவிட்ட மாதிரியிருந்தது. பாவம் தேனீ. கண் கெட்ட பின்னால் சூரிய நமஸ்காரம் பண்ண முடியுமா என்ன?

சிறிது நேரத்தில் அந்த ஊனுண்ணித் தாவரத்தில் சுரக்கப்பட்ட சுரப்புக்களினால் தேனி கொல்லப்பட்டு, அதன் சில பகுதிகள் உறிஞ்சப்பட்டது. மீதிக்கழிவுகள் வெளித் தள்ளப்பட்டு வேற்று மண்ணில் விழுந்து சிதைந்தது. ●●●



# அயோத்திப் பப்ரி மசூதி தகர்ப்பு

— வளவன் —

அயோத்தியாவில், பப்ரி மஸ்ஜிட் என்ற முஸ்லீம் பள்ளி வாசல், சென்ற மார்கழி 6ம் திகதி இந்து அடிப்படைவாதிகளால் தகர்த்து அழிக்கப்பட்ட சம்பவமானது, இந்தியா எப்பாதையில் செல்லத் தொடங்கியுள்ளது என்பதை தெளிவாக வெளிப்படுத்துவதாக உள்ளது. இப்பாதையின் தளமாக இந்து அடிப்படைவாதமே அமைந்துள்ளது. இத்தத்துவமே இந்தியாவின் வளர்ச்சிக்கு உறுதி சேர்ப்பது, இந்து தேசியவாதமே (Hindu Nation) இந்திய மக்களை ஒன்றிணைக்கும் ஆதார சுருதி என்ற நம்பிக்கையின் பேரில் பெரும் அலையாக இந்து அடிப்படைவாதம் வளர்க்கப்படவுள்ளது. இவ்வளர்ச்சிப் போக்கில், சுதந்திரப் போராட்டத் தலைவர்களாலும், இந்திய அரசியல் யாப்பினாலும் கட்டிவளர்க்கப்பட்ட மத சார்பின்மை, சகல மதங்களுக்கும் சமத்துவம் என்ற விடயம் அடிபட்டுப் போய்விடும்.

இந்து தேசியவாதம் என்ற கொள்கை, இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் உண்டென்பதை மறுப்பதாக உள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியை தன்னுள் அடக்கி, அழிப்பதாக உள்ளது. மேலும், இந்து மதத்தினுள், இந்தியாவில் தோன்றிய சகல மதங்களையும் அடக்கும் செய்கையானது, சகல மதங்களினதும் சமத்துவத்தைக் காட்டாமல், ஏதோ ஒன்றின் மேலாதிக்கத்தையே மறைமுகமாகத் திணிப்பதாக உள்ளது. அதனை ஆழமாக ஆராய முற்படும்போதே

பாபர் மசூதியில்: பாதுகாப்பு வளையத்தை உடைத்து உள்ளே செல்லும் கரசேவகர்கள்.




www.tamilarangam.net



இந்த இந்துத்துவக் கொள்கையின் மூலம் வெளிப்படுகின்றது.

நாடோடிகளாகிய ஆரியர்களின் கடவுளாகிய விஷ்ணுவும், அவரது அவதாரமாகக் கூறப்படும் புராணக் கதாநாயகன் ராமனும், இந்துவாதிகள் அமைக்க எண்ணும் ராம ராட்சியமும் பழமையையும், புதியதையும், அரசியலையும், மதத்தையும், ஆதிக்கத்தையும், அடக்கத்தையும் ஒரு சேரப் பிணைப்பதாக உள்ளன. பரத கண்டத்தினுள் கி.மு. 2500 இல் நுழைந்த ஆரியரின் வருகைக்கும், கி.மு. 1100 ஆண்டளவில் இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஆரிய-திராவிட (இராம -இராவண) யுத்தத்திற்கும், 20ம் நூற்றாண்டின் முடிவிற்குள் அமைக்க விளையும் ராம இராட்சியத்திற்கும் ஒரு நீண்ட தொடர்ச்சி இருப்பதாக உணரலாம். சகல மதங்களையும் உள்ளடக்கி சமரசம் காண்பது என்பது வேறு. ஆனால் அதனைச் சாட்டாக்கி, அரசியல் அதிகாரத்தை தம் கையில் வைத்து மேலாதிக்கம் செலுத்துவது என்பது வேறு. இது குறித்தே, தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் நாம் அச்சம் கொள்ள வேண்டியுள்ளது. ஆரிய சாதிய அமைப்பும், சநாதன தர்மமும், மனுநீதியும், இந்து அடிப்படைவாதம் என்ற கொள்கையின் பின்னணியில், எமக்குள் பிரிவினையை வளர்க்கவும், எமது விடுதலைக்கு எதிராகவும் செயற்படுமாயின் அது குறித்து நாம் எச்சரிக்கை அடைதல் வேண்டும். வர்ணாச்சிரமத்தையும், சாதியத்தையும் ஆதாரமாகக் கொண்ட இந்த இந்து அடிப்படைவாதம், சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் அடிப்படையாகக் கொண்ட எமது போராட்டத்துடன் முரண்படுவது இயற்கை. இவ்விடயத்தில், தமிழ் மக்கள், மதத்தையும், அரசியலையும் பிரித்துப் பார்ப்பது அவசியமாகின்றது. பாரதிதாசன் கூறுவதுபோல், "அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்" இராவணன், மீன்கொடியை ஏந்திய பாண்டிய மன்னன் என்பதும்,



தாக்குதலுக்குள்ளான பாபர் மசூதி

அவன் சிவவழிபாட்டை உடையவனாய் இருந்தான் என்பதும், வீணை (யாழ்) வாசித்து மகிழும் இசைப்பிரியன் என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இந்து அடிப்படைவாதம் என்பதன் அர்த்தத்தை இப்போது நாம் உணர்ந்திருப்போம். இக் கொள்கை, உள்நாட்டு மதங்களை உள்வாங்கியது போல், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மதங்களை அடிபணியவைக்கும் தீவிர செயற்பாட்டில் தொடர்ந்து ஈடுபடும். எனவே ராமர் கோயிலை இடித்து அயோத்தியில், கி.பி. 1528ல் பாபர் என்ற முஸ்லீம் படையெடுப்பாளன் கட்டிய பப்ரி மஸ்ஜிட் போன்ற ஏனைய அந்நிய கோவில்களின் அழிப்பு மீண்டும் தொடர்ந்து அரங்கேறும். 450 ஆண்டுகால பப்ரி மசூதியை புதிதாகக் கட்டமுடியாது. அது அழிந்தது அழிந்தது தான். தென்னிந்தியரான பிரதமர் நரசிம்மராவ் இந்நெருக்கடியில் இருந்து தப்பிப் பிழைத்து விடலாம். ஆயினும், பட்டவர்த்தனமாகத் தெரியும் ஆரிய இந்தியா என்ற போக்கு, காங்கிரஸ் கட்சியை முழுதாக மாற்றிவிடும். அல்லது பாரதீய ஜனதாவின் ஆட்சிக்கு வழிவகுத்துவிடும். இவ்வளர்ச்சி, தமிழ் நாட்டில், தலைஎடுக்கத் துடிக்கும் பார்ப்பனீய ஆதிக்கத்துடன் கைகோர்த்துக் கொள்ளவும், தமிழ் தேசியத்தை அழிக்கவும் முனையும். அ.தி.மு.க வுடன் பாரதிய ஜனதாக் கட்சி கூட்டுச்சேர முனைவதும், சுப்பிரமணிய சுவாமியின் அதிரடி நடவடிக்கைகளும் இதனையே காட்டுகின்றன. இந்துத்துவம் என்ற பெயரில் முனைப்பெடுக்கும் ஆரிய ஆதிக்கம், தற்கால அரசியலில், இந்தியாவின் ஒரு பகுதியை ஒருங்கிணைத்து, உறுதியாக்கி இந்துத் தேசியத்தின் அடிப்படையில் வளர்ச்சி அடைய முடியும் என எண்ணுகின்றது. இந்துத் தேசிய முனைப்போடு, வளர்ச்சியடைய எழுச்சிகொள்ளும் தமிழ்த் தேசியத்தை சமரசம் காணச் செய்யும் முயற்சி கடினமானதொன்றாகவே இருக்கும். ●●●

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது பரந்தமனப் போக்குடன் பழந்தமிழர் வாழ்வு அமைந்திருந்ததென்பதற்குச் சான்று. வீரத்திலும், அறத்திலும், அரசாட்சியிலும், கலை ஈடுபாடுகளிலும் தமிழர்கள் மேம்பட்டு விளங்கினார்கள். பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்தி வாழ்ந்தார்கள். இவையெலாம் பழந்தமிழர் இலக்கியங்கள் விளம்புவனவாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துளிர்க்கும் ஒரு புது வாழ்வு



இது ஒரு சிறு தொழிலகம். சிங்கள இராணுவத்தினரின் வன் முறையினால் தங்கள் கணவனை இழந்த பெண்களும்; தங்கள் கணவன் உடல் ஊனமுற்ற நிலையில் உள்ளவர்களும்; பெற்றோரை இழந்தவர்களும் என இங்கு இருபதுக்கு மேற்பட்ட பெண்கள் தங்கள் வருமானத்துக்காக வேலை புரிகின்றனர். இத்தொழிலகம் இவர்கள் வாழ்க்கைக்குத்

தேவையான வருமானத்துக்கு வழிவகு
தோடு, அவர்களின் சமூக மேம்பாட்டு விடய
களிலும் அக்கறை கொண்டு இயங்குகின்ற
இவர்கள் வன்முறையினால் பாதிக்கப்ப
போதிலும், அந்தப் பாதிப்பு அவர்கள் மன
களை ஊனமாக்கி விட துணிந்ததில்
பெரும் கொடிய புயல் அந்தக் கணங்களி
அவர்கள் வாழ்க்கையில் வீசியபோதும் அவர்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





விடுதலைப் புலிகளின் வழிகாட்டலில்
இயங்கிவரும் தொழிலகம்



அதை எதிர்த்து எரிமலையாய், புயலாய் மாறி எதிர் கொள்ளும் புது வாழ்வின் தொடக்கத்தில் கால்களை ஊன்றி நிற்கிறார்கள். தேசத்தின் பணி, அவர்கள் சிந்தையில் ஒரு தீக்குச்சியின் உரசலாய். அவர்கள் கரங்களுக்கு வலிமையுண்டு, அவர்கள் மனங்களில் உறுதியுண்டு. துணிச்சலான, முயற்சி நிறைந்த வாழ்க்கையை அவர்கள் எதிர்கொள்ள கற்றுக்கொண்டு தங்கள் தேசத்துக்கும், தாம் வாழும் சமூகத்துக்கும், பெரும் பயன் விளைவிப்பவர்களாக தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் கொண்ட விழ விழ எழுகின்ற போர்க் குணம் எங்கும் பரவி இருள் கலைக்கின்றது. தமிழீழத்தில் இது போன்ற நான்கு தொழிலகங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கோர் சுடர் விளக்காய் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நம்பிக்கையூட்டும் புது வாழ்வுக்குள்

**1990** போர் ஆரம்பித்த காலத்தில் தென் தமிழீழத்திலிருந்து விரட்டப்பட்ட மக்கள், பல மைல்கள் நடந்து, வட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் தஞ்சமடைந்தனர். கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களிலும், தமிழ்மக்கள், அகதிமுகாம்களிலும் வாழவேண்டிய நிலை ஏற்றப்பட்டது.

அகதிமுகாம் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமானது. சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டமையும், முகாம் வாழ்க்கையும், வேலை வாய்ப்பின்மையும், வேகமாகப் பரவிய தொற்றுநோய்களும், இதனால் குழந்தைகள் அதிகமாக இறக்க நேரிட்டதும், மக்களுடைய மனோநிலையை கடுமையாகப் பாதித்தது.

தமிழீழ தேசத்தின் பொருளாதார வளங்களும், மனித வலுக்களும் சீரழிந்து கொண்டிருந்தன. இந்த மக்கள் எதிரியின் சதியால் தமக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தான நிலையை முன்னுணர்ந்து உழைத்து வாழ்வதற்காக தம்மை தயார்படுத்திக்கொண்டார்கள்.

எதிரியின் திட்டங்களை தகர்த்தெறிந்து இந்த மக்களுக்கு என்று ஓர் பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தவும், வாழ்வின் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்தவும், 'சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டம்' ஒன்று விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களும், இடம்பெயர்ந்தவர்களும் பயன் பெறக்கூடியதாக அமைந்தது. இத்திட்டத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு கொத்தணிக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இக் கொத்தணிக் கிராமங்களில் பண்பாட்டு மேம்பாட்டுக் கோலங்களுடன் கூடிய சமூக முன்னேற்றத் திட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

வேதனை நிறைந்த அகதிமுகாம் வாழ்க்கையிலிருந்து நகர்ந்து, குடியிருப்புத் திட்டங்களில் குடியிருத்தப்பட்டு, நம்பிக்கையூட்டக்கூடிய புதிய வாழ்க்கைக்குள் மக்கள் அடியெடுத்து வைத்திருக்கிறார்கள். இழப்புக்களால் இந்த மக்கள் சோர்வடையவில்லை உரம்பெற்று உறுதியோடு இந்த மண்ணில் கால் பதித்து, நிமிர்ந்து நிற்கிறார்கள்; தமது தேசத்தின் மீட்புக்காக, அடுத்த சந்ததியினரின் வாழ்வுக்காக வாழவும், போராடவும் தயாராயிருக்கிறார்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மானம் ஒன்றே பெரிதென





குடதிசை வானில் குங்குமச் சிதறல்கள். செந்தழலில் உருகும் தங்கக் கிண்ணமாய் கரைந்து கொண்டிருந்தான் கதிரவன். பதைபதைக்கும் வெயிலில் பிரயாணஞ்செய்த களைப்பை மாலைத் தென்றல் வருடிக் கொடுக்க இருட்டுவதற்கு முன்பாகச் சிங்கக் கோட்டையை அடைந்துவிடவேண்டு என்ற முடிவில் விரைந்து சென்ற புரவியை மேலும் விரட்டிக்கொண்டிருந்தான். அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இளைஞன். எசமான விசுவாசம் கொண்ட அந்த அசுவம் தீயை மிதித்துவிட்டது போன்று விரைந்து பாய்ந்து கொண்டிருந்தது.

ஓங்கி வளர்ந்த நாவல்களும், புளிகளும், ஆலும் அடர்ந்து நின்ற நெடுஞ்சாலையில் இருந்து அரண்மனை நோக்கிச் செல்லும் இராச வீதியில் திரும்பியதும் கோட்டை வாசலில் கம்பீரமாகப் பறக்கும் நந்திக்கொடி அவனை அழைத்துக் கொண்டிருப்பது போன்ற உற்சாகம் பிறந்தது. சாயரட்சைப் பூசைக்காக கோயில்களில் கண்டாமணிகள் ஒலிக்க ஆரம்பித்திருந்தன. அரண்மனை மேல் மாடங்களில் அகல் விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்தன. கோட்டைத் தலைவனின் கூர்மையான விழிகள் புரவியில் வருபவனை அடையாளங் கண்டுகொண்டன. அடுத்த வினாடி கோட்டையின் மேல் இருந்த முரசு முழங்கியது. மன்னருக்கும், அரசப் பிரதானிகளுக்கும் செய்தி பறந்தது.

சிங்கை நகர் அரண்மனை சுறுசுறுப்படைந்தது. முக்கிய அரசப்பிரதானிகள், அதிதிகள் வந்தால்தான் கோட்டைத் தலைவன் முரசறைந்து செய்தி தெரிவிப்பான். ஒரு மாதத்திற்கு முன்பு நாட்டு நிலவரங்களை அறிந்துவரப் புறப்பட்ட இளஞ்சூரியன் வந்திருக்கிறான் என்று ஊகித்துக்கொண்ட சிங்கைச் சக்கரவர்த்தி கனகசூரியன் தன் இளவலை வரவேற்க ஆயத்தமாகி அரண்மனை முகப்புக்கு வந்து நின்றான்.

* * *

சிங்கைநகர்க் கோட்டையும், மாடமாளிகைகளும் பழமை வாய்ந்தவை ஆயினும், காலத்திற்குக் காலம் புனர் நிர்மாணம் செய்து வந்தமையினால் புதுப்பொலிவோடு விளங்கின. விசயகூழங்கைச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் ஒன்பதாவது பரம்பரையைச் சேர்ந்த கனகசூரியன் ஆட்சிபீடம் ஏறிய பின்புதான் தமிழரசு மீளவும் ஈழத்தின் வடபுலத்தில் மிக உன்னத நிலையை எய்தியிருந்தது.

சிங்கை சீரும், சிறப்பும் மிக்க அரசாக செழிப்புடன் விளங்கியது. குறுநில மன்னர்களுக்கு ஒப்பான கிராம இராட்சியத் தலைவர்கள் சிங்கை அரசுக்குத் திறை செலுத்தி வந்தனர். கிராம இராட்சியங்கள் விவசாயத்தில் செழிப்புடன் திகழ்ந்தன.

மன்னார், சிலாவத்துறை முதலிய இடங்களில் முத்துக்குளிப்பு நடைபெற்றது. முத்து வணிகம் சிறப்பாக நடைபெற்றதால் பிறதேச வணிகர்கள் இங்கே வந்து வணிகம் செய்யமுற்பட்டனர். கடற்கொள்ளைக்காரர்களின் கெடுபிடிகளைக் கண்காணிப்பதற்காகவும், கடலில் வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவும் திறமை வாய்ந்த கடற்படையும் இருந்தது. நூற்றுக்கு மேற்பட்ட நாவாய்கள் (போர்க்கலங்கள்) கப்பற்துறை, சம்புக்கோளம், மன்னார், சிலாவத்துறை ஆகிய துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

சிங்கமாப்பாணனைத் தளபதியாகக் கொண்ட தரைப்படையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிக வலிமை பொருந்தியிருந்தது. ஈழத்தின் வட கிழக்குப் பிரதேசங்கள் யாவும் சிங்கையின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் புத்தளம், நீர்கொழும்பு, வத்தளை ஆகிய இடங்களில் அரபு வணிகர்களோடு வர்த்தகம் செய்யும் உரிமையும் கொண்டிருந்தனர். சிங்கையின் வளர்ச்சியும், செழிப்பும் சிங்கள ஆட்சியாளர்களுக்குள் கலகத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

கண்டியைச் சேர்ந்தவனும், செயவர்த்தனபுரத்தில் பெரும் மாளிகை அமைத்து அரபு வணிகர்களோடு வர்த்தகம் செய்து வந்தவனுமான சிங்களத் தலைவனான அழகக்கோனாரா நலிவடைந்த சிங்கள ஆட்சியாளர்களை ஒழித்துவிட்டு அரியணை ஏறும் ஆசையில் இருந்தான். ஆனாலும் சிங்கையின் ஆட்சி அவனுக்கு பெரும் அச்சுறுத்தலைக் கொடுத்தது. இரகசியமாகச் சதிசெய்து, வரி வசூலிக்கச் சென்ற சிங்கை அதிகாரிகள் சிலரைக் கடத்திச் சென்று தூக்கிலிட்டான். நாட்டு நடப்புகளை அறியச்சென்ற சிங்கைச் சக்கரவர்த்தியின் இளவலான இளஞ்சூரியன் ஒற்றர்கள் மூலம் செய்தியறிந்தே அவசரமாக அரண்மனை திரும்பியிருந்தான்.

* * *

அரண்மனை வாசலில் அவனை வரவேற்க மன்னரும், மகாராணியும், வேறுபலரும் கூடியிருந்தனர். அதுவரையும் அடக்கி வைத்திருந்த அவேச உணர்வுகள் வெடித்துச்சிதற "அண்ணா" என்று ஓடிச்சென்று மன்னரைத் தழுவிக் கொண்டான் இளஞ்சூரியன்.

பாசச் சூழலில் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சிந்தியதைப் பார்த்து உள்ளம் பூரித்த மகாராணியின் விழிகளிலும் நீர் முத்துக்கள்.

"பிரயாணக் களைப்பு நீங்க நீராடிவிட்டு வாருங்கள் இளவரசே" என்றாள் மகாராணி.

"அண்ணி முக்கியமாக ஒரு விடயம் பற்றி கூறிவிட்டே சிரமபரிகாரம். உள்ளே வாருங்கள் அண்ணா" என்று நடந்தான் இளஞ்சூரியன்.

"தம்பி எதுவானாலும் காலையில் பேசலாம். நீ ஒய்வெடுத்துக் கொள்ளப்பா" என்றார் மன்னர்.

'இதுவரை காலமும் நாம் ஓய்வெடுத்துக் கொண்டுதானிருக்கிறோம். இனிமேல் நாம் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் எமது அரசுக்கு எதிரான சதிக்கூட்டம் விரைந்து முன்னேற ஆரம்பித்துவிடும்" என்று கூறி நடந்தவற்றை விளக்கினான்.

"பதட்டப்படாதே தம்பி நாளை மந்திராலோசனைச் சபையில் இது பற்றி ஆராய்வோம்." என்று ஆறுதல் கூறி அவனை நீராட அனுப்பினார் மன்னர்.

இளஞ்சூரியன் நீராடச் சென்று விட்டானாயினும் அவன் கூறிவிட்டுச்சென்ற விடயம் மன்னரின் மனதில் சுடர்விட்டெரியும் தீயாய், சுவாலைவிட்டெரிய ஆரம்பித்திருந்தது.

## பதினாறு வகைப் படைகள்

**ப**ண்டைத் தமிழர் வாழ்வியலைக் கருப்பொருளாகக் கொண்டு புனையப்பட்ட இலக்கியங்கள் தமிழர் படையணி போர்க்களத்தில் பயன்படுத்திய பலவகையான போர்முறைகளைப் பற்றி எடுத்துக்கூறியுள்ளன. புறத்திணைக்குரிய பொருள் மரபை விளக்க வந்த புலவர்கள் போர்க்களத்தில் ஈடுபட்ட படையணிகளின் பதினாறு வகைகளைப் பற்றிக் கூறியுள்ளனர். அவை பின்வருமாறு

1. மூலப்படை
2. உரிமைப்படை
3. துணைப்படை
4. அமையப்படை
5. வான்படை
6. பயிற்சிப்படை
7. பயிச்சியில்படை
8. குழுப்படை
9. தனிப்படை
10. கருவிபெறுபடை
11. தற்கருவிப்படை
12. ஊர்திப்படை
13. தன்னூர்திப்படை
14. கானப்படை
15. பகையிடுபடை
16. கூலிப்படை

மறுநாட் காலையில் மன்னர் தலைமையில் கூடிய மந்திராலோசனைச் சபையில் தளபதி சிங்கமாப்பாணனும், கடற்படைத் தளபதி வீரகேசரியும் இளஞ்சூரியன் கருத்தை ஆதரித்தது மட்டுமன்றி, உடனடியாகப் படை எடுக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய உற்சாகம் மன்னரின் ஆர்வத்தைத் தூண்டவே, முதலமைச்சரான வடுகநாதரைப் பார்த்து "அமைச்சரே!" என்றார் இளநகையுடன்.

"அரசே"

தாங்கள் இதுவரை எதுவும் கூறாதிருப்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. " என்றார்.

"மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்பார்கள். தவிர தளபதிகள், இளவரசர், மன்னர் எல்லோரும் இளைஞர்கள். நானோ வயோதிபன். எம்மவர்க்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நாம் நல்லதோர் படிப்பினையைப் படிப்பிக்க வேண்டும். சொல்வதைச் செயலில் காட்டும் தங்கள் முன் வெறும் வார்த்தைகளால் தழுரைக்க வெக்கப்பட்டே மௌனம் சாதிக்கிறேன்" என்றார்.

"அமைச்சரே! வீரத்தின் துணைவன் விவேகம். தங்கள் மதிநுட்பமே இன்று சிங்கையின் ஆட்சி கண்டு எல்லோரும் மலைத்து நிற்கின்றனர். தென்னிந்திய சாம்ராட்சியங்கள் கூட எம்முடன் உறவு கொண்டாடத் துடிக்கின்றனர். இதற்குக் காரணம் தங்கள் விவேகம்தான்" என்று சிரித்தார்.

"அண்ணா! நாம் நாடு பிடிக்க ஆசைப்பட்டுப் போராடப் புறப்படவில்லை. ஆக்கிரமிப்புக்காக அடுத்தவனைக் கெடுக்கப் புறப்படவில்லை. எமது அரசியல் அதிகாரிகள் என்று தெரிந்து கொண்டே தூக்கிலிட்ட, அந்தக் கயவர்களுடைய கொட்டத்தை அடக்கி எமது மானத்தைக் காக்கச் செய்யும் போருக்கே புறப்படுகின்றோம். உயிரைவிட எமக்கு மானம்தான் பெரிது என்பதை நிரூபிக்கப் புறப்படுகின்றோம்" என்றான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்றே போர் முரசு அதிர்ந்தது. சிங்கையிலும், சுற்றுவட்டாரமெங்கும் போர்ச்செய்தி பரவியது. போர் வீரர்களுக்கு உற்சாகம். வேலும், வாளும், கேடயமும் கொண்ட கூட்டம் ஒரு புறமும், வில்லும் அம்பும் ஏந்தியோர் ஒரு புறம் விளையாட்டுக்குச் செல்ல விருக்கும் சிறுவர்கள் போலக் குதூகலமாகத் துள்ளியது காளையர் கூட்டம். சுருங்கக்கூறின் சிங்கைநகரே போர்க்கோலம் பூண்டிருந்தது.

கதிரவன் வரவுக்காக கீழ் வானில் ஆரார்த்தி கரைக்கப்பட்டிருந்தது. 'கப்பற்துறை' எனும் துறைமுக வட்டாரத்தில் போர் வீரர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. நாவாய்கள் எல்லாம் அணிவகுத்து நின்றன. வீரகேசரி போர் வீரர்களுக்கு உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருந்தான்.

அதேவேளையில் சிங்கக் கோட்டையில் போர்முரசு அதிர்ந்து கொண்டிருந்தது. தளபதி சிங்கமாப்பாணன், இளஞ்சூரியன் இருவர் தலைமையிலும் புரவிப்படை அணிவகுத்து நின்றது. அரண்மனை மாடத்தில் மகாராணி உட்பட பெண்மணிகள் பலர் படை அணிவகுப்பையும், போர்வீரர்களின் உற்சாகத்தையும் பார்த்து மகிழ்ச்சிப் பிரவாகத்தில் திளைத்து நின்றனர். எனினும் உள்மனது உருகியது. பாசமல்லவா?

"அண்ணா விடை கொடுங்கள் வெற்றியோடு திரும்புகின்றோம்" என்று இளஞ்சூரியன் குரல் கொடுத்தான்.

"தம்பி! உங்களையெல்லாம் பார்க்கும் போது நானும் வரவேண்டும் போல உள்ளம் துடிக்கின்றது" என்றார் மன்னர்.

"அரசே! இது ஒரு சாதாரண போர். நாங்கள் இருக்கும் போது தாங்கள் வரவேண்டுமா? தாங்கள் வகுத்த திட்டப்படியே படை நகர்கின்றது. வெற்றிச் செய்தியை விரைந்து அனுப்புகின்றோம்" என்றார் தளபதி சிங்கமாப்பாணன்.

"வெற்றியோடு வாருங்கள்" என்று மன்னர் விடைகூற; ஊது கொம்புகள் ஒலிக்க, போர்ப்பறை அதிர்ந்தது. மேல் மாடத்திலிருந்து மகாராணியும், பெண்களும், முதியோரும் மலர் தூவி வாழ்த்தப் படை நகர ஆரம்பித்தது.

குதிரைகளின் கனைப்பும், போர்க்கருவிகள் கேடணங்களுடன் தட்டுப்பட்டதால் ஏற்பட்ட ஒலியும் சேர்ந்து சங்கீதமிசைக்க புரவிகளின் நகர்வினால் புழுதிப் படலம் மேகக்கூட்டம் போல கிளம்பி வானத்தில் ஓர் மேகக் கூரை அமைத்தன.

காலைக் கதிரவன் ஒளிபட்டுத் தளதளக்கும் கடல்நீரைக் கிழித்துக் கொண்டே நாவாய்கள் அணிவகுத்துச் சென்றன. பாய்மரத்தின் உச்சியில் பட்டொளி வீசிப் பறக்கும் நந்திக் கொடிகளுக்கு வெற்றிச் சாமரம் வீசுவது போன்று கடலலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன.

மன்னர் கனகசூரியர் சிறந்த கல்விமான். பல்வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். ஒரு முறை மலையாளத் துறைமுகத்தில் தங்கியிருந்தபோது சீன யாத்திரிகரான 'இபன்பத்துதா' மன்னரைச் சந்தித்தார். சீன யாத்திரிகருக்குத் தமிழ் மொழியில் அதிகம் பேசமுடியாது போகவே அவருக்குத் தெரிந்த பாரசீக மொழியில் மன்னர் உரையாடியதும் மகிழ்ந்து போய், மன்னர் கூடவே வந்து சிங்கை அரண்மனையில் விருந்தினராகத் தங்கிச்சென்றார். விசயநகர மன்னர் கனகசூரியனின் நெருங்கிய நண்பராகையினால் போர்ச்செய்தி கேட்டதும் தூதுவன் ஒருவனை சிங்கைக்கு அனுப்பியிருந்தார். சிங்கை அரசின் வலிமை தெரிந்தும் வலிந்து உதவ வந்த நண்பனுக்கு "விரைவில் வெற்றிச்செய்தி அனுப்புகிறேன். தங்கள் நல்ல நட்புள்ளத்திற்கும் நன்றி தெரிவிக்கின்றேன்" என்று தூதுவனிடம் பதிலளித்திருந்தார். அதேசமயம் அரசின் ஆலோசனை அறைக்கும் முதலமைச்சர் வடுக நாகர் புன்முறுவலோடு நுழைந்தார்.

"வாருங்கள் அமைச்சரே. புன்னகை புரிகின்றீர்கள். புதினம் ஏதாவது ....?" என்று அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

"அரசே! தாங்கள் வகுத்த திட்டப்படியே படைகள் சென்று கொண்டிருக்கின்றன. சிலாவத்

## சீசரின் துணிச்சல்!

யூலியஸ்சீசர் கொல்லப்படுவதற்கு முதல் நாளிரவு சீசரின் மனைவி தீய கனவுகள் கண்டாளாம். அடுத்தநாள் காலை சீசர் தன்னை கௌரவிப்பதற்காக நடந்த விழா ஒன்றில் பங்கேற்பதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அச்சம் கொண்ட அவர் மனைவி தான் கண்ட கனவினைக்கூறி அவர் செல்வதைத் தடுத்தாள். அப்போது சீசர் தன் மனைவியை நோக்கி கூறுகிறான்.

"அஞ்சினர்க்குச் சதமரணமஞ்சாத நெஞ்சத்
தாடவனுக்கொருமரண மவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவரென்றறிந்திருந்தும் சாதலுக்கு நடங்குந்
துன்மதி மூடரைக்கண்டாற் புன்னகை செய்பவன் யான்
இன்னலும் யானும் பிறந்ததொரு தினத்திலறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான் மூத்தோனெனது
பின்வருவதின்னலெனப்பகை மன்னரறிவார்"

சேக்ஸ்பியரின் கவிதையை மொழிபெயர்த்தவர் உயர் திரு. விபுலானந்தர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தென்றலும் தமிழரும்

தென்றல் என்றால் தனியே அதற்கொரு சுகந்தமுண்டு. வசந்த காலத்தில் தெற்கிலிருந்து அசைந்து வரும் தென்றலின் சுகத்தை நன்றாக அறிந்தவர் தமிழர். வடக்கிலிருந்து வரும் குளிர்காற்றை வாடை என்றனர். தெற்கிலிருந்து வரும் இளங்காற்றைத் தென்றல் என்றனர். வாடை என்ற சொல்லில் வன்மையுண்டு. தென்றல் என்ற சொல்லில் மென்மையுண்டு. ரா. பி. சேதுப்பிள்ளை

துறையில் நாவாய்கள் நங்கூரமிட்டிருக்க வீரகேசரி கரையோரமாகப் படையை நடத்திச்செல்கின்றார். இளஞ்சூரியனும், சிங்கமாப்பாணனும் பன்னாகம் (மாத்தளை) கடந்து அப்பால் செல்வதாகவும், வழியில் எதுவித எதிர்ப்புமின்றியும் படைகள் செல்வதாகவும் செய்திகள் வந்துள்ளன" என்றார்.

"தென்னிந்தியப் படையெடுப்புகளுக்குப் பயந்து அடிக்கடி தலைநகரை மாற்றும் சிங்கள மன்னருக்கும், சூழ்ச்சியால் சிங்கள அரியணைகளை அடையத் துடிக்கும் கலகக்காரர்களுக்கும் எமது அரசு செழிப்புடன் இருப்பது கண்களை உறுத்துகின்றன போலும். பாண்டிய மன்னரிடமே படை உதவி கோரியிருக்கின்றாராம் கோட்டை மன்னர் விக்கிரமபாகு. அழகக்கோனாரா நிறையக் கூலிப் படைகளை அமர்த்திக்கொண்டே நாம் வர்த்தக அதிகாரம்பெற்ற பகுதிகளில் ஊடுருவி எமது அதிகாரிகளைப் பிடித்துச் சென்றிருக்கின்றான். ஒரு நாட்டின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் அண்டை நாடுகளை அச்சுறுத்தவே செய்கின்றன. இப் படையெடுப்பு சிங்கள மன்னர்களுக்கும், கலகக்காரர்களுக்கும் ஒரு பாடமாக அமையட்டும்." என்றார் மன்னர் கனகசூரியர்.

"பாண்டியர்கள், சோழர்களிடையே சுமுக உறவு இல்லாமல் இருந்த போதும் வட ஈழத்தில் ஓர் தமிழ் அரசு வலிமையுடமன் இருப்பது அவர்களுக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது மன்னா"

"நாம் வலிந்து சண்டைக்குப் போகவில்லை. வரும் சண்டையையும் விட்டு வைக்கமாட்டோம் என்பதற்கு இப்போர் ஒரு உதாரணமாக இருக்கட்டும்" என்று கூறிவிட்டு எழுந்த மன்னரைத் தொடர்ந்து அமைச்சரும் எழுந்து கொண்டார்.

வீரகேசரி தலைமையில் கரையோரமாகச் சென்ற படை பாணந்துறையில் பாடிபோட்டுக் கொண்டது. அழகக்கோனரின் விபரீத விளையாட்டால் ஏற்பட்டுவிட்ட நிலைமையை எண்ணிச் சிங்கள மன்னர்கள் திகிலடைந்தனர். அழகக்கோனார, அவர்களைத் தேற்றித் தான், தன் படையோடு உதவுவதாகக் கூறிப் போர் ஆயத்தங்களைச் செய்தான்.

பன்னாகம் வழியாகக் கோட்டையை நோக்கிச்சென்ற சிங்கமாப்பாணனையும், இளஞ்சூரியனையும் சில இடங்களில் சிறு சிறு குழுக்களாக எதிர்த்த சிங்களக் கலகக்காரர்களை எல்லாம் சில வினாடிப் பொழுதிலேயே சிதறடித்துவிட்டுப் படை முன்னேறியது.

நீர்கொழும்பு, பாணந்துறை, கோட்டை ஆகிய இடங்களில் பெரும்போர் நிகழ்ந்தது. சிங்கள மன்னர்கள் யானைப்படையையே பெரிதும் நம்பியிருந்ததால் யுத்தக் களத்தில் பெரும்பாலான குஞ்சரங்களைக் குவித்திருந்தனர். கரிய மலைகள் போல பிளிறி நிற்கும் அவைகளை ஊடுருவித் தாக்குவதால், தமக்கே சேதம் ஏற்படும் என்பதை ஊகித்துக்கொண்ட தமிழ்த் தளபதிகள், தமது விவேகத்தையும் கூட்டத்தவறவில்லை.

ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்ட பெரிய தீப்பந்தங்களை எரி அம்புகளாக்கி குஞ்சரக் கூட்டங்களிடை விழச்செய்தனர். தீயை மிதித்ததும் குஞ்சரங்கள் படை வியூகத்தையே நிலைகுலையச் செய்து பிளிறிக்கொண்டு ஓட ஆரம்பிக்க, வளியெனப் புகுந்த புரவிகள் சிங்களப் படைகளை சிதறடித்தன.

முன்னேறி வந்த வீரகேசரியின் படையுடன் பின்புறமிருந்து வந்த சிங்கமாப்பாணனும், இளஞ்சூரியனை தமது படையை பிறைச் சந்திர வியூகத்தில் அமைத்து முன்னேறியதால் சிங்களப் படையினர் நிலை குலைந்தனர்.

யானைகளின் பிளிறல்கள், குதிரைகளின் கனைப்புகள், வாளோடு வாள் மோதும் ஒலிகள் அதனால் கையிழந்து, காலிழந்து மெய்யெல்லாம் புண்பட்டு துடித்து விழும் போர்வீரர்களின் மரணஓலங்கள். இரத்தத் தடாகமாய் விளங்கிய யுத்தக்களத்தின் பிரதிபலிப்பாய் மேல்வானம் சிவந்து சிரிக்க, யுத்தத்தின் பயங்கரத்தைப் பார்க்கச் சகிக்காதவனாய் பகலவன் மேக மலைகளில் பதுங்கிக்கொண்டிருந்தான்.

அழக்கோனார பாணந்துறைக்கப்பால் தெற்கே ஓடி ஒளிந்துகொண்டான். சிங்கைப் படையின் வெற்றி முழக்கம் நாலா திசைகளிலும் ஒலிக்க ஆரம்பித்திருந்தது.

காயம்பட்ட வீரர்களை வெற்றிக் களிப்புடன் தமது பாசறைகளுக்குத் தூக்கிச்சென்றனர் படை வீரர்கள். "இளவரசே" என்றான் தளபதி சிங்கமாப்பாணன். அவனருகே புரவியைக் கொண்டுவந்த இளஞ்சூரியன் அவனை நிமிர்ந்து பார்த்தான்.

"முகத்தில் என்ன இரத்தக் காயம்?"

"வெற்றித் தழும்பு" என்று கூறிச் சிரித்தான் இளஞ்சூரியன்.

"உண்மைதான். வெற்றித் தழும்புடன் நாம் சிங்கைக்குத் திரும்பி விடுவோம். ஆனால் இந்த வெற்றியை நாம் ஓர் மெய்க் கீர்த்தியாக இங்கே நாட்டவேண்டும்" என்றான்.

"தளபதி! நாம் பெற்ற வெற்றிக்கு எதிர்காலத்தில் ஓர் சான்று காட்டவேண்டும் இல்லையா?"

"ஆமாம்"

"புறப்படுவதற்கு முன்பு அதனைச் செய்துவிட்டுத் திரும்புவோம். அதற்கு முன்பாக எமது வெற்றிச் செய்தியை சிங்கைக்கு அனுப்புவோம்."

இரவோடிரவாக வெற்றிச் செய்தியைத் தாங்கிய இரு வீரர்கள் சிங்கை நோக்கி புரவிகளில் விரைந்துகொண்டிருந்தனர்.

கே. எஸ். ஆனந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராடு மீண்டும் போவோமென்று உறுதி எடு

— புதுவை இரத்தினதுரை —

ஓதுங்கிக் கொள்ளாதே!

ஒவ்வொன்றாக இழந்து, இழந்து ஒதுங்கிக் கொள்ளாதே
போராடு
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே!

வற்றாப்பளை அம்மன் கோவில்
வைகாசிப் பொங்கல் முடிந்த கையோடு
கரை வழியாகக் கதிர்காமப் பயணம்.
'அரோகரா'க் கோஷம் வானைப் பிளக்க
மாணிக்க கங்கையில் தீர்த்தமாடும்
கனவில் மிதந்து
நடந்த கால்கள் எங்கே? எங்கே?

போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
போராடு

"குரை கடலோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை"
போகமுடியுமா?
இராவணன் வெட்டை ரசிக்க முடியுமா?
அந்திவான மஞ்சள் வெயிலில்
அந்த நகரம் குளிக்கும் அழகினை
முந்திப் பார்த்து மெய் சிலிர்த்திட்டாய்
இன்று போக எப்படி முடியும்?

போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே!

பாண்டிருப்புப் பத்தினி அம்மன்
பங்குனி மாதப் பொங்கலென்றாலே
எங்கிருந்தெல்லாம் வந்து சேர்வார்கள்
இன்றேன் அந்த வீதி வெறிச்சது
தீ மிதிக்கின்ற நேர்த்தி என்னாச்சு?

போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மன்னார் மடுப்பதி மாதா முன்னால்
கண்கள் மூடிக் கண்ணீர் சொரிந்து
சுருவம் சுற்றும் அழகில் உருகி
உன்னை இழந்த உணர்வு வடிந்ததா?
இன்றும் போக இயலும்
ஆனால்,
இன்னல் எத்தனை ஏற்றுப்போகிறாய்
நேர்வழியிருக்க நீந்திப் போகிறாய்.
படகிலேறி உயிரை இழக்கிறாய்.

போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே!

'பாலை தீவு
அந்தோனியார் அழைக்கிறார்.
படகிற் போகிறோம்
நீயும் வாறியா? நீயும் வாறியா?'
இப்படிப் பேசி மகிழ்ந்த வாய்கள்
எப்படி இன்று உமைகளாயின?

போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக்கொள்ளாதே!

கீரிமலைக் கேணியை இன்று
யாரிடம் கொடுத்து ஒதுங்கிக் கொண்டாய்.
ஆடி அமாவாசை அன்றுதானே
கீரிமலைக் கடலில் குளித்து
அப்பனுக்குத் 'தர்ப்பணம்' செய்வாய்.
இன்று,
'பிதுர்க்கடன்' செய்யவும் போக்கிடமில்லையா?
எப்படி உன்னால் பொறுத்திட முடியும்?

ஒதுங்கிக் கொள்ளாதே
ஒவ்வொன்றாக இழந்து இழந்து
ஒதுங்கிக் கொள்ளாதே.
போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தாயும் மகனும்

போராட்டக் களத்தினிலே மாவீரர்களாகிவிட்ட போராளிகளை ஈன்றெடுத்த பெற்றோர்களின் மனம், இவ்வீரர்களைப் பெற்றதற்காக ஒரு புறம் பெருமிதம் கொண்டபோதினிலும், மறுபுறம் ஏக்கம் கலந்த ஒரு வெறுமையும் கூட அங்கு உள்ளது. எனினும் ஏதோ ஒரு நம்பிக்கை கலந்த நிலையினிலேயே பெரும்பாலான பெற்றோர்கள் வாழ்கின்றார்கள். இப்போராட்டத்திற்குத் தொடர்ந்தும் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். அந்த வரிசையிலே 2ம் லெப். சாளினியின் பெற்றோரை இங்கு சந்திக்கின்றோம்.

சாளினி அக்காவின் வீட்டுவாசலைத் திறந்து "அம்மா" என்றவாறு உள்ளே செல்லவும், "வாருங்கோ பிள்ளையள், சாளியை உங்களுக்குத் தெரியுமா?" என்று சிரித்தபடி எங்களை வரவேற்று அமரச் செய்தார் அம்மா. பின்னர், "இருங்கோ, பிள்ளையளுக்கு ஏதாவது குடிக்கக் கொண்டு வாறன்" என்றவாறு இரு நிமிட இடைவெளிக்குள் எலுமிச் சம்பழச்சாற்றை எமக்குப் பருகுவதற்குத் தந்தபடியே "என்ன விசயம்? என்னிட்ட வந்திருக்கிறியள்?" என்றார் புன்னகை மாறாத முகத்துடன்.

பெரும்பாலும் மாவீரரைப் பெற்ற தந்தையோ, தாயோ சக போராளி ஒருவரைக்காணும் வேளையில், மடைதிறந்த வெள்ளம் போல் அழுவதைத்தான் நான் கண்டிருந்தேன். ஆனால் இத் தாயோ கவலைகள் அனைத்தையும் மனதினுள் புதைத்துவிட்டு எங்களுடன் எப்படி உரையாடுகின்றார் என நினைத்தபோது வியப்புத்தான் தோன்றியது. இவ்வேளையில் அவ்வன்னையின் குரல் எம்மைத் திசைதிருப்பியது.

"மாவீரரைப் பெற்ற ஒரு தாய் என்னும் ரீதியில் உங்களுடன் சிறிது உரையாட வந்துள்ளோம்" என்று நாம் கூறவும், மலர்ந்த முகத்துடன் அம்மா உரையாடத் தொடங்கினார்.

"உங்களைப் பார்க்கும்போது என்னுடைய சாளியின் நினைவு தான் வருகிறது. வீட்டின் மூன்றாவது பிள்ளைதான் அவள். மிகவும் துடிப்புடைய துணிச்சல்க்காரி. மெலியோரை வலியோர் வதைப்பதைப் பொறுக்காதவள். பாடசாலை வாழ்க்கையின்போது கலைத்துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டு பரிசில்கள் பலவும் பெற்றுக்கொண்டவள். திரைப் படத்தைப் பொறுத்த வரையில் மோதல் காட்சிகள் அதிகமாக உள்ள படங்களைத்தான் மிகவும் ரசிப்பாள்."

விடுதலை அமைப்போடு தொடர்பு ஏற்பட்டது பற்றி வினவியபோது,

"எங்களது குடும்பம் இயக்கம் ஆரம்பமான காலத்தில் இருந்தே அதனுடன் ஒன்றியபடி தான் வாழ்ந்து வந்திருக்கின்றது. எமது ஊரான வல்வெட்டித்துறை, சிங்களப் பொலிசார் தொடக்கம் இந்திய இராணுவம் வரையிலான அழிவுகளை ஏற்றுக்கொண்ட நிலமாகும். மேலும் சாளியின் தந்தையும் மிகவும் தீவிரமான விடுதலை உணர்வு மிக்கவர். இந் நிலையில் அன்று தொடங்கிப் பலமுறை சிறை சென்று சித்திரவதைகள் அனுபவித்தவர். இதுவே ஒரு காரணமாக, இவளும் இயக்க வேலைகள் பலவற்றை இளம் வயதிலேயே செய்து கொண்டிருந்தாள்.

மூத்த பெண்ணும் இதில் பங்குகொண்ட போதினிலும், இவளைப் போல உளவு சொல்வதில் துணிந்து ஈடுபடவில்லை. இவளின் துணிவைப் பாராட்டி ஒரு சம்பவம் கூறுகின்றேன்.

இந்திய இராணுவம் எங்கள் பகுதியில் நிலைகொண்டிருந்த வேளையில் கணவன் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டார். இவரைப்போலவே பலரை இராணுவம் கைதுசெய்துகொண்டு முகாம் சென்றுவிட்டது. இதனால் அவர்கள் அனைவரையும் விடுவிக்கும் நோக்கில் மாணவர்கள் தொடக்கம் வயது முதிந்தோர் வரை முகாமின் முன் சென்று கூச்சலிட்டோம். இராணுவமோ எங்களை உள்ளே வராதபடி முட்கம்பிகளைப் போட்டது. "முதலில் எழுந்த சாளி, துப்பாக்கிகள் நீட்டப்பட்டபோதினிலும் துணிந்து முன்சென்று கம்பிகளை இழுத்தெடுத்து அப்புறப்படுத்தியபடியே உள்ளே சென்றுவிட்டாள். இதனை அடுத்துக் கூட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முழுவதுமே உள்ளே நுழைந்து விட்டது. இயலாமை காரணமாக இராணுவம் இறுதியில் அனைவரையுமே விடுதலை செய்தது."

போராட்டம் பற்றிய அவரின் கருத்தினைக் கேட்டவேளை,

"பன்னிரெண்டு வயதினிலேயே போராடவேண்டும் என்ற கரு அவள் மனத்தில் இருந்தது."

"சீ.... எங்கடை கையிலே ஒண்டுமில்லையே இவங்களைச் சுடுவதற்கு" என்று தனது ஆற்றாமையை வெளிப்படுத்துவாள். இவள் 1989 இல் தன்னை முழுமையாக விடுதலைப் போராட்டத்தினில் இணைத்துக்கொண்டாள்."

"போராட்டத்தில் அவளின் பங்களிப்பைச் சமுதாயம் வரவேற்றுக் கொண்டதா?"

"இல்லை, எனது உறவினர்கள் அனைவருமே கொழும்பில் வசிப்பவர்கள். அவர்கள் இதைப் பற்றி ஒன்றும் கேட்பதில்லை. ஆனால் சாளியின் தந்தையின் சொந்த பந்தங்கள் அனைவரும் குறைகூறத் தலைப்பட்டனர். 'பொம்பிளைப் பிள்ளையெண்டால் அடக்கமாக இருக்கவேணும். சைக்கிள் ஓட்டத்தைப் பார். வீட்டோட அடக்கி வைச்சுப்போடு, உங்களால எல்லோருக்கும்தான் கடைசியில் ஆபத்து' என்று குறை கூறுவார்கள். நானோ எனது பிள்ளையை விட்டுக் கொடுக்கமாட்டேன். "தாய் தந்தையின் வழி எதுவோ, அதன்படிதானே பிள்ளைகளும் செல்லவேணும். எனது பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியும். இராணுவம் அழிக்கும் போதுதான் நிலைமை உங்களுக்குப் புரியும்" என்பேன்."

"சாளினி முழுமையாகத் தன்னைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டவேளையில் என்ன மன நிலையில் இருந்தீர்கள்?"

குடும்பத்தில் உள்ள அனைவருமே பெரும்பாலும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தினால் மகளின் சேவைக்கு நான் தடை விதிக்கவில்லை. ஊக்கமே கொடுத்து வந்தேன். இருப்பினும் என்றாவது ஒரு நாள் என்னை விட்டுப் பிரிந்து செல்வாள் என்பதை நான் எதிர்பார்த்துத்தான் இருந்தேன். ஆனாலும் அவள் சென்றுவிட்டாள் என அறிந்தபோது துடித்தேன். ஏனெனில் வீட்டினைப் பொறுத்தவரை அனைத்து வேலைகளையும் பொறுப்புடன் செய்யக் கூடியவள் அவள்தான். அயலில் என்ன நிகழ்வுகள் நடப்பினும் அங்கு நிச்சயம் நிற்பாள். அதனால் முதலில் வேதனை அடைந்த போதிலும் எனது கணவரின் வார்த்தைகளால் ஆறுதல் அடைந்தேன். உறவினர்களின் கதைக்கு நான் அசைந்து கொடுக்கவில்லை, மாறாக வீட்டுக்கொரு பிள்ளையாவது நிச்சயம் போராடத்தான் வேண்டும் என்று அவர்களுக்குப் பதில் வழங்கினேன்.

மேலும் இன்றைய கால கட்டத்தில் விடுதலைப் போரில் பெண்களின் பங்களிப்பும் நிச்சயம் தேவை. இரு பாலாரும் இணைந்து போராடினால் தான் விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகையினால் எனது மகள் நாட்டிற்குச் சேவை செய்யச் சென்றதனைப் பெருமையாகவே நினைத்தேன். அவள் போராளியாக மாறிய பின் எங்களால் மறக்கமுடியாத சம்பவம் ஒன்றே ஒன்றுதான் மிக முக்கியமானது. ஒரு முறை எனது கணவர் ஓர் இடத்தில் ஒப்பந்த அடிப்படையில் கட்டிடவேலை செய்து கொண்டிருந்த சமயம் எனது மகள் சகபோராளி ஒருத்தியுடன் வந்து, மண் ஏற்றுவதற்காக உழவு இயந்திரம் ஒன்றைக் கேட்கவும், உரிமையாளரோ "சாரதி இல்லை" என்று பதிலளிக்கவும், சற்றுத் தள்ளி வேலை செய்து கொண்டிருந்த தனது தந்தையிடம், தந்தை, மகள் என்று காட்டிக்கொள்ளாமல் ஏனைய தொழிலாளிகளுடன் உரையாடியது போலவே உரையாடி உதவி கேட்டாள். அந்த நிகழ்வை இன்னும் எங்கள் இருவராலும் மறக்க முடியாதுள்ளது.

சாளி சென்ற சிலமாதங்களின் பின் இளைய மகனும் சென்று விட்டான். சிறியவனான அவனுக்குக் காடு ஒத்துப்போகாத காரணத்தினால் நோய் ஏற்படத் திரும்பி வந்து விட்டான். அவ்வேளையில் வீடு வந்த சாளி 'இயக்கத்துக்குப் போனாத் திரும்பி வரக்கூடாது. ஏன் வந்தனீ?' என்று தம்பியைக் கண்டித்தாள். வீட்டில் விடுமுறையில் இருந்த சில நாட்களிலும் கூட பல பிள்ளைகளைப் போராட்ட வழியில் இணைத்தாள். இவளின் உற்ற நண்பி யாரெனில் தற்போது வீரச் சாவடைந்த கப்டன் சந்தியாதான், அவளையும் இப் போராட்டப் பாதையில் இணைத்தவள் சாளிதான்.



இவ்வளவிற்கும் எனது மகளின் இழப்பை எப்படித் தாங்கிக் கொண்டேன் என்பது புரியாத நிலையிலேயே உள்ளது. 1990 - ஆடி 10ம் திகதி அன்று கடற்புலிகளான கரும்புலிகள் கொலின்ஸ், காந்தரூபன், வினோத் ஆகியோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரால் இலங்கைக் கடற்படைக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதற்கு மறுநாள், கடற்படையினரும், விமானங்களும் குண்டுத் தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சத்தால் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்து விட்டனர். எங்களையும் அழைத்தனர். நாங்கள் மறுத்து விட்டோம். ஊரே வெறிச்சென்று இருந்த வேளையில், தந்தையும், மகனும் கடலின் நிலைமையைப் பார்க்கச் சென்றுவிட, வீட்டில் நான் தனியே இருந்தபோது, வீதியில் வாகன இரைச்சல் கேட்கவும், மகள்தான் வருகின்றாள் என்ற சந்தோஷத்தில் எழுந்து ஓடிச்சென்றேன். வாகனத்தை விட்டு இறங்கிய ஒரு பெண் போராளியின் பின் தோற்றம் எனது மகளைப் போல் இருக்க 'குட்டி அம்மன்' என்று அழைத்தேன்.

வீட்டினில் செல்லமாக முன்பு அப்படித்தான் அழைப்பேன். உடனேயே அந்தப் பிள்ளை திரும்பிப்பார்த்தது. என்னிடமே 'சாளியின் அம்மா வீடு எதுவம்மா? எனக்கேட்டது. நான்தான் சாளியின் அம்மா. என்ன விசயம்? என்றேன். அவர்கள் சொல்வதற்குத் தயங்குவதைக்கண்ட நான், "என்ரை பிள்ளைக்கு என்ன நடந்தது? காயமோ?" என்று கேட்டவாறு அழத்தொடங்கிவிட்டேன். அவர்கள் தயங்கியபடியே மெதுவாக விடயத்தைச் சொல்லி ஆறுதல் கூறிச்சென்றதன் பின்னர் இருமணி நேரம் உறவினர்கள் யாரும் அருகில் இல்லாத நிலைமையில் தனித்திருந்து, கதறி அழுதேன். அந்தக் கொடுமையைக் கூறமுடியாது" என்றார் நாத்தழுதழுத்த குரலில்.

சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு மீண்டும் கூறலானார். "விடயம் அறிந்த பின்னரே சிறிது சிறிதாக உறவினர் வந்து ஆறுதல் கூறினார்கள். இவ்வளவிற்கும் எனது மனம், 'மகள் எப்படிச் செத்தவள்' என்று கேட்கவேண்டும் என்று ஆவலில் துடித்தது. வேதனையை மறைத்தபடியே அங்கு வந்திருந்த சகபோராளியிடம் இவளைப் பற்றிக் கேட்டேன். அப்போது கப்டன் சுந்தரி அம்மா, உங்கடை மகள் கொக்காவிலில் முன்னுக்குப் போய்ச் சண்டை பிடிச்சுத்தான் வீரச்சாவடைந்தவள்' எனக் கூறினர். அதன் பிறகுதான் எனது மனம் அமைதி அடைந்தது. பிள்ளையை இழந்த துயர் இருந்தபோதிலும், நேரடிச் சண்டையில்தான் உயிரைக் கொடுத்தவள் என்பதையும், அவளின் வீரதீரங்களைச் சக போராளிகளின் வாய் வழியாகக் கேட்ட காரணத்தினாலும் எனது மனம் அவளைப் பெற்றதற்காகப் பெருமையே கொண்டது. ஆனாலும் இன்னும் சிறிது காலம் நாட்டிற்காகச் சேவை செய்ய இருந்திருக்கக் கூடாதா?' என்ற ஏக்கமும் எனக்கிருந்தது.

மேலும் சாளியின் இழப்பு என்னைவிட என் கணவரையே அதிகம் பாதித்தது. நானாவது அழுது எனது துக்கத்தினை ஆற்றிக் கொண்டேன். அவரோ மனதினுள் வைத்துப் புழுங்கினார். இதன் விளைவு சிறிது புத்தித் தடுமாற்றத்தினையே ஏற்படுத்திவிட்டது. ஆறுதல் வார்த்தைகளைச் சுமந்த கடிதங்கள் பல இங்கு வரும். இவையெல்லாம் மனதை ஆற்றுமா? வேதனையைத் தீர்க்குமா? இவற்றைவிட முன்பு இயக்கத்திற்குப் போய்த் திரும்பி வந்த இளைய மகனின் போக்கில் மாற்றம் ஏற்படுவதைக் கண்டேன்.

**'அம்மா' என்றவாறு என்னைப் பார்க்க ஓடி வருவார்கள். இப்படியான பிள்ளைகளையும், தியாகங்களையும் கடந்து எப்படி வேறெங்காவது போவது? போராடுவதற்கு ஒன்று, இரண்டு காரணங்கள் கூறி முடிக்க முடியாது. அது பல எல்லைகளைக் கடந்த சக்தி. இதுவே எமக்குத் துணையாக இருந்து போராட வைக்கிறது.**

அமைதியாக இருந்து, சாளியின் எட்டுச் செலவின்போது அவற்றையெல்லாம் நன்றாகச் செய்து முடித்த பின்னர் தன்னையும் இயக்கத்தில் இணைத்துக் கொண்டு விட்டான்.


வேதனையில் இருந்த நாம் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மகனை வரும்படி அழைத்தேன். 'நீயாவது எங்களுடன் வந்து இரடா' என்று கூறி அழுதேன். அவனோ 'எனது அக்காவின்ரை இடத்தை நிரப்ப ஒருவராவது வேண்டாமா? தயவு செய்து என்னைக் கூப்பிடாதையுங்கோ' எனக் கூறிவிட்டான். வீட்டிலிருக்க விரும்பாத ஒரு பிள்ளையை எப்படி அழைத்து வருவது? ஆகையினால் வேதனைகளைத் தாங்குவதற்கு நானும் பழகிக்கொண்டேன். என்னிடம் வரும் போராளிகளை என் பிள்ளைகளாகவே காண்கிறேன். தென்மராட்சியில் இருந்தும்கூட 'அம்மா' என்றவாறு என்னைப் பார்க்க ஓடி வருவார்கள். இப்படியான பிள்ளைகளையும் தியாகங்களையும் கடந்து எப்படி வேறெங்காவது போவது? போராடுவதற்கு ஒன்று, இரண்டு காரணங்கள் கூறி முடிக்க முடியாது. அது பல எல்லைகளைக் கடந்த சக்தி. இதுவே எமக்குத் துணையாக இருந்து போராட வைக்கிறது. மகளின் நினைவுகள் வேதனையைத் தந்தபோதிலும், சகல நிகழ்வுகளையும், சோதனைகளையும் சகிப்பதற்குப் பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் நாங்கள்.

மேலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் எங்கள் உயிருடன் ஊறிய ஒன்று. அன்று மனம் தளராத காரணத்தினால்தான் போராட்டத்தின் வளர்ச்சியைப் பார்த்து இன்று மனம் குளிர்ந்து நிற்கின்றோம். கொக்காவில் என்ற சொல்லைக் கேட்கும்போதெல்லாம் பிள்ளையின் துணிச்சலும் திறமையும்தான் என் கண் முன்னே வரும். இதை நினைக்கையில் எங்களுக்குப் பெருமையாகக்கூட இருக்கும். அவளைப்

தொடர்ச்சி... 40ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அஞ்சிப்பயந்து
பங்கருக்குள் உடல் நடுங்கி
காதை தீட்டி,
"பம்பர்' போட்டுதா?" என வினவி
சின்னச் சிரிப்புடனே மெல்ல வெளிவரும்
எங்கள் பிஞ்சுகள்தான் .....
என்றாலும்,
தேசத்தேர் வடம் இழுக்கும்
வீராப்பு இவர்களுக்கு.!
"ம் ....... விடாம இழுங்கோ .....
உங்கள் தேசம் உங்களுக்குத்தான்."

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலைச்சுமை

## காவலைமை

ஹோல்சர் கட்டிய நெஞ்சும் துப்பாக்கி ஏந்திய கரங்களுமாக, அவர்கள் 'தப தப' வென வாகனத்திலிருந்து குதித்தார்கள். அடிபாட்டுக்குப் போக அனுமதி பெற எவ்வளவு அடிபட்டிருப்பார்கள்? சந்தர்ப்பம் கிடைத்த மகிழ்ச்சி, அவர்கள் முகங்களில் படர்ந்திருந்தது. மெல்லிய குளிரான கடற்காற்று மேனியைத் தடவிச் சென்றது.

இடிந்து நிலைகுலைந்து போன கட்டிடங்களும்..... மனித நடமாட்டம் அற்ற தெருக்களும்...... கதவோ, யன்னல்களோ காணாமற்போன .... ஓடுகள் சரிய 'ஓ'வென அலறிக் கொண்டிருக்கும் வீடுகளும்..... பூநாறிப் பற்றைகளும்..... வெள்ளெருக்குக் குத்துப் புதர்களும்.... பேய்வெள்ளரிக் கொடிகளுமாக நகரத்தின் நகரமான அப்பகுதி அருண்டு கிடந்தது. அவன் 'நெஞ்சினில் நெருப்பாக' எதுவோ பற்றி எரிந்தது.

யாரோ... எங்கோ.... எப்போதோ.....

அவர்களை இறக்கிவிட்ட வாகனம் பேரிரைச்சலோடு உறுமியபடி விரைந்து போனது. அது புழுதியைக் கிளப்பிக் கொண்டு கரையிலிருந்து மறையும் வரை பார்த்தான். கழுகுக்கு மூக்கில் வியர்ப்பதுபோல் திடீரென அவர்களுக்கு மேலாக 'தும்பி' ஒன்று பறந்து போனது. தொடர்ந்து 'கோள் மூட்டிப் பிளேன்' என்று சிறுவர்களால் எள்ளி நகையாடப் படும் 'சீ பிளேன்' பெரிய வட்டமடித்தது; இனி நிச்சயம் 'பொம்மரோ'.... சகடையோ அல்லது இரண்டுமோ கட்டாயம் வரும்.

'எல்லோரும் கட்டிடத்துக்குள் ஓடுங்கள்!' கட்டளைக் குரல் ஓய்வதற்கு முன் அவர்கள் அனைவரும் கட்டிடத்திற்குள் புகுந்தனர். சில மணித்துளிகளில் மூன்று பொம்மர்கள் - குண்டுவீச்சு விமானங்கள் இலக்குத் தெரியாமலோ, வீசத் தெரியாமலோ வழக்கம்போல கண்மூடித்தனமாக குண்டுகளை வாரிக்கொட்டத் தொடங்கின.

'அவசரப்படாத..... கொஞ்சம் பொறு.... போராளிக்குப் பதட்டம் கூடாது.... நிதானம் மிக முக்கியம் எண்டு சொல்லித்தந்ததை நீ அடிக்கடி மறந்து போகிறாய்....' என்று நட்புரிமையுடன் அதட்டினான். அவன் கண்கள் யன்னலினூடாக வெளியே வெறித்தது.

யூடிசி என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு, இன்று மாநகரசபை என்று அழைக்கப்பட்ட அந்தக் கட்டிடம் தரையோடு தரையாக..... 'இந்தக் கட்டிட மேடையிலேதான் காலம் காலமாக எத்தனை அரசியல் கூட்டங்கள் நடந்தன.... தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதாகக் கூறிய வாக்குறுதிகள் எத்தனை? எத்தனை?..... அந்தத் தலைவர்கள் எவ்வளவு மெத்தனமாக இருந்தார்கள்..... வாக்குறுதிகளைப் பறக்கவிட்டார்கள்..... அல்லது சிங்கள அரசு அவர்களுக்கு வழங்கிய சலுகைகளில் மயங்கிப்போனார்கள்..... அதன் விளைவு?... ஜெகன் போன்ற இளைஞர்கள் உருவானதுதான்.

'எல்லோரும் பங்கருக்குள் இறங்குங்கள்!'

அப்போதுதான் அது அவர்கள் கண்ணில் பட்டது. அறையின் சுவரோரமாக கீழ் நோக்கி படிவரிசையமைத்து....

ஓ!.... ஆச்சரியத்தால் விழிகள் அகலத் திறந்தன. ஜெகன் துள்ளி எழுந்தான்.

தூரத்தே அவர்களால் முற்றுகையிடப்பட்டிருந்த கோட்டை, வெட்டை வெளியினுக்கு அப்பால் தோற்றம் கொண்டிருக்க, நேராகக் கோட்டையைச் சமீபிக்க முடியாது. திறந்த வெளியென நிலம் விரிந்து பரந்து கிடந்தது. மெல்லிய அசைவும்.... தலைக் கறுப்பும் கூட - கோட்டையின் மதில்களின் பின்னால் இருக்கும் சினைப்பர்களைப் பேசவைக்கும்.

பங்கருக்குள்ளே இறங்கி நடக்க.... நடக்க.... அவன் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது. உள்ளே... அழகான பாதை.... காற்றோட்ட வசதி... வெளிச்ச வசதி...

யாரோடோ செய்துகொண்ட தவறுகளின் விளைவுகளா - இவை?

எம் சந்ததியினரை வஞ்சித்தவர்கள் யார்?....

ம்.... பரவாயில்லை.... எல்லாவற்றிற்கும் பதிலடி கொடுப்போம். இதைவிட 'அப்பனான' ஒரு நகரை அமைத்துக் காட்டுவோம்.... பழைய வீட்டை அழித்துப் புதுவீடு கட்டுவதைப்போல அவர்கள் அழிக்கிற பொறுப்பை ஏற்றுக் கொள்ளட்டும். நாங்கள் புதிது புதிதாக ஆக்குவம்....

அந்த இடைவெளி நேரத்தில் தான் அவன் தாங்கள் வந்திருந்த கட்டிடத்தை அவதானித்தான்.

எடே!.... இது ரெஸ்ட்கவுஸல்லவா?

'என்ன மச்சான்! கோட்டை அடிபாட்டுக்கெண்டு கூட்டிவந்து, இங்க....' என்று காதிற்குள் 'கிசு கிசு'க்கும் ஜெகனை மெல்லத் திரும்பிப் பார்த்தான். ஏ.கே 47 ஐப் பற்றியிருந்த அவன் கரங்கள் துடிப்பது தெரிந்தது.

www.tamilarangam.net



இணையும் ஈடும் இல்லாத
இந்தப் போரில் நீங்களெல்லாம்.....
பணயம் வைத்தே உம்முயிரை
பலியாக் கொடுத்தீர் தியாகிகளே!

வெற்றி பெறுமோர் இலட்சியமாம்
விடுதலைக்காக நீங்களெல்லாம்....
உற்ற செல்வம் அனைத்தோடும்!
உயிரும் கொடுத்தீர்! கொடுத்தீரே!

முடிவில் ஒருநாள் கொடுங்கோண்மை
முட்டோ டற்றுப் போகுமடா!
அடிமை மக்கள் விழித்தெழுவர்
அந்நாள், அந்நாள், அந்நாளே!

மக்ஸிம் கார்க்கியின் 'தாய்' நாவலில் இருந்து

மின்சார டிரான்ஸ் போமர்களை அழித்து-மின் சாரக் கம்பங்களைச் சாய்த் தீர்களே... எரிபொருள்க ளைத் தடை செய்தீர்களே... கேவலம் நெருப்புப் பெட்டி யைக் கூடவே தடை செய்தீர் களே.... நகரை இருளில் மூழ்கடித்து என்ன பல னைக் கண்டீர்கள்? பொது மக்களின் வெறுப்பைச் சம் பாதித்ததை விட வேறென்ன?

எல்லாம் எங்கள் இளைஞர் களின் ஆற்றல்.... அறிவு... ஆக் கம்... அவர்கள் நெஞ்சம் அப் போதே சுதந்திரக் காற்றை சுவா சிக்கத் தொடங்கிவிட்டன. வழி யெல்லாம் அவர்களையொத்த விடுதலை வீரர்கள்.... இவர் களை நட்புடன்..... கனிவுடன் நோக்கினார்கள். மறுவினாடி அவர்கள் தத்தம் கடமைகளில் ஈடுபடலாயினர்.

'கோட்டையைக் கைப்பற் றியே தீருவோம்' என்பதான உறுதி முகத்தில் தெறித்தது. பாதை வளைந்து வளைந்து பல பிரிவுக ளாகப் பிரிந்து.... பிரிந்து....

'நாளை இவர்கள் உருவாக்கும் நாடும்... சமு தாயமும் இப்படித்தான் சீராக ஒழுங்காக... இருக் கும். பழைய பெருச்சாளிக ளின் வளைகளை நாங்களே உடைத்தெறிய வேண்டும்... அந்த வளைகளை எங்கள் எதிரியே உடைத்தெறிந்து உதவுகிறான். நாளை மல ரும் சுதந்திரப் பூமியில் இந் தப் பழைய பெருச்சாளிக ளின் எச்சங்களோ... முடை நாற்றங்களோ நிச்சயம் வீசமாட்டா....

'முரளி!.... ஜெகன்... விசித்திரன், கலாமணி நீங்கள் இங்க நில்லுங்கோ...'

இவர்கள் நிற்க மற்றவர்கள் அவர்களைக் கடந்து சென்றார் கள். அவர்களை நோக்கி அங்கி ருந்தவர்களில் ஒருவன் வந்தான். தன்னை அறிமுகம் செய்து கொண் டான்.

'நீங்கள் வருகிறியள் எண்டு முன்பே தகவல் வந்திட்டுது... உங்களுக்காகத்தான் காத்திருக்கி றோம்.... இவர்கள் நன்றாகக் களைத்துப் போனார்கள்.... இவர் கள் இடத்துக்கு நீங்கள் போய் இவர்களை விடுவியுங்கள்....'

ஜெகன் ஆவலுடன் அந்த இடத்தை நோக்கி ஓடினான்.

'கொஞ்சம் நில்லுங்கள்.... அவசரம் கூடாது.... எதிரி கண் மண் தெரியாமல் அடிக்கிறான்... எங்களுக்கு எதிலும் அநாவசிய இழப்பு இருக்கக் கூடாது.... உயிர்.... ஏன் ஆயுதத்திலும் இழப்புக் கூடாது.... கவனம்...'

ஜெகன் தனது துப்பாக்கியை மார்பில் அணைத்துக் கொண்டு கூவினான்.

'என் உயிரை இழந்தாலும் இழப்பேனேயொழிய ஆயுதத்தை இழக்க மாட்டேன்....'

'அதுவல்ல விசயம்... எதி ரிக்கு வான் வழியாலும் ஆயுதம் வருகுது போல... ஆகவே தாறு மாறாக அடிக்கிறான். நாங்கள் எதனையும் கணக்கிட்டுத்தான் சுடவேண்டும்.... அதோட அவன்ர, சினைப்பர் எந்த நேரம் வெடிக்குமெண்டு சொல்லே லாது.... கவனமாக இருங் கள்..... அதேபோல கோட்டை மதிலுக்கு மேலாக எதுவும் தெரிந் தால் தயங்காமல் வெடி வையுங் கள்....?

பங்கருக்குள்ளிருந்து தமது இலக்குகளை ஒழுங்கு படுத்திக் கொண்டார்கள்... நீண்ட மௌ னம் சலிப்பை ஏற்படுத்தியது. மெதுவாக பங்கருக்கு மேலாகத் தலையை உயர்த்தினான். இடமி ருந்து வலமாக மெதுவாகத் தலையைத் திருப்பினான். நீலக் கடல்.... பண்ணைக்கடல் கண் ணில் பளீரென் அடித்தது... முன்பு கடலை மறைத்திருந்த யாழ் மாநகரசபை மண்டபம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தரைமட்டமாகிய பின் கடல் குதூகலிப்பது தெரிந்தது.....

**அந்தக் கடலுக்கு அப்பால்தான் எதிரி முகாம் இறங்கியிருக்கிறான். கடலில் அவன் இறங்கும்போது நிச்சயம் கண்ணில் பட்டே தீர வேண்டும்.**

பக்கத்திலிருந்த புதிய கட்டிடமான பொலீஸ் அத்தியட்சகர் காரியாலயம் தகர்க்கப்பட்டு, பழங்கிழவியின் ஆற்றாமையைப் புலம்பிக் கொண்டிருக்க, விழுப்புண் பல பெற்ற விளையாட்டரங்கு வெறுமையில் குளித்துக் கொண்டிருந்தது. அந்த மைதானத்தில் அரங்கிற்கும் கோட்டைக்கும் இடையே சில புல்டோசர்கள் புதைந்து போயிருக்க..... நூலகம் கண்களில் பட்டது.....

**தென் கிழக்காசியாவின் உன்னதமான முதல் தர நூலகம். வெளிநாட்டுத் தூதுவர் சொல்லிப்போன வார்த்தைகள் கூட காற்றில் வலுவிழந்து போகவில்லை. ஆனால் அதற்குள்.... நூலகம் எரியுண்டது. தொண்ணூற்றாறாயிரம் நூல்கள் கருகிச் சாம்பலாக, தமிழ் மாணவர்களின் கல்வியிலும் பெரும் தீ பரவியதா? தமிழீழ மாணவனே என்னை இக்கதிக்கு ஆளாக்கியவர்களைப் பழிக்குப் பழி வாங்கு....**

அவன் ஒரு புத்தகப் பிரியன். அவனுக்கு நூலகத்தைப் பார்க்கப் பார்க்க நெஞ்சம் விம்மியது. ஒரு கணம் நிலை குலைந்தான்.

'உஷ்ய்க்' சினைப்பரின் குண்டு ஒன்று அவன் தலைக்கு மேலால் உரசிக்கொண்டு போனது. நல்லவேளை, அவசர அவசரமாகத் தலையை உள்ளிழுத்துக் கொண்டான்.

'எளிய நாய்கள்!....' -ஜெகனின் துப்பாக்கி வெடித்தது. அது




"அபலை" என்றழும்
நின் துயர் கண்டேன்.

புலம் பெயர்ந்து
பெயர்ந்த இடத்தினை
அப்படியே போர்த்தி
போரில் புடமிடா வாழ்வு

காலாகாலமாய் உனை
சிறையிட்ட செயல்தனை
கொளுத்துவோம்.

ஒளிமுகம் காட்டும்
தாய்த் தேசம்
எங்கள் மீதும் மூடும்
இருள் கலைக்கும்

துணிவுடுத்து
அதை துணைக்கழை
வாழ்க்கை வாழ்வதற்கே!

- இமயம் -

எதிர்த்தரப்பில் ஏதோ விளைவை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சில நிமிட தாமதத்தின் பின் அங்கிருந்து வெடியோசைகளாயிற்று. அவர்கள் தமது வெடி மருந்துகளையும், ரவைகளையும் வாரியிறைத்தனர்.

"மச்சான்.... உவங்களுக்கு கையில ஆயுதம் இருக்கிற திமிரிலதான் எதனையும் செய்யிறவங்கள்..... மச்சான் முதலிக் குளத்திலை அரை நூற்றாண்டுக்கு மேலாக குடியிருந்த எங்களை.... எங்களைப் போன்ற தமிழ் மக்களை எத்தனை முறை ஓட ஓட விரட்டியிருப்பாங்கள் தெரியுமே. அப்பா சொல்வார் அம்பத்தெட்டில சிங்களக் காடையர் வந்து துரத்தியடிக்க தாங்கள் காட்டுக்குள் ஓடி தஞ்சம் புகுந்ததாக. என்ர காலத்திலும் எழுபத்தியேழு, எண்பத்திமூன்றுகளிலும் காட்டுக்கை தான் ஓடினம்.... அப்ப எல்லாம் அவங்கட கையில ஆயுதம் இருந்தது மச்சான்..... இப்ப என்ர கையிலும் ஆயுதம் இருக்கு. இனி ஒருக்கா எங்கட கிராமத்துக்கை இவங்கள் வந்து போகட்டுமன்.... நான் ஒருவன் மட்டும் அவங்களுக்குப் பதில் சொல்லுவன்."

'மச்சான்! நீ முந்தி மாதிரி தனியாள் இல்லை. உனது சுற்றம் பெரியது.... உன்னைத் தனியப் போக விடுவமா?... உனக்கு முன்னால நாங்கள் அங்க நிப்பம்... என்ன விசர்க்கதை பேசிறம்... நாங்கள் தமிழீழம் பெறும்பொழுது முதலிக் குளத்தில சிங்களவன் இருப்பனே...'

'அதுவும் சரிதான் மச்சான்.... பயிற்றப்பட்ட இராணுவமும், பொலீசும்..... இருநூறுக்கு மேற்பட்டவங்கள் கோட்டைக்குள்ளை ஆயுதங்களோட நிக்கிறாங்கள்.... வெளிய வரப் பயப்பிடுகின்றாங்கள்....'

ஹெலியும், பொம்மரும் வானத்திலே தென்பட்டன. இவர்கள் தயாராகினார்கள். சற்று நேரத்தில் இரண்டு அவ்ரோ விமானங்கள் வட்டமிடத் தொடங்கின.

'சாப்பாடு போட வந்திருக்கிறாங்கள். சாப்பாடு கிடைக்கச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யக் கூடாது..... பசி தாகத்தால தவித்துப்போக வேண்டும்.... இதால அவர்களுக்குள்ளேயே அடிபிடி நடக்கத் தொடங்கும். சிங்கள மக்களும் எங்கட போராட்டத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்குவினம்...'

'படபட..... பட்.... பட்'

விமானம் வேகமாக மேலெழ முதற்ப் பொட்டலம் பண்ணைக் கடலுக்குள் விழுகிறது...

பொம்மர் ஒன்று அவசரம் அவசரமாக குண்டுகளைப் போடத் தொடங்கியது.

எங்கும் ஒரே வெடிச் சத்தங்கள்... புகை மண்டலங்கள்... குழிகள் பறிக்கின்றன. எல்லாவற்றையும் மீறி உணவுப் பொட்டலங்கள் விழுகின்றன. ஒன்று... இரண்டு.... மூன்று... இல்லையில்லை, கோட்டைக்கு வெளியிலை....

'பட்பட்.... பட்..பட்'

குண்டு வீச்சு விமானமும் மூர்க்கமாக, குத்தாக கீழிறங்குவதும்.... குண்டு பொழிவதும், மேலெழுவதும்.

விமானம் வேகமாக வருகிறது. இங்கிருந்து ஆரோ 50 கலிபரை அடிக்கிறார்கள்.... அது குண்டினை வீச.... எங்கோ விழுகிறது... ஜெகனினதும், இவனினதும் துப்பாக்கிகள் ரவைகளை வேகமாகத் துப்புகின்றன. விமானம் உயர்ந்து பெரிதாக வட்டமடிக்கிறது. மீண்டும் அது அவர்கள் பங்கர் பக்கமாக வேகமாக வருகையில், அதனை எதிர்கொள்வது போல் இவர்கள் பங்கருக்கு மேலால் தலையை உயர்த்தி வெடி வைக்கிறார்கள்.... நாலாபுறமும் ரவைகள் சொரிகின்றன.... விமானம் குண்டைப் போட்டுவிட்டு கரும்புகையைக் கக்கிக் கொண்டு மண்டைதீவுப் பக்கமாக கடலை நோக்கிப் போகிறது..... எங்கும் வெற்றிக் களிப்பு எழுகிறது....

திடீரென பங்கரில் பரபரப்பு எழுகிறது....

ஜெகன் எங்கே?.... எங்கே காணவில்லையே....

'அதோ!... அதோ!... அங்கே....யாரோ விழுந்து கிடக்கிறது போல..

நூறு யார் தூரத்துக்கு முன் விளையாட்டரங்குக் கட்டிடத்திற்கு முன்னால், புதைந்திருந்த புல்டோசர் வாகனத்திற்குமிடையில் யாரோ குப்புற விழுந்து கிடந்தார்கள். ஒரு கையில் ஆயுதம் இருந்தது.

இவனுக்கு நெஞ்சு வெடித்துவிடும்போல இருந்தது. எதிரே பார்த்தான். கொஞ்ச நேரத்திற்கு முன் தன் முன்னால் இருந்தவனின் இருக்கை வெறுமையாகக் காட்சியளித்தது.



## நேற்றைய நெருடல்கள்

நேற்றுப் போல்
இருக்கிறது.....
ஒரே தட்டில்
உணவைப் பகிர்ந்து
ஒன்றாய் உறங்கி
சிரித்துப் பேசிய
சிங்கள நண்பன்
தீட்டிய வாளுக்கு
இரை தேடியதும்,
கூரை வெளிச்சத்தில்
பாதுகாப்புத் தேடி நாம்
பதுங்கிக் கொண்டதும்
நேற்றுப் போல் இருக்கிறது.

அந்த ஐம்பத்தெட்டில்
ஐக்கியம் வீதியில்
அம்மணமாய் அலைந்தது -நாம்
ஒட்டிய உயிரோடும்
உலர்ந்த வயிற்றோடும்
கட்டிய துணியோடும்
காங்கேசன் கரையில்
கப்பலால் கொட்டப்பட்டதும்
நேற்றுப்போல் இருக்கிறது.

அன்று,
ஊன்றிய கால்களில்
உறுதி இருந்தது.
நிரந்தர இருப்பை
நிச்சயிக்க வேண்டிய
தேவை தெரிந்தது.
இன்றைய போரும்
நாளைய வாழ்வும்
நமக்காகவும்தான்!

சோதியா-[illegible]

வானிலே சந்திரன் காலிக்கத் தொடங்கினான். முன் நிலவில் ஜெகனின் சடலமும், அந்தப் பெட்டியும்....

'உன்னைத் தனிய போக விடுவமா? என்று கூறிவிட்டு இப்பிடியிருக்கிறோமே...' -நெஞ்சம் அலறியது. ஆனால் எங்கும் அமைதி. ஆ... இதென்ன? எங்கிருந்து இந்த நாய்கள் வந்தன.... இதெல்லாம் வழக்கமான நிகழ்ச்சிகளே. இந்த நாய்கள் ஓடி வருவது உணவுக்காகவா.... அவனுக்காகவா...

கூடாது.... கூடாது.... என் நண்பனை அவை தீண்ட விடமாட்டேன். அவன் துப்பாக்கி படபடத்தது. ஓரிரு நாய்கள் சுருண்டு விழுந்தன. மற்றவை வெருண்டோடின. இவனை நோக்கி இவன் நண்பர்கள் ஓடிவந்தனர்.

'ஜெகனை மீட்க வேண்டும்.... அவன் அப்படி அநாதையாகக் கிடக்கக் கூடாது... அவனை நாய்கள் கடித்துக் குதற விடமாட்டன்....' அலறினான். 'நாளை காகங்கள் கண்களை... குடலைத் தோண்டலாமே!....'

இந்த இழப்புக்களுக்காக நாம் கலங்கக் கூடாது. எமது கலக்கம் எதிரியை பலப்படுத்தும்.... நாம் நிச்சயம் ஜெகனை மீட்போம்..... இப்பயில்லை... நேரமிருக்கு..... முன் நிலவு நேரத்திலை எங்களை எதிரி காத்துக் கொண்டிருப்பான்.... நீ இருட்டும்வரை காத்திரு... இருளோடு இருளாக அவனைக் கொண்டு வர வேண்டும்.... சிலர் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்...'

'நானும் அவர்களோடு போய்....' அவன் இரஞ்சினான்.

சரி!.....

அவர்கள் பின்னிருட்டு வரும்வரை காத்திருந்தனர்.

அவ்வப்போது பரா வெளிச்சம் அவர்களைத் தாண்டிச் சென்றது. அவர்கள் தரையோடு தரையாக.... குண்டுகள் விழுந்து பறித்த குழிகளில்.... மைதானத்தில் பற்றை பற்றிக்கிடந்த குத்துச் செடிகளில்.... மறைவு கொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முழங்கைகளினால் நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் கரங்களில் துப்பாக்கிகள்....

பரா வெளிச்சம் தங்களைத் தாண்டிச் செல்ல எடுக்கும் நேரத்தைப் புறப்படுவதற்கு முன்னரே கணக்கிட்டிருந்தனர். அந்த நேர இடைவெளியை மனதில் கொண்டு நகர்ந்து கொண்டிருந்தனர். எதிரியும் இவர்களது ஆற்றலில் அதிக நம்பிக்கை கொண்டவன். ஆதலால் அடிக்கடி ஜெகன் கிடந்த இடத்தை நோக்கி அவ்வப்போது வெடிகளைத் தீர்த்துக் கொண்டிருந்தான். ஆனால் புறப்படும் பொழுதே மிகக் கடுமையான கட்டளை. இயன்றவரை துப்பாக்கியைப் பயன்படுத்தக் கூடாது. அவர்கள் ஜெகனின் சடலத்தை நெருங்கிய போது மிகவும் களைத்துப் போயிருந்தனர்.

ஜெகன் குப்புற விழுந்து கிடந்தான்.

இவன் அவனை தனது முதுகிலேற்றிக் கொண்டான். மீண்டும் ஊர்த்துவ இயக்கம். குண்டுகள் பறித்த குழிகள் பாதுகாப்பாக இருந்த வேளை அவையே பயணத்திற்கும் தடையாக இருந்தன.

பங்கரில் ஜெகனைக் கொண்டு வந்து கிடத்தினார்கள். அவன் மல்லாந்து கிடந்தான். அவன் முகத்தில் மண் பட்டிருந்தாலும், உதடுகளிலும் மண்ணை முத்தமிட்டது போல் அப்பிக் கிடந்தது. வலது கரத்தில் அவன் தாங்கிய ஏ.கே 47 ஐ அப்போதுதான் கவனித்தார்கள். அவன் கையிலிருந்து அது அகற்றப்படாமலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஜெகன் அவன் வலது கரத்தைப் பிரித்து துப்பாக்கியை எடுக்க முனைந்தான். அசைக்க முடியவில்லை. விரல்கள் அழுங்குப் பிடியாக மரத்துப் போய்... மறுகரத்தைப் பார்த்தார்கள். அதுவும் இறுக மூடியிருந்தது. அதைப்பலம் கொண்ட மட்டும் பிரித்த போது.....

கையிலிருந்து மண் உதிர்ந்தது.



மார்கழி, 1992 எரிமலை இதழில் 20 ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த புகைப்படத்திற்கு வாசகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆக்கம்

அகத்தினுள் அவலம் - உன்
முகத்தினுள் அடைக்கலம்.
பார்வை சொல்லும் முகசாட்சி - என்
தேச நடப்பின் தொலைக் காட்சி.

சுதந்திர மழையில் சுகப்பட வேண்டி
கந்தகக் காற்றில் கலங்கி நிற்பதும்
சுதேசியாய் வாழ ஆசை கொண்டபின்
பரதேசியானதும் புரிகிறதம்மா.

விடுதலை தமக்கு விதி விலக்கானதால்..
தாலியை இழந்த சங்குக் கழுத்தும்
வேலியைத் துறந்த வீடு வளவும்
காலி மனைகளும், காய்ந்த கழனியும்
கூலிப்படைகள் கொடையாய்த் தந்தனர்.

இரும்புப் பளுவையின் குண்டுகள் சில்லறை
அரும்பு உயிர்களும் ரொக்கமாய் கல்லறை.

சுதந்திரம் யார்க்கும் பொதுவே என்றவர்
தந்திரம் செய்தே அடக்க நினைத்தனர்.
மனித நேயம் மறுக்கப்பட்ட - நம்
மீட்பு என்ன மீளாத அடகோ?

மடிந்து போனவர் விடியலின் விலையே
விடிந்து போவதும் இயற்கையின் விதியே
மடியில் குழந்தை உனக்கிரு கண்ணே
விடியல் கூட பிரசவம் பெண்ணே!

இளையவர் செய்வது தியாகம் தாயே
இன்னுயிர் எல்லாம் ஆகுதி தாயே
சருகுகள் நாங்கள் சகித்துக் கொண்டால்
குருத்துகள் விடியலே சுகித்துக் கொள்ளும்

துன்பங்கள் நீண்ட வரலாறு இல்லை.
இன்பங்கள் இல்லா வாழ்வும் இல்லை
தேசத்தின் சுபிட்சம் உன் கையினிற் பிள்ளை
இனிமேல் சந்தேகம் என் நெஞ்சில் இல்லை.

- ஞானி -
நூறன்பேர்க், ஜேர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விளையாட்டும் ஆரோக்கியமும்

மனிதனுடைய வளர்ச்சி என்பது, ஒருவனுடைய உடல், உள வளர்ச்சியையே குறிக்கிறது. தனிமனிதர்களின் ஒட்டுமொத்தமான இவ்வளர்ச்சியே சமூக வளர்ச்சியாகவும் கருதப்படுகிறது. இவற்றில் உடல்ரீதியான வளர்ச்சிக்கு விளையாட்டுக்களும், உடற்பயிற்சியும் மிக அவசியமானது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாகும். விளையாட்டுக்களின் போது மனிதனுடைய தசைநார் வளர்ச்சி, குருதிச் சுற்றோட்ட விருத்தி, சுவாச விருத்தி என்பன ஏற்படுவதால் இயல்பாக அவனுடைய உடல் ரீதியான வளர்ச்சி விருத்தியாகின்றது. இதுபோன்று விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் மூளைக்கு உற்சாகம் ஏற்படுகிறது. அத்தோடு பொறுமையும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும் வளர்கிறது. அதுமட்டுமல்ல, சட்டத்தை மதிக்கும் பண்பும், தலைமைக்கு கட்டுப்படும் இயல்பும், பரந்த மனப்பான்மையும், சகோதரத்துவமும் வளர்க்கப்படுகிறது. இவற்றின் மூலம் மனிதர்களுடைய உளம் பண்பட்டு, அவர்களின் மனப்பாங்கு உயர்வடைகிறது.

ஆரம்ப காலத்தில், மனிதனுடைய வீரத்தை மதிப்பிடுவதற்கு யுத்தங்கள் களங்களாய் இருந்தன. இவற்றில் வீரர்கள் தங்கள் திறனை, வீரத்தை நிரூபித்தார்கள். ஆயினும் யுத்தம் அற்ற காலங்களில் வீரர்கள் தமது வீரத்தையும், திறனையும் நிரூபிப்பதற்கு விளையாட்டுப்போட்டிகளைப் பயன்படுத்தினார்கள். சமுதாயமும் அவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. பண்டைய நாட்களில் நமது முன்னோர்கள் கூட, குதிரையேற்றம், மஞ்சி விரட்டுதல் (மாடுகளை அடக்குதல்) என்பவற்றின் மூலம் போர் இல்லாத காலங்களிலும் வீரவிளையாட்டுக்களை நிகழ்த்திய வரலாறு உண்டு. எமது தேசத்தில் கூட குறிப்பாக தென்தமிழீழத்தில் கொம்பிழுத்தல் இரண்டு கிராமங்களுக்கிடையே நடந்ததாக வரலாற்றுக் குறிப்புண்டு. இவ்வாறு விளையாட்டுக்கள் கூட எமது பாரம்பரிய பண்பாட்டு கோலத்துள் மிகுந்த செல்வாக்கை செலுத்தியிருந்ததை அறியக்கூடியதாக உள்ளது. திருவிழாக்கள், புதுவருடம், பொங்கல் போன்ற கொண்டாட்ட நாட்களில் இவைகள், எமது மக்களால் விளையாடப்பட்டு வருவதை இன்றும் கூட காணக்கூடியதாக உள்ளது. எனவே, எமது பண்பாட்டு அம்சத்தில் கலைநிகழ்ச்சிகள் எவ்வளவு செல்வாக்கை செலுத்தினவோ அவ்வளவு செல்வாக்கை விளையாட்டுக்களும் செலுத்தியுள்ளன என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

எமது பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு (தாச்சி); வார் ஓடுதல் என்பன மிகுந்த உடற்திறனையும், நுட்பத்தையும், மகிழ்வையும் கொடுக்கக்கூடிய விளையாட்டுக்களாகும். ஆயினும், இவை வளர்ச்சிடையாமல், இன்றும் தாழ்ந்த தரத்திலேயே உள்ளது. இந்திய மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான 'கபடி' தேசிய விளையாட்டாக வளர்ந்து, ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் ஒரு நிகழ்ச்சியாகச் சேர்க்கப்பட்டு இன்று ஒரு சர்வதேச நிகழ்ச்சியாக உயர்ந்துள்ளது. இவ்வாறே சிங்களவரின் 'எல்லே' ஒரு தேசிய நிகழ்ச்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே நாமும் கபடியை எமது தேசிய விளையாட்டாக உயர்த்திக்கொள்வது எமது பாரம்பரியத்திற்கு செழுமை சேர்க்கும் ஒரு செயலாகும்.

சர்வதேச அரங்கில் விளையாட்டுக்கள் ஒரு தேசமக்களின் ஆரோக்கியத்தை, அபிவிருத்தியை அளவிடும் அளவுகோலாக அமைந்துள்ளது. உலகில் 'ஜமேக்கா' போன்ற சின்னஞ்சிறிய நாடுகள் கூட சர்வதேச போட்டிகளில் வெற்றிபெற்று தமக்கென்று ஒரு இடத்தை நிலைநாட்டியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. விளையாட்டு மைதானங்களையும் பயிற்சி நிலையங்களையும் நிறுவுவதன் மூலம் வைத்தியசாலைகளைக் குறைக்கமுடியும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். இன்றும்கூட விளையாட்டுக்கு பிரதியீடான மருந்து உலகத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை என்றே கூறப்படுகிறது. அதுமட்டுமல்ல, விளையாட்டுக்கள் மன இறுக்கத்தை நீக்கி மன மகிழ்வையும், மன ஓய்வையும் கொடுக்கும் காரணியுமாகும். எனவே இன்று போர் சூழ்நிலையில் வாழும் எமது மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் எவ்வளவு மன இறுக்கத்துடன் வாழுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். இவர்களுக்கு வடிகாலாக அமையக்கூடிய விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். இளைய தலைமுறையினரை தேவையற்ற போதைப் பழக்கத்திற்கும், கலாச்சார சீரழிவிற்கும் இட்டுச் செல்லும் பழக்கங்களில் இருந்து காப்பாற்றக்கூடிய சக்தி கலை, இலக்கியங்களிலும், விளையாட்டுக்களிலும் உண்டு என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே விளையாடுவோர் அனைவருக்கும் பயனளிக்கக் கூடியதும் செலவு குறைவானதுமான விளையாட்டுக்களைத் தெரிவுசெய்து அபிவிருத்தி செய் வேண்டியது அவசியமாகும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்துமாக் கடலின் அடிநிலம், சிலகோடி ஆண்டுகளுக்குமுன் எழில் கொஞ்சும் குறிஞ்சியாகவும் முல்லையாகவும் உலகின் தென்கோடி வரை விரிந்து கிடந்தது என்றும், அந்நிலப்பரப்பே மனிதவினத்தின் தாயகம் என்றும், ஐரோப்பியரான நிலவியல் (GEOGRAPHY), மாந்தவியல் (An hropology) நூல் வல்லார் விளம்பினர். அவர்கள் அதற்கு 'இலெமுரியா' (Lemuria) எனவும் தமிழ்ச் சான்றோர் 'குமரிக்கண்டம்' எனவும் பெயர் குறித்தனர்.

குமரிக் கண்டத்திலேயே பண்டைத் திராவிட - தமிழினம் தோன்றியதாகவும் தமிழ்ச் சான்றோர் கூறுகின்றனர்.

உலகில் வழங்கும் மொழிகள் எல்லாம் தொடக்கத்தில் ஒரு பண்டை மூலமொழியிலிருந்து கிளைத்திருத்தல் வேண்டும் என்று மாக்கசுமுல்லர் (Maxmuller), எட்கின் (Edkin) முதலிய ஐரோப்பிய மொழியியல் நூல் (PHILOLOGY) அறிஞர்கள் கருதினார்கள்.

"முக்குலங்களுக்கும் (ஆரியம், சேறிமியம், துரேணியம் அல்லது சித்தியம்) ஒரு மூலம் உண்டெனில், அம் மூலத்துக்குத் திராவிடம் தமிழ்மொழி மிக நெருங்கியதாகும்" என்று அறிஞர் கால்டுவெல் (CALDWELL) உரைக்கின்றார்.

திராவிட மொழிக் குடும்பத்திலே சிறந்த ஒப்பியல் ஆய்வினைச் செய்தவர் அறிஞர் கால்டுவெல் என்னும் ஐரோப்பியர் ஆவார். "உலகத்தில் எந்த மொழியிலும் பார்க்க, தொன்மை, செம்மை, இனிமை, இலக்கியவளம் முதலிய பல சிறப்புகளிலும் ஒப்புயர்வற்று. உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவது தமிழே" என்று அசைக்க முடியாத சான்றுகளோடு உலகுக்கு உணர்த்தியவர் அந்த ஐரோப்பியரான அறிஞர் கால்டுவெல் அவர்களே!

அப்பெரியாரின் வாய் மொழிதான், ஆரிய மாயையினால் கட்டுண்டு முடியிழந்து தன்னிலை மறந்து - உறங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பியது; தடுமாறித் தாழ்ந்த தமிழினத்துக்கும் தமிழுக்கும் புத்துணர்ச்சி ஊட்டி மறுவாழவு அளித்தது. நூலொன்று (புறப் பொருள் வெண்பா மாலை) இவ்வாறு கூறுகின்றது.

'பொய்யகல நாளும் புகழ் விளைத்தல் என்வியப்பாம்?
வையகம் போத்த வையங்கொலிநிர் - கையகல
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தேவாளோடு
முன்தோன்றி மூத்த குடி'

# தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்

மேலும் அக்கருத்தை நிலை நாட்ட தண்டமிழ்ப் புலவர் பலரும் முயன்று வருகின்றனர். உலக மொழிகளுக்கெல்லாம் மூலமான முதல் தாய்மொழி ஆகும் தகுதி எம் தமிழுக்கே உண்டு என எண்ணும்போது, உவகையால் உள்ளம் துள்ளுகிறது. மெய்மயிர் சிலிர்க்கிறது!

தென்குமரியை எல்லையாகக் கொண்டு, மிகத் தொன்மாநதர் இயல்போடு இருக்கும் தமிழினத்துக்கு இல்லாத பெருமை, வேறுயாருக்கு வரும்? பொய்யில்லை; இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழர்கள் கோல்கொண்டு ஆண்டவர்கள்; கொடிகட்டிப் பறந்தவர்கள்! சங்கம் வைத்தவர்கள்; கங்கை, இமயம், சிங்களம், கடாரம், சாவகம் எங்கணும் வென்று கொடி நட்டவர்கள்! கொற்கையிலும் மாந்தையிலும் மூச்சடக்கி முத்தெடுத்து, அலைகடலில் கலமோட்டி மேலையவனரோடும் கீழ்பாற் சீனரோடும் வாணிகம் செய்தவர்கள்! கோட்டைகட்டி கொல் பொறிகள் பல மாட்டி, மறத்தால் மாற்றாரை வென்று புறங்கண்டவர்கள்; பரணி பாடிக் களித்தவர்கள்; நல்லறிவும், பல்கலையும் பண்பாடும் இஞ்ஞாலமெங்கும் பயனுற நல்கியவர்கள்!

நிலக்கோளம் உருவாகி அதன் மேலோடு குளிர்ந்த நாளில் நீண்ட காலம் நீரால் மூடப்பட்டுக் கிடந்தது. காலமோடிக் கழிய நீரோடி வடிந்து நெடுங்கடலாக நிலைத்தது. அந்நாள், மலைகள் முன்தோன்றி மண்ணிலம் (சமநிலம்) தோன்று முன்னே மறத்தோடு (வீரம்) தோன்றிய மூத்த குடியாகிய தமிழ்க்குடி நாளும் புகழ் விளைப்பதில் என்ன வியப்புண்டு?

பழங்குடி இப்பாரிலே புகழ் விளைப்பதில் வியப்பில்லையாம்! அப்படி மறத்தோடும், மானத்தோடும் வாழ்ந்த மூத்த குடி, தமிழ்க்குடி!

ஞாலத்தில் ஞாயிறு (கதிரவன்) எப்படி விளங்குகிறதோ, அப்படியான பெருமையும் விளக்கமும் தமிழுக்கும் உண்டு! என்று ஒரு பாடல் (தாண்டியலங்காரம்) கூறுகிறது.

'ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள் கடியும் - ஆங்கவற்றுள்
மின்னோ தனியாழி வெங்க திரோன் றேனையது
தன்னேரில் லாத தமிழ்' (ஓங்கல் மாலை)

மலையிலே வந்து தோன்றி, உயர்ந்தோரால் தொழப்படுவதாய் விளங்கி, இஞ்ஞாலத்தில் இரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எகற்றும் பொருள் இரண்டு. ஒன்று ஞாயிறு; மற்றையது தனக்கு ஒப்பில்லாத தமிழ்! (ஞாயிற புறவிருளை ஒட்டும்: தமிழ், அகவிருளை [அறியாமை] அகற்றும்).

தமிழ் என்றால் இனிமை என்பது பொருள். நிகண்டிலும் பேரகர முதலிகளிலும் உண்டு. பல இலக்கியங்களிலும் தமிழ் என்னும்சொல், இனிமை என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. (இனிமையாவது இலக்கியங்களைக் கற்கும்போது உண்டாகுமோரின்பம்)

தமிழின் இனிமையை தமிழர்கள் மட்டுமல்ல; தமிழைக்கற்ற ஐரோப்பியரும் நயந்து வியந்து போற்றுகிறார்கள். பெசுக்கி(BESCHI) என்னம் இயற்பெயர் கொண்ட இத்தாலியப் பாரதியார் தம் பெயரையே வீரமாமுனிவர் என மாற்றியமைத்துக்கொண்டு, தமிழுக்குச் செய்த தொண்டுகள் காலத்தால் அழியாதவை. மற்றும் ஆங்கில நாட்டறிஞர் ஒருவர் தம் கல்லறையில் **"இங்கு ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்"** என்று எழுதுவித்தார் என்றால், அன்னார் தமிழின்பாற் கொண்டிருந்த பற்றை அளவிடமுடியாது! மேலும் தமிழுக்குத் தொண்டு செய்த GUபோப் கால்டுவெல் முதலான மேற்குலக அறிஞர்கள் பலரையும் (ஐம்பதுக்கு மேற்பட்ட எண்ணினர்) நாம் மறத்தல் இயலாது!

தமிழறிஞர், தமிழை கண்ணென்றும், பொன்னென்றும், உயிரென்றும் போற்றிப் பேணுவர். அதனாற்தான் அதனை செந்தமிழ்-பைந்தமிழ் -வண்டமிழ் -ஒண்டமிழ் -தண்டமிழ் -தென்றமிழ் -தேன்றமிழ் -அருந்தமிழ் -இருந்தமிழ் -நற்றமிழ் -பொற்றமிழ் -இன்றமிழ் -இன்பத்தமிழ் என்றெல்லாம் இயம்புகின்றனர்.

புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கள், தமிழ் தம் எண்ணத்தில் இனித்த தன்மையும், அது தம் உயிரோடு கலந்த உணர்ச்சியையும்

'தமிழுக்கும் அமிழ்தென்று பேர் - இன்ப
தமிழெங்கள் உயிருக்கு நேர்' என்றும்
'தாயைப் பழித்தால் தாய் தடுத்தால் விடுவேன்
தமிழைப் பழித்தால் யார் தடுத்தாலும் விடேன்' என்றும்
'இனமீன்ற தமிழ் நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்'

என்றும்

'எங்கள் வாழ்வும் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'

என்றும் கூவிக் குதிக்கிறார் பாரதியார்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்' என்றும்,
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்' என்றும்,
'செந்தமிழ் நாடெனும் போதினிலே -இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'

என்றும் பாடி மகிழ்ச்சியில் திளைக்கிறார்.

மற்றுமொரு தமிழ்ச் சான்றோர், "செந்தமிழே! உன்னால் வாழ்கின்றேன்; இனி தேவர் அமிழ்தமாயினும் வேண்டுகிலோன்" என்று தம் தமிழ் வாழ்வை எண்ணி நெஞ்சம் விம்முகிறார்;

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்த மெனினும் வேண்டேன்!' (தமிழ்விடுதூது)

இன்னும், தமிழீழப் புலவர் ஒருவர் தின்னத் தமிழ்வேண்டும்; தின்றுதமிழாலே சாகவேண்டும்; செத்தெரிந்த சாம்பலிலும் தமிழ் மணமே கமழ வேண்டும். என்று தனக்கு தமிழால் நெஞ்சில் வந்த ஆராமையைச் சொல்லிச் சொல்லி இரங்குகிறார்.

'தின்னத் தமிழெனக்கு வேணு மேயடா -தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணு மேயடா!
'சாவில் தமிழ்படித்துச் சாக வேண்டும் -என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்!'

(-பண்டிதர் க. சச்சிதானந்தன்; ஆனநத்தேன்)

மேலும், ஈழத்துப் புரட்சிக்கவி காசிஆனந்தன் அவர்கள்,

'பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் - மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மக்களின் துயர்
துடைக்க மறப்பேனா?'

என்று உள்ளம் குமுறுகிறார்.

'இன்னமும் தோதெளி தேனோ-என
எஞ்செவிக் கினிக்கின்ற மொழியெது தானோ
அன்னை மொழிதனை நாமோ -வெறுத்
தருவருத் தவமதித் திடலழ காமோ?'

என்று எங்கள் தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர், தமிழின் அவலநிலை கண்டிரங்கி, தமிழ் காக்க தன்மானமுள்ளவர் வருக என்று வேண்டி அழைக்கிறார்.

ஔவை வேண்டியதும் சங்கத் தமிழே! அந்தோ! இவையெல்லாம் பாட்டி சொல்லும் பழங் கதையாயினவே! இன்று நாங்கள் கோலிழந்து -கொடியிழந்து கோழைகளாய் கூனிக் குறுகி கும்பிட்டு எதிரியின் தாள்வருடி எச்சிற்சோற்றுக்கு இரக்கும் கீழ்நிலையில் வீழ்ந்துவிட்டோம்! மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் ஓர் பெருமையில்லை! தன்மானமும் தமிழ்வாழ்வும் வேண்டுமாயின் மீண்டும் நாங்கள் களமாடவேண்டும்! ஆளும் மொழிதான் வாழும்; அடிமைப்பட்ட மொழி மாளும்! எங்கள் மொழி வாழ -நாம் வாழ இழந்த முடியைப் பெற்றாக வேண்டும்!

"சோறுண்ண வழிதேடி விடுதலையை விற்பவர் கற்பதென்ன?" என்று பொங்கி எழுந்தவர் -இனமானம் இன்னும் ஒழியாத மறவர் களமாடுகின்றார்; தற்கொடையால் தமிழ் மானத்தையும் தமிழினத்தையும் காத்து நிற்போம். ● ● ●

www.tamilarangam.net



# மனம் திறந்து பேசுவோம்

தன்னாட்சி அமைப்புக்கான போராட்டம் தீவிரமடைந்த காலகட்டத்தில் வாழ்கிறோம். ஒரு தேசிய இனம் என்ற முக்கியமான அலகுகளில் ஒன்றாக அதன் தனித்துவமான பண்பாடு அமைகிறது. யதார்த்த வாழ்க்கையை படம் பிடித்து நிற்கும் இலக்கியங்கள் மக்களின் கவனிப்பைப் பெறுவனவாயுள்ளன. தமிழீழத்தின் மக்களின் வாழ்வியல் நிலைகளை அவர்களின் நம்பிக்கைகள், விருப்புகள், அவர்களை எதிர் நோக்கும் பிரச்சனைகள் போராட்டங்கள், ஒடுக்குமுறைகள், மொழிப் பயன்பாடு போன்றவை இரத்தமும் சதையுமாக இலக்கியங்களில் வெளிப்பாடு கொள்கின்றன.

இந்த இரத்தமும், மண்ணும் ஒட்டிய ஒவ்வொரு எழுத்தும் சக்தி வாய்ந்தவை. பற்றி பற்றி எழும் குணம் மிக்கவை.

மண்ணின் மணத்தை, காற்றின் அசைவை, எமது மக்களின் இதயத் துடிப்பை ஒலித்துக் காட்டுபவன.

இந்த உண்மை சத்திய வாழ்க்கையின் தரிசனமாகி நிற்கும் அவர்களின் எழுத்துக்கள் பேரிலக்கியங்களாக மிளிர்கின்றன.

குண்டு சுமந்த விமானம் எங்கள் தேசத்தின் வானப் பரப்பில் மூர்க்கமாகத் திரிகின்றது.

ஒரு பனை, ஒரு தென்னை, குலை தள்ளிய வாழை மண் குழி விழ புகைந்தெரிய மடிகிறது. எமது மக்கள் புயலுக்குள் நின்று, போருக்குள் வாழ்ந்து வாழ்க்கையை, சுதந்திரத்தைத் தேடுகின்றனர்; பேணுகின்றனர்; போற்றுகின்றனர்.

நாம் எம் தாய்த்தேசம் எழும் என்ற கனவில் வாழாதிருத்தல் கூடாது. இணைந்தும் தனித்தும் ஆற்றவேண்டிய கடமை நீளவே உண்டு. புலம் பெயர்ந்த எமது மக்களின் துன்பியல் நிறைந்த வாழ்க்கையை இலக்கியமாக்குவோம். எமது அடுத்த சந்ததியினரை இந்த சகதிக்குள் விழுத்தும் வகை தடுப்போம். இங்கு வாழும் எம் மண்ணின் இதயங்கள் பேசவேண்டும்; எழுதவேண்டும். எமது இதயத்தின் சாளரங்களைத் திறந்து வைப்போம். மனம் திறந்து பேசுவோம்.

கழுத்திலே நஞ்சைக் கட்டிக்கொண்டு, தோளிலே கருவியைத் தொங்கவிட்டுக் கொண்டு, கவிதை எழுதுகிறார்கள். அந்தக் கவிதைகள் நெருப்பு வரிகளாக இருக்கின்றன. புதிய தமிழ் இலக்கிய பரப்பில் இடம்பிடித்திருக்கின்றன. கூர்மை அடைந்த சிந்தனை வீச்சும், பிரபஞ்சமே தடையாக இருக்கக்கூடாது என்ற பேரெண்ணமும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அந்தப் போராளிக் கவிஞர்கள் படை அணித் தலைவர்களாகி நிற்கிறார்கள்; போரிடுகிறாகள். அவர்கள் எழுதிய கவிதையாகவே வாழுகிறார்கள். ஓவியத்தில், நாடகத்தில், ஆடலில், பாடலில், எழுத்தில் எனப் புதிய கவனிப்பும், புதிய பரிமாணங்களும், புது வேகமும் நிகழ்த்தும் பாய்ச்சல் இருக்கிறது.

நீண்டு கிடக்கும் பெரும்பணிச் சுமையை ஆற்றுவதற்கு இங்குள்ள எம்மண்ணின் எழுத்தாளர்கள், இலக்கியதாரர்களுக்குள்ள பங்கை உணர்வோம். இன்றைய காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு நடக்க முன்வருவோம். மொழி உணர்வு கொள்வோம். எமது மண்ணையும், எழுத்தாளர்களையும் அறிவோம். ●



இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும் உங்கள் உள்ளங்களில் உரசும் உணர்வுகளை எவ் இலக்கிய வடிவிலாயினும் எமக்கு ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுதி அனுப்பிவையுங்கள். சிறந்தவை பிரசுரிக்கப்படும்.

www.tamilarangam.net





# விறகு வெட்டும் தொழிலாளியின் ஒரு நாள் வாழ்வு

## -ஒரு சந்திப்பு-

காலங்களால்
கட்டுவிக்கப்பட்ட பாதைதான்
போராட்டமென்ற
புதுவழிப் பாதை.
கடந்து வந்த பாதை
நீளம்தான்
காலங்கள் வகுத்துப் பார்த்தால்
கண்களில் மிஞ்சியது சோகம்தான்

நேற்றைய நாட்கள்
நேற்றைய இரவுகளை விட
கொடுமையானது
கொடுங் கோலரின்
இரும்புப் பிடிக்குள்!

ஐம்பத்தெட்டு, எண்பது,
எண்பத்திமூன்று...
'அவைகள் உம் வயதல்ல
கலவரப் போர்வையுள்
காலனுடன் இணைந்த
கடந்த காலங்கள்.
முன்னர்
விழுவதும் எழுவதும்
மீசையில் பட்ட மண்ணை
தூசி துடைப்பதுமே
வாடிக்கையானது.
இன்று
விழ விழ எழுவதும்
ஒன்று விழ ஒன்பதாய் எழுவதுமே
நிதர்சனமானது.

வயதினைப் புறந்தள்ளி
முதிர்ந்த கனவுதானே
தமிழீழம்.
புலிகளின் சாகசம் கேட்டால்
முள்முருக்கைப் பூவும்
முறுவலிக்கும் - முற்றத்து
வேம்பும் சிலிர்த்துக் கொள்ளும்.
ஒண்டி வாழக் கிடைத்தது
திண்ணையானாலும்
உரிமையுள்ள
திண்ணையன்றோ!

ந. முரளிதரன்
சுவிஸ்லாந்து.

இவர்கள் அனேகமாக நாலரை மணிக்கு கூட்டம் கூட்டமாகவே விறகு பொறுக்குவதற்குச் செல்வார்கள். காரணம் பாம்புக் கடியில் இருந்தும் காட்டுப் பன்றி போன்றவற்றினால் வரும் அபாயங்களின் போதும், சைக்கிள் கம்பி உடைந்தும், றிம் வளைந்து அல்லது செயின் அறுந்து இடையில் நிற்கவேண்டியும் ஏற்பட்டால் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பதற்குமாகவே. (ஒருமுறை விறகு பொறுக்கச் சென்றவரை காட்டுப் பன்றி இடித்து காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையும் சிலருக்கு பாம்பு கடித்தது போன்ற சம்பவங்களையும் கூறினார்.)

யாழ். பகுதியிலிருந்து பளையிற்குச் சென்று பளையிலிருந்து கிட்டத்தட்ட ஐந்து மைல் வடக்குப் பக்கமாக அல்லது தெற்குப் பக்கமாகச் சென்று பட்டபாலைவேர் கிண்டி எடுத்துச் சேர்த்துச் சைக்கிளில் கட்டுகிறார்கள். விறகு கிண்டி எடுத்துச் சேர்க்க இரண்டு மணித்தியாலம் தேவைப்படும். இவ்விறகுகளை கரைக் காடுகளிலேயே இலவசமாகப் பெறுகிறார்கள். பொறுக்கி எடுத்த விறகுகளை சைக்கிளில் ஏற்றி தண்ணீருக்குள்ளாலும், சேற்றுக்குள்ளாலும் கொண்டுவர இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் எடுக்கும் எனக் கூறுகிறார். பின் ஒரு பிரச்சனையும் இல்லாமல் இருந்தால் யாழ்ப்பாணம் வந்து சேர மூன்று மணித்தியாலங்கள் பிடிக்கும் எனவும், இவற்றை யாழ் பகுதியில் வீதி வீதியாக விறகு!.... விறகு!... எனக் கூவி விற்றால் கிட்டத்தட்ட 250 ரூபா கிடைக்கிறது. இவ்வேலையின் போது பாவிக்கும் சைக்கிளுக்கு சராசரி கிட்டத்தட்ட முந்நூறு ரூபா செலவாகிறது. சில சந்தர்ப்பங்களில் மிகவும் கூடிய பாரமாயின் சிலவேளை செயின் அறும் அல்லது றிம் கம்பி உடையும். ஒரு கம்பி உடைந்தாலே சிலவேளை றிம் நெளிந்து விடும், சிலவேளை குடம் உடைந்துபோய்விடும். இப்படியாகப் பல கஷ்டங்கள் உள்ளதாகவும், செயின் அறுந்து திருத்த 15 அல்லது 20 ரூபா செலவாகும். சைக்கிள் கம்பி ஒன்றின் விலை ஏழு ரூபா ஐம்பது சதம். இப்படியாக இவர் ஒரே நாளில் 1000 ரூபா செலவு செய்த சம்பவமும் உண்டு என்கிறார்.

அனேகமாக கொடிகாமத்திற்கு அப்பால் ஒரு சாக்கு ஊமலின் விலை 25 ரூபா.

புதியவன் - தமிழீழம் -

பளையில் தென்னம்மட்டை ஒன்று (தேங்காய் மட்டை) 50 சதம். யாழ்ப்பகுதியில் 1. 25 சதம்.

காலை ஐந்தரை மணி தொடக்கம் ஆறு மணிவரை நாவற்குழியில் கூட்டம் கூட்டமாக வருவதைக் காணலாம். ஒரு நேர் ரோட்டில் நின்று பார்த்தால் ஒரே நேரத்தில் ஆகக் குறைந்தது 7 அல்லது 8 பேர் வந்து கொண்டிருப்பார்கள்.

காலை நாலரைக்குச் செல்பவர்கள் வீடு வந்து சேர கிட்டத்தட்ட 6 மணியாகிவிடுகிறது. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## நகர்ப்புறங்களில் விறகு ஒரு பிரதான பிரச்சினையாயிற்று

வன்னிப் பகுதியிலிருந்து விறகு எடுத்து வருவது போராட்ட சூழலால் தடைப்படலாயிற்று. பொருளாதாரத் தடை காரணமாக தொழில் வாய்ப்புக் களை இழந்த பலர் தமது ஜீவனோ பாயத் தொழிலாகக் கட்டு விறகு விற்பனையில் ஈடுபடலாயினர். வலிகாமம் வடக்கிலும், கிழக்கிலும் வாழும் பலர் வலிகாமம் தெற்குப் பகுதிகளுக்குத் தமது துவிச்சக்கர வண்டிகளில் விறகுகளைக் கட்டிக் கொண்டு சென்று விற்பனை செய்ய லாயினர். கொக்குவில் சந்தி, திரு நெல்வேலி, கந்தர்மடம், நல்லூர் முதலிய இடங்கள் பிரதான விறகு விற்பனைக்கான இடங்களாயின. இதனால் இராணுவ நடவடிக்கை யினால் இடம் பெயர்ந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் உழைப்பா ளிகளான கிராமப்புற மக்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றதோடு நகர்ப் புறத்தில் உருவான விறகு இல்லாப் பிரச்சினையும் தீர்த்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மலர் வெளியீடும் கலை வெளிப்பாடும்

## ஒரு நிகழ்வுத் தொகுப்பு

அண்மையில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் "மலர் வெளியீடும், கலை வெளிப்பாடும்" என்ற நிகழ்வு நடந்தது.

பி.ப 3-00 மணிக்கு ஆரம்பமாவதாக இருந்த நிகழ்வுகளுக்காக மக்கள் (போராளிகளும்) கூடத் தொடங்கினர்.

நிகழ்வுக்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளரும், முத்தமிழ் விழாப் பொறுப்பாளருமான திரு. தேவர் அவர்கள் தலைமை தாங்கினார். மரபுரீதியான மங்கள விளக்கேற்றலில் வன்னிப் பிராந்திய கல்விப்பிரிவுப் பொறுப்பாளர் திரு. டொமினிக் அவர்களும், செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி. ஜனனி அவர்களும் மங்கள விளக்கு சுடர் ஏற்றினர். மண்மீட்புப் போரில் வீரச்சாவெய்திய போராளிகளுக்கும், மற்றும் உயிர் ஈந்த எமது மக்களுக்குமாக உணர்வு பூர்வமான இரண்டு நிமிடங்கள் மௌன வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துப்பாவை திரு பொன். சுந்தரலிங்கம் அவர்கள் வழங்கினார். வழமையான வாழ்த்துப்பா வகையை மீறி, தமிழின் சிறப்பையும், போராட்டத்தையும், போராளிகளின் ஈகையையும் இந்த நாட்களின் நிகழ்வுகளையும் கொண்டபா, பொருளும் குரல் இனிமையும் இசையில் இணைந்து மெய்சிலிர்க்க வைத்தன. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. சிட்டு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.




மக்கள் கூட்டம் அங்கு நிறைந்து, வெளியேயும் குழுமியிருந்தது. திரு. தேவர் அவர்கள் தலைமையுரையில், விடுதலைப் புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற ஆயுதப்போராட்டத்திலே விடுதலைப் போராளிகளினதும், தமிழீழ மக்களினதும் ஆன்ம பலமும், மன ஊறுதியும் உந்து சக்திகளாக விளங்குவதுடன், மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துவிட்ட கலை, கலாச்சார பண்பாட்டு அம்சங்கள் இலக்கியங்கள் ஆகியனவும், விடுதலைப் போராட்டத்திலே பெரும் பங்களிப்புச் செய்வனவாக உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே எமது தேசியத் தலைவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமாக் கலை, பண்பாட்டுக் கழகத்தினை தோற்றுவித்தமையும், இதனூடாக இயல், இசை, நாடகம் என்ற தன்மையில் முத்தமிழைப் போற்றி வளர்க்க முற்பட்டமையும், காலத்திற்கேற்ற நிகழ்வாக உள்ளது. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இவ்வருடம் ஏற்பாடு செய்யப்பட்ட முத்தமிழ் விழாவை நடாத்தமுடியாத நிலை ஏற்பட்டது எனினும், விழா மூலம் செய்யவேண்டிய பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழீழ மண்ணிலே எதிர்வரும் ஆண்டில் முத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் விழா மகத்தான முறையில் கொண்டாடப்பட்டே தீரும், எனக் குறிப்பிட்டார்.

பிறகு 'எழுதாத கை உலக்கை' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நிகழ்ந்தது. பண்டிதர் வீ. பரந்தாமன் அவர்கள் தலைமை வகித்தார். திரு. செம்பியன் செல்வன், திரு. சபா ஜெயராசா, திரு. சி. சிவலிங்கராசா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

"30 இலட்சம் மக்களையும் 30 ஆண்டுகள் காலத்தையும் இதுகால வரையான எமது இலக்கியங்கள் சரியான பாதையில் இட்டுச் செல்லத் தவறிவிட்டது என்பதை, கடந்த காலங்களைத் திரும்பிப் பார்க்கிறபோது புரிகிறது. இது வேதனையைத் தருகிறது. எமது மண்ணின் பல கிராமங்களையும், கிராமத்து மக்களின் வாழ்வியலையும் நாம் சரியான முறையில் தரிசிக்கவில்லை - அல்லது வெளிப்படுத்தவில்லை என உணர்கிறேன். இன்று, காலம் எமக்குப் பல பாடங்களைப் படிப்பிக்கின்றது. இவற்றைக் கற்றுக்கொண்டு இனி இலக்கியங்களைப் படைக்க வேண்டும். இது நம் அனைவருக்குமான சமூகக் கடமையாகும்." என்ற செம்பியன் செல்வன் தன்னையும் சுய விமர்சனத்திற்கு உட்படுத்திப் பேசியது எல்லோரும் சிந்திக்க வேண்டியது.

இதன் பின்னர், சிவலிங்கராசா; "இந்தப் போராட்டத்தின் போது பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றை நாம் இலக்கியங்கள் ஆக்கவேண்டும். அவை வரலாற்றை கூறுவனவாகவும், இக்காலத்தை ஆவணப்படுத்துவதாகவும் அமையும்" என்றதும், சபா ஜெயராசா: "படைப்பாளியானவன் விடயங்களை உள்வாங்கி அடைகாத்துப் படைத்தல், படைப்பில் அனுபவம் அறிவு சார்ந்த வெளிப்பாடாக அமையும்" எனத் தெரிவித்ததும், கலை இலக்கியப் பிரக்ஞை உள்ளவர்கள் செயல்முறையில் ஈடுபடவேண்டிய தேவையை உணரக் கூடியதாக இருந்தது.

இந்தக் கருத்தரங்கில் எங்களுடைய வாழ்வியலுக்கான போராட்டம், இலக்கியவாதிகள் இன்று புரிய வேண்டிய அவசியமான பணி என்பன உணர்த்தப்பட்டன. முத்தமிழ் விழா மலர் வெளியீட்டில் தலைமையுரை ஆற்றிய திரு. தேவர் அவர்கள், "சென்ற ஆண்டு முத்தமிழ் விழாவையொட்டி மிகவும் சிறப்பான முறையில் முத்தமிழ் விழா மலர் வெளியிடப்பட்டது. இந்த வருடம் முத்தமிழ் விழா மலர், தமிழீழத்து அறிஞர்கள், படைப்பாளிகளின் ஆக்கங்களுடன் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. திட்டமிட்டபடி முத்தமிழ் விழாவினை குறித்த காலத்தில் நடாத்த முடியாமல் இருந்தாலும் முத்தமிழ் விழா மலரினை வெளியிடுமாறு எமது தலைவர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அதற்கமைய முத்தமிழ்விழா மலர் வெளியீடும், கலை வெளிப்பாடும் இடம்பெறுகிறது" என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் மலரை வெளியிட்டு வைக்க, செல்வி ஆர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார். இளங்குமரன் அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்துகையில், "கடந்த ஆண்டு முத்தமிழ் விழாவில் செய்யப்பட்ட பிரகடனங்களின்படி எமது பணிகள் நடந்து வருகின்றன. அவற்றில் குறிப்பிடும்படியாக, மொழியைப் பேணி வளர்ப்பதற்கான முயற்சிகளும், இசை மேம்பாட்டுக்கான 'இசைவிழாவும்' இதழ் வெளியீடும் குறிப்பிடக்கூடியன. இனியும் இத்துறைகள் தொடர்பான பணி தொடரும்" எனக் குறிப்பிட்டார்.

மலர் பற்றிய ஆய்வுரைகளை திரு. சொக்கனும், திரு. வி. பி. - சிவநாதனும் நிகழ்த்தினர்.

கலை வெளிப்பாடுகள் கவியரங்குடன் ஆரம்பமாகின. 'தாயை நிகர் எங்கள் தாயகத்தைக் காதல் செய்' எனுந் தலைப்பில் புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமையில் முழுமையும் போராளிக் கவிஞர்களே பங்கேற்றனர். இவ்விதமாய் அமைந்தது இதுவே முதற்த் தடவை எனினும், சமர்க்களத்தில் தாம்பெற்ற பட்டறிவினூடே வார்த்தை வார்த்தையாய் வெளிப்பட்டு, கவியரமாய் தொடுக்கப்பட்டதன் விளைவாய் உண்மைத் தன்மையும், உணர்வு பூர்வமாயும் கவிதைகள் அமைந்திருந்தன - ஒரு புறம் உரிமைப் போராட்டம் - எதிர்கால சந்ததியினரின் வாழ்விற்கான எழுச்சி நிகழ்ந்து கொண்டிருக்க, அந்நிய நாடுகளிற்குப் பறந்து கொண்டிருக்கும் எம்மினத்தில் ஒரு சாரார் மீதான நியாயமான கோபமும் கூட, அனைத்துக் கவிஞர் கவிதைகளிலும் வெளிப்பட்டன.

இனி, 'சீதன அம்புகள்' எனும் நாட்டிய நாடகம் பெண் போராளிக் கவிஞர்களால் நிகழ்த்தப்பட்டது. விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் உருவாக்கி அளித்த இந்த நாட்டிய நாடகம், அனைவரையும் வியப்பிற்குள்ளாக்கியதுடன் "இவ்வளவு கலைத்திறன் வாய்ந்தவர்கள் எங்கள் போராளிகள்" என நிமிரவும் வைத்தது.

நிகழ்வுகளின் நிறைவாக நாடக அரங்கக் கல்லூரி தயாரித்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' என்ற நாடகம் அரங்கிடப்பட்டது.

மாலையில் தொடங்கி முன்னிரவின் முடிவுவரை இந்த வெளிப்பாடுகள் நிகழ்ந்தன. முன்னர் நிகழ்ந்த கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் கலை, இலக்கிய வாதிகள் எனப்படும் ஒரு வட்டத்தினுள் அனேகமாக முடங்கிவிடுவன. இப்போது நிகழ்ந்து வரும் இவ்வகையான நிகழ்வுகள் கலை இலக்கிய வாதிகளுடன் பரந்துபட்ட மக்களையும் போராளிகளையும் மையங்கொள்ள வைத்து வருவது நிறைவாகவும், போராட்ட உந்துதலை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றன. பயனுள்ள இந்த எட்டு மணி நேரம் பயன் மிக்க பல நாட்களிற்கு.... ●●●

வெளிச்சம் தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்து கிராமியப் பேச்சுவழக்கு

## புதியன புகுதலும் பழையன கழிதலும்



உலகிலே தமிழ் மொழி போன்று சில மொழிகள் இலக்கிய வழக்கு - பேச்சு வழக்கு என்னும் 'இருவழக்குப் பண்பு' கொண்டனவாய் அமைந்துள்ளன. இவ்விரு வழக்குகளுள்ளும் பேச்சு வழக்கினையே மொழியியலாய்வாளர் முதன்மைப்படுத்தித் தம் ஆய்வுக்குட்படுத்தினர். பேச்சு வழக்கு இடத்துக்கிடம் வேறுபட்டதாக அமையும் பண்புடையது.

தமிழ் நாட்டிலே பேசப்படும் தமிழுக்கும், ஈழத்திலே பேசப்படும் தமிழுக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒலியடிப்படையிலே ஒரு கருத்தினை ஏற்றுக்கொள்ளும் உடன்பாட்டுக் கூற்றாகத் தமிழ்நாட்டார் "ஆம்" அல்லது "ஆமா" என்று கூற ஈழத்தவர் "ஓம்" என்று கூறுவார்கள். இதனால் தமிழ் நாட்டுக் "காப்பி" ஈழத்திலே "கோப்பி" ஆகவும், "வாங்க" என்பது "வாங்கோ" எனவும் உச்சரிக்கப்படுகின்றன.

சொற்களஞ்சிய அடிப்படையிலே தமிழ்நாட்டார் "சர்க்கரை" என்பது ஈழத்தில் "சீனி" ஆகின்றது. ஈழத்து வழக்கிலுள்ள "குழம்பு", "சொதி", "சம்பல்" போன்றன தமிழ்நாட்டு வழக்கிலே காணப்படவில்லை. "அவியல்" என்பது ஈழத்திலும் கேரளத்திலும் மீனிலே செய்யப்பட்ட பாற்கறியாக அமைய, தமிழ்நாட்டிலே காய் கிழங்கு வகைகளிலே அமைந்த அவியலாகக் கொள்ளப்படும். இவ்வாறு ஈழத்தவர் பேச்சுக்கும் தமிழ் நாட்டுப் பேச்சுக்குமிடையே பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்டமையை இனங்கண்டு அவற்றை விளக்குவதற்காக விபுலாநந்த அடிகள் "சோழமண்டலத்துத் தமிழும் ஈழமண்டலத்துத் தமிழும்" என்றொரு கட்டுரையினை எழுதினார்.

ஈழத்துத் தமிழிலேயே, வடபுலத்துப் பேச்சுவழக்கு தென்புலத்துப் பேச்சுவழக்கினின்று வேறுபடுகின்றது. யாழ்ப்பாணத்து "என்ன தம்பி" என்னுந் தொடர் "என்னம்பி" ஆகின்றது. "நாங்கள் என்ன செய்யிறது" என்னுந் தொடர் "நாம என்ன செய்யிற" என்றமைகின்றது. வடதமிழீழத்தில் "கத்தரிக்காய்" தென் தமிழீழத்தில் "வழுதுணங்காய்" என வழங்கப்படுகின்றது. இன்னும் திருகோணமலை, வன்னி, மன்னார், தீவுப் பிரதேசம் ஆகிய இடங்களிலே அவற்றுக்கெனச் சிறப்பான சொற்களும், சொற்றொடர்களும் வழக்கிலுள்ளன.


இடவாரியாகப் பேச்சு வழக்கு வேறுபடுவது போல பட்டினத்துக்கும் கிராமத்துக்குமிடையே பேச்சு வழக்கில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. புதிய கோலங்களும், மோடிகளும் பட்டினத்தவரிடம் வேகமாகவும் பரவலாகவும் வந்தடைகின்றன. கிராமத்தவர்களிடம் இவை உடனடியாகப் போய்ச் சேர்வதில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளிலே கிராமம் அல்லது ஊர் என்று சொல்லக்கூடிய இடங்கள் அருகிக் கொண்டே வருகின்றன. ஈழத்திலே கிராமங்கள் பெருவாரியாக உள்ளன. ஆட்சியேற்பாட்டுக்கு வசதியாக பட்டினம் எனப் பெயர் கொடுக்கப்பட்ட பகுதிகள் பல இன்னும் கிராமங்களாகவே உள்ளன. கிராமத்துத் தமிழ்ப்பேச்சு வழக்கு தனித்துவமான சில பண்புகளைக் கொண்டது.

கிராமத்துப் பேச்சு வழக்கிலே, பிறமொழிச் சொற்கள் விரைவிலே கலந்து விடுவதில்லை. அப்படிப் பிறமொழிச் சொற்கள் கலப்பினும், அவை தமிழ்மொழி ஒலியமைப்புக்கேற்பவே உச்சரிக்கப்படுகின்றன. பட்டினத்தவர் உச்சரிக்கும் "பஸ்" கிராமத்தாரிடம் "பசு" அல்லது "வசு" ஆகவும் "றைவர்" "இறைவர்" ஆகவும், "பிஸ்கற்" பிசுக்கோத்து அல்லது "விசுக்கோத்து" ஆகவும் அமைந்து விடுகின்றன. பிறமொழிக் கல்வியாலும் வேறு பல காரணிகளாலும் பட்டினத்தவர் பேச்சிலே பிபறமொழிச் சொற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# குறள் வெள்ளம்

இவ்வுலகில் உள்ள எல்லோராலும். எல்லாக்காரியங்களையும், சாதிக்க முடிவதில்லை. எதையும் செய்யத்தக்க மன உறுதியோ, உடல் வலிமையோ, திறமையோ அனைவருக்கும் சரிவர அமைதல் இல்லை.

சிலர் இக்காரியம் நம்மால் முடியாது என்று ஆரம்பத்திலேயே மனம் தளர்ந்து ஒதுங்கி விடுகிறார்கள். இவனா இதைச் செய்தான் என்று அனைவரையும் வியக்க வைப்பவர்களும் இருக்கிறார்கள்.

எனவே சற்றுச் சிந்தியுங்கள், உங்களைப்பற்றி நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். ஆராயுங்கள், மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டுவர முயற்சியுங்கள். ஏதோ ஒருதுறையில் நிட்சயம் நீங்கள் பிரகாசிக்கலாம்.
இப்படி சாதாரணமானவர்களால் சாதிக்கமுடியாத (செயற்கரிய) ஒன்றை நீங்கள் செய்தால் உலகம் உங்களை வியந்துநோக்கும் இதை விடுத்து அனைவரும்போலே உண்டோம், உறங்கினோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்றால் அந்த வாழ்வில் எந்தப் பெருமையும், இருக்காது. உலகம் உங்களை ஒரு பெரியவனாக அடையாளம் கண்டு கொள்ளமாட்டாது.

"செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

கள் பெருவாரியாக, தமிழ் ஒலியமைதிக்கு இயையாதனவாக இடம் பெறுகின்றன. ஆனால், கிராமத்தவருடைய பேச்சிலே இடம்பெறுஞ் சொற்களோ தமிழ் ஒலியமைதிக்கு இயைந்தே அமைகின்றன.

கிராமத்துப் பேச்சு வழக்கிலும் இப்போது சில மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்மாற்றம் ஒலியமைதியில் இல்லை; சொற்களிலேதான். பல காலமாகக் கிராமங்களிலே பயின்று வந்த சொற்கள் இக்காலத்தில் மறக்கப்பட்டு, புதிய புதிய சொற்கள் அவற்றினிடங்களைப் பிடித்துவருகின்றன.

கிராமங்களில் சமையல் செய்யும் இடம் "அடுப்படி" அல்லது "அடுக்களை" என்றே வழங்கிவந்தது. சில கிராமங்களில், மரக்கறி உணவு சமைப்பதற்கு ஓரிடமும், மீன், இறைச்சி போன்றனவற்றை ஆக்குவதற்கு இன்னோரிடமும் அமைத்துக் கொள்வதும் உண்டு. இவற்றை முறையே 'விரதக் கொட்டில்' என்றும் "மச்சக்கொட்டில் என்றும் அழைத்து வந்தனர். இப்பொழுது, பெரும்பாலான இடங்களில் "குசினி" என்னுஞ் சொல் ஆட்சிபெற்று வருவதைக் காணமுடிகின்றது. போர்த்துக்கேயருடைய ஆட்சிக் காலத்திலே பல போர்த்துக்கேய மொழிச் சொற்கள் தமிழர் பேச்சிலும் கலக்கத் தொடங்கின. அவ்வாறு கலந்த சொற்களுள் ஒன்று "குசினி" என்பதாகும். பட்டினப் பகுதியிலே பெருவழக்கில் இருந்த இச்சொல் கிராமத்துள்ளும் நுழையலாயிற்று. இப்போது ஆட்சிபெறவுந் தொடங்கிவிட்டது. இது போலவே, "திண்ணை" அல்லது "குந்து" என அமைந்த வீட்டமைப்பின் ஒரு பகுதி இப்பொழுது "விறாந்தை" எனப் பரவலாக வழங்கப்படுகின்றது. "விறாந்தை என்னுஞ் சொல்லும் நாம் போர்த்துக்கேய மொழியிலிருந்து பெற்றுக்கொண்டதொன்றாகும். வீட்டின் இன்னொரு பகுதியான வாயில் தொடர்பாக "தலை வாசல்" "சங்கடப்படலை" போன்றன கிராமிய வழக்கிலே இருந்து வந்தன. இவை இப்பொழுது வழக்கொழிந்து விட்டன. இவை வழக்கொழிந்து போனதும் ஒருவகையில் நன்று என்றே கூறவேண்டும். இவ்விரு சொற்களும் குறித்த பொருளின் பின்னணியிலே சமூக ஏற்றத்தாழ்வின் எதிரொலி உண்டு. "சங்கடப் படலை" பற்றி ஏற்கனவே நான் எழுதிய "டானியல் இலக்கியங்களிற் பேச்சுமொழி" (தமிழோசை, தமிழ் மன்றம், யாழ். பல்கலைக் கழகம், 1987, பக். 22) என்னும் கட்டுரையிலே விரிவாகக் கூறியுள்ளேன். இப்பொழுதெல்லாம், ஆங்கிலமொழிச் சொல்லாகிய "கேற்" கிராமப்புறங்களிலும் "கேற்று" என்ற வடிவில் வழக்கிலே வந்து கொண்டிருக்கிறது. "வாசல்" "வாசல்படி" என்பன இன்னும் வழக்கிலே இருக்கின்றன.

கிராமங்களிலே உண்கலம், நீர் குடிக்கும் கலம் எல்லாமே "ஏதனம்" என்ற சொல்லாலேயே வழங்கப்பட்டன. ஆனால், இப்போது "கோப்பை" என்ற சொல்லே பெருமளவு வழக்கிலிருந்து வருகின்றது. ஆங்கிலச் சொல்லின் தமிழ் ஒலிக்கேற்ப அமைந்த வடிவமாகிய "கோப்பை" பெரும்பாலும் எல்லா வீடுகளிலுமே ஒலிக்கின்ற சொல்லாகிவிட்டது. பொருட்களைச் சேகரித்து வைக்கவும், பிற இடங்களுக்குக் கொண்டு போகவும் பயன்படும் பொருள் "உமல்" என்றே கிராமங்களில் அழைக்கப்பட்டு, பயன்பட்டும் வந்தது. இப்போது "உமல்" தன் ஆயுளை இழந்துகொண்டு வந்துவிட்டது. தோலாலும், சீலையாலும் பல்வேறு வகையான பைகள் இக்காலத்தில் நம்முடைய பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. "உமல்" பெற்ற இடத்தை "பை" (சில சந்தர்ப்பங்களில் "பாக்") பிடித்துவிட்டது.

பெண்களுடைய ஆடையணியுடன் தொடர்பான "கொய்யகம்" "உடுத்தாடை" போன்ற சொற்கள் கிராமத்திலும் இப்பொழுது வழக்கிழந்து வருகின்றன. சீலை கட்டும் பொழுது, அதன் மடிப்புகளைக் கொய்து முன்னாலே செருகிவிடல் அல்லது பின்னாலே செருகிவிடலைக் "கொய்யகம்" என்றனர். முன்னாலே செருகின் "முன்கொய்யகம்", பின்னாலே செருகின் "பின்கொய்யகம்" எனப் பட்டது. பெண்களின் ஆடை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணிகளிலே வேகமாக ஏற்பட்டு வரும் மாற்றமே இத்தகைய சொற்கள் வழக்கிழந்து போனமைக்குக் காரணமாகும்.


நீண்ட காலமாகக் கிராமப் புறத்திலே வழக்கில் இருந்து வந்த சில சொற்றொடர்கள், யாராவது மறைவாகத் தமக்குள்ளே பேசிக்கொண்டாலன்றி, வெளியாகப் பேசிக்கொள்ளும் வழக்கம் போய்விட்டது. நான் இங்கே குறிப்பிடுவது சமூக ஏற்றத் தாழ்வு தொடர்பாகப் பல் காலம் பயன்பாட்டில் இருந்து வந்த சொற்றொடர்களேயாகும். எடுத்துக் காட்டாக "வாய் நனைத்தல்" என்னும் தொடரைக் குறிப்பிடலாம்.

இப்பொழுது இத்தகைய தொடர்களுக்கு இடமில்லாதபடி சமூக மாற்றங்கள் நிகழ்கின்றன. இவ்று இவைகள் போயொழிய, காலத்தின் கோலங்களாக, சில புதிய சொற்கள் வந்து சேருகின்றன. குண்டுவீச்சு விமானத்தைக் குறிக்கும் "பம்பர்" , ஹெலிக்கொப்டர் விமானத்தைக் குறிக்கும் "ஹெலி" போன்றவையும், பதுங்கு குழி என்னுந் தமிழ்த் தொடர் இருப்பினும் "பங்கர் வெட்டல்" எனப் பரவலாக பயன்படும் தொடரும் தமிழர் பிரதேசத்திலே நிலவிவரும் போராட்டகாலச் சூழ்நிலையின் விளைவுகளோடானவை. இவைபோன்று பல தொடர்கள் இக்காலச் சூழலுக்கேற்ப வழக்குப்பெற்று வருவதுடன் அவை இலக்கிய இடம் பெற்றுக் கொள்கின்றன.

மேற்காட்டிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மொழியின் சில பண்புகளை நோக்கும் போது, எம்முடைய வாழ்க்கையின் பல்வேறு கூறுகளிலே ஏற்படுவது போன்று மொழியிலும், பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையான நிகழ்வேயாகும். இவ்வாறு நிகழ்வதற்குப் பலகாரணிகள் உண்டு. அரசியல், சமூக, பண்பாட்டு விழுமியங்களிலே ஏற்படும் மாற்றம் இத்தகைய நிகழ்வுக்கு தலையாய காரணியாகிவிடுகின்றது. எம்முடைய சமூகத்திலே, ஆண்பிள்ளை ஒருவன் "கடுக் கண்ட", போதிலும், அதனைக் கொண்டாட்டமாக ஆக்குவதில்லை.

ஆனால், பெண்பிள்ளை ஒருத்தி "சாமத்தியப் பட்டால்" அல்லது "புத்தியறிந்தால்" அது கொண்டாட்டத்திற்குரியதாகி வந்துள்ளது. ஒரு பெண் கருத்தரிக்கும் புதிய உயிர்களைத் தருபவளாகிறாள் என்னுஞ் செய்தி கூட்டுக் குடும்ப காலத்திலே உவப்பாக இருந்தது. கால ஓட்டத்தில் இந் நிகழ்வு எக்காலத்தும் எங்கும் நிலவும் ஓர் இயற்கை நிகழ்வே. அதனை ஒலிபெருக்கி வைத்து ஊரொல்லாம் அறிவித்துக் கொண்டாட வேண்டிய தேவையில்லை என்னும் உணர்வு மக்களிடையே பரவ, அந்நிகழ்வு தொடர்பாக வழங்கி வந்த மேற்குறிப்பிட்ட சொற்தொடர்களும், "குப்பைத் தண்ணிவார்த்தல்", "கொத்தாலே ஆலாத்தி" எனப்படும் பல்வேறு வகையான தொடர்களும் வழக்கிழந்து போவது விந்தையான நிகழ்வல்ல. உலகின் பல மொழிகளிலே இத்தகைய பண்பாட்டு மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களை மொழியியலாளர் இனங்கண்டு விளக்கியுள்ளனர்.

சில கிராமங்கள் அல்லது மக்கட் கூட்டங்கள் மொழியின் சில பழைய தனித்துவமான கூறுகளைப் பேணிவைக்கும் பண்பினையும் காணக்கூடியதாயுள்ளது. இது வரலாற்றுத் தன்மை பொருந்திய பண்பாகும். பழந்தமிழ் மொழியிலே மூன்று வகையான சுட்டுக்கள் வழங்கிவந்தன. பேசுபவன் தனக்கு அருகிலுள்ளதைச் சுட்ட "இ"யினையும், கேட்பவனுக்கு அருகிலுள்ளதைச் சுட்ட "உ"வினையும், இருவருக்குமே தூரத்திலுள்ளதைச் சுட்ட "அ"-வினையும் சுட்டுக்களாகத் தமிழிலே பல காலமாகத் தமிழர் பயன்படுத்தி வந்துள்ளனர். யப்பானிய மொழி, துருக்கி மொழி, மொங்கோலிய மொழி ஆகியனவற்றிலும் இவ்வாறு மூன்று சுட்டுக்கள் பயன்பட்டு வருகின்றன. ஆங்கிலம் போன்ற மொழிகளில் "This", "That" என இரண்டு சுட்டுக்களே இருக்கின்றன. தமிழ் மொழியிலே பயன்பட்டுவந்த இம் மூன்று சுட்டுக்களுள், இன்று தமிழ் நாட்டிலே இரண்டு சுட்டுக்கள் மட்டுமே (இ, அ) பேச்சு வழக்கிலே பயன்பட்டு வருகின்றன. "உழவன்", "உவர்", "உது", "உந்த", "உவ்விடம்", "உப்படி" எனவருஞ் சொற்களைத் தமிழ் நாட்டுப் பேச்சிலே மருந்துக்கும் கேட்கமுடியாது. ஆனால் ஈழத்திலே, யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் உந்தச் சொற்களை எந்நாளும் கேட்கலாம். பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்க முடியாத நெறி. மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல. ● ●




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற பிள்ளைகளைக் காணும் போதும், அவர்கள் வாயார, மனமார 'அம்மா, ஐயா' என அழைக்கும் வேளையிலும் எனது மகள் இறந்து விட்டாள் என்ற எண்ணமே எனக்கு மறந்துபோய் விடுகின்றது. எங்கோ அவள் உயிருடன் இருப்பதாகவே இப்போதும் நினைத்து வாழ்கிறேன்.

நான் இழந்தது ஒரு பிள்ளையைத்தான். ஆனால் எனக்கு இப்போது எத்தனை பிள்ளைகள் தெரியுமா? கணக்கிட முடியாது. எப்போது பார்த்தாலும் யாராவது ஒரு பிள்ளை 'அம்மா' என்றழைத்தபடி என் முன்னே வந்து நிற்கும். அவர்களைக் காணும்போது எனது வேதனைகளை மறந்துவிடுகின்றேன். ஒரு தாய் தனது பிள்ளைகளுக்கு உணவு படைப்பது போலத்தான், நானும் இவ் வேலையைச் செய்கின்றேன். சுமையாக இல்லை. ஆத்ம திருப்தியையே இது தருகின்றது.

மேலும் எங்களால் இயன்ற ளவு, உடலில் உயிர் உள்ளவரையிலும் விடுதலைக்கான சேவையையே செய்ய உள்ளோம். மனதில் வேதனை ஏற்படுத்திய காயம் இப்போது ஆறி வருகின்றது. எனது இளைய மகனும் ஆனையிறவுப் போரின்போது காயம் அடைந்திருந்த வேளையில் எனது மனம் அவனுக்காக மட்டுமல்லாது, அனைத்துப் போராளிகளின் சுகத்திற்காகவுமே இறைவனிடம் வேண்டிக்கொண்டது. மேலும் இறுதி மூச்சுவரையிலும் எனது சேவை இந்த நாட்டிற்காகவே தொடரும் என்றார்.

அவ்வன்னையின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க மதிய உணவை உண்ட பின்னர் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டபோது அம்மா கூறினார். "போறீங்கள், ஆனால் இந்தப் பகுதியால நீங்கள் எப்ப வந்தாலும் ஒரு முறை எட்டி 'அம்மா, ஐயா எப்படி இருக்கிறீங்கள்?' என்று கேட்டால், அதுவே எங்களுக்குப் போதுமம்மா" என்று அன்புடன் கூறி எங்களை வழியனுப்பி வைத்தனர் அந்த அன்புப் பெற்றோர்கள். ● ● ●

பொன்னிலா

# விதி சமைத்தவர்கள்

மலரென்றும்
புள்ளி மானென்றும்
மனைச் சிறையில்
ஜடப் பொருளாக
தனிச் சுமை
என்றிருந்தவர்கள்.
சுழல்கின்ற காலம்
மீள வருகின்ற போது
தன் நிலை கண்டு



(தனி) விதி சமைத்தவர்கள்
விழுகின்ற வாழ்நிலை
நிலையொன்றமைக்க
கனல்கின்ற கருவி
கரங்கொண்டெழுந்தவர்கள்.

சிதைகின்ற தமிழ்
ஈழநிலம் வீரம் விளைகின்ற
செந்தளமாக்கியவர்கள்.

ம. வரதன், ஜேர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னொரு காது போர்

இன்னொரு காது போர்

இன்னொரு காது போர்

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு நல்ல மகிழ்ச்சியான வாழ்வுக்காக ஏங்கினேன். அழகிய வீடுகள், வானளாவிய மாடிகள், பல விமானங்கள், நவீன வாழ்க்கைவசதிகள் நிரம்பிய அமெரிக்காவே எனது இலட்சிய பூமியாக நான் எண்ணினேன். ஏனென்றால் என் வாழ்வு கம்போடியாவில் அவ்வளவு மோசமாக, பரிதாபகரமானதாக இருந்தது. கம்போடியக் காடொன்றில் அகதி முகாமில், சேற்றிலும் அழுக்கிலும் மூக்கைத் துளைக்கும் நாற்றத்திலும் என் இளமை கழிந்தது. நரகவாழ்வாக அதனைக் கருதினேன். போரிலிருந்தும் படுகொலைகளிலிருந்தும் விடுபட விரும்பினேன். கம்போடியாவை நான் வெறுத்தேன். இறுதியில் ஒருவாறாக அமெரிக்கா வந்தடைந்தேன். புதுவாழ்வு கிட்டிற்று என எண்ணினேன். இனி போர், வறுமை இல்லை. தப்பிவிட்டேன் என பெருமூச்சு விட்டேன். கம்போடியக் காடுகளில் கழுதைகள் போலவே வாழ்ந்த வாழ்வு முடிந்ததாகக் கருதினேன். ஆனால் நடந்தது என்ன? என்னைப் போல் ஒரு வந்தேறுவாசிக்கு அமெரிக்கா சொர்க்கமாகத் தெரியவில்லை இன்று. இந்நாடு வேறொரு காடாகவும், இங்கு நடப்பது வேறொரு வகைப் போராகவும் எனக்குப் படுகின்றது. இங்கு வீசும் இந்த நாற்றமும் கம்போடிய நாற்றம் போலவே இருக்கின்றது.

இங்குள்ள சாதாரண அமெரிக்கன் எங்களைப் பற்றி என்ன நினைக்கின்றான். இவர்கள் மிகக் கடுமையாக உழைத்து வசதியாக வாழ்கிறார்கள் என நினைக்கிறான். முன்பு ஒருவேளை அப்படி இருந்ததோ தெரியாது, ஆனால் இன்று அப்படியில்லை. வசதியான வாழ்வொன்றினை இங்கு வாழ விரும்பினால் பொய்யனாக, மோசக்காரனக இங்கு மாறவேண்டும். அல்லாவிட்டால் என் பெற்றோர் போன்று சேரிப்புறங்களிலே மோசமான வீடுகளிலிருந்து விடியற்காலை 3 மணிக்கு எழுந்து வேலைக்குச் சென்று மாலைவரை உழைக்க வேண்டும். அப்படியாயின் என்னைப் போன்ற சிறுவர்களை கல்விக்கூடம் அனுப்பமுடியாது. அதற்கான பணவசதி குடும்பத்தில் இராது. நீயும் உழைக்க வேண்டும். பெற்றோரின் அன்போ, அரவணைப்போ உனக்குக் கிட்டாது. நீ தனியனாகி விடுவாய். இறுதியில் உன் கதை இப்படித்தான் ஆகும். போதைப் பொருட்களை விற்பாய், நீயும் உட்கொள்வாய், போட்டிச் சண்டைக் குழுக்களில் சேருவாய், ஓயாமல் போதையால் ஈடுபட்ட சண்டைக்காரனாய் மாறுவாய். மற்றவர்களைச் சுடுவாய். காவல்துறை மீதும் நீ சுடுவாய். அவர்களும் உன்னைச் சுடுவர். இறுதியில் இளம் வயதில் நீ மரணிக்க நேரிடும். வெறுப்பு எனும் நஞ்சு விதைக்கப்பட்ட இவ் அமெரிக்க சமுதாயத்திலே முட்டாள்தனமான கோபக்காரனாய் நீ மாறுவாய். இவ்வாறு வாழ்வதை விட எப்படியும் வாழ்ந்து விரைவில், இளம் வயதில் இறப்பதே மேல் என்ற முடிவிற்கு நீ வருவாய்.

இன்று அமெரிக்காவை நான் வெறுக்கிறேன். எனக்கு முன்னர் உணர்த்தப்பட்ட நாடல்ல இது. நான் இங்கு காண்பது என்ன? தெருவெங்கும் உடைந்த பியர் போத்தல் துண்டங்கள். வானமே கூரையாகக் கொண்டு அலையும் வீடற்ற குடிகாரர் கூட்டம். 'நீ நாசமாய்ப் போவாய்' என்ற இழி சொற்களைக் கேளாமல் நான் எவ்வீதியாலும் திரிந்தது கிடையாது.

மீண்டும் நான் வெறுப்பு, காழ்ப்பு என்னும் நச்சுச் சிலந்தி வலைக்குள் சிக்கிவிட்டேன். போரிலிருந்து படுகொலைகளிலிருந்தும் தப்பி வந்தவன் இங்கு வேறொரு வகைக் காட்டில்-இன்னொரு புதிய போரில் சிக்கி விட்டேன். வெறுப்பையும் காழ்ப்பையும் உமிழும் புதிய போர் இது.

-பாலகுமார்-

## அமெரிக்க இனவாதம்

அமெரிக்காவின் கடந்த 25 வருடகால வரலாற்றிலேயே காணப்படாத கலவரம் அண்மையில் லொஸ்ஏஞ்சலஸ் நகரிலே நடந்து முடிந்தது. உலகத்தின் மனச்சான்றினை உலுப்பிய இக்கலவரம் அமெரிக்காவின் உண்மை முகத்தினை அம்பலப்படுத்திற்று. றொட்னி கிங் என்ற கறுப்பினத்தவர் வெள்ளை இன காவல்துறையினரால் மோசமாகத் தாக்கப்பட்டார். தற்செயலாக இதனைக் கண்ணுற்ற ஒருவர் அதனை வீடியோவாக்கினார். நீதி மன்றத்தில் நீதி பிறழ்ந்தது. காவல்துறையினர் விடுதலை செய்யப்பட்டனர். உலகமே இத்தீர்ப்பினைக் கண்டித்தது. தொடர்ந்து கலகம் மூண்டது. வீடியோவில் 81 செக்கனே நீடித்த பொலிஸ் தாக்குதல் பெரும் கலவரமாக 72 மணித்தியாலங்கள் நீடித்தன. இப்படியான கலகங்களில் ஈடுபடக்கூடிய ஆசிய வாலிபனொருவனின் மனநிலை இங்கே பிரதிபலிக்கப்படுகின்றது.

இக் கம்போடிய வாலிபன் 9 வருடங்களின் முன் தனது 10 வயதில் அமெரிக்காவில் வந்து குடியேறியவன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1984 கார்த்திகையில் தமது எழுபதாவது வயதினில் காலமான சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள், மலையக இலக்கிய முன்னோடிக ளில் ஒருவர். ஆங்கிலத்தில் கல்வி கற்று ஆசிரியராகக் கட மையாற்றிய அவர், முதலில் ஆங் கிலத்திலேயே இலக்கியங்களைப் படைத்தார். 1934இல் கவியரசர் தாகூர் இலங்கை வந்தபோது, தான் ஆங்கிலத்தில் எழுதிய விஸ் மாஜனி என்ற இசைநாடகத்தை அவரிடம் காட்டி, ஆசியினைப் பெற்றார்; தொடர்ந்து கவிதை, உரைநடைக்கவிதை, நாவல் என் பவற்றை ஆங்கிலத்தில் எழுதி னார். ஆங்கிலத்தில் எழுதிய 'சி. வி.' இலங்கையிலும் இந்தி யாவிலும் சிறந்த இலக்கியவாதி என்ற அங்கீகாரத்தையும் பெற்ற வர். பிற்காலத்தில் தமிழிலும் படைப்புக்களை உருவாக்கினார்.

இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைகள், எனக் குறிக் கப்படும் மலையகத் தமிழரின் உண்மையான துயர வரலாறு 182-5இல் ஆரம்பமாகின்றது. அந்த ஆண்டிலிருந்துதான் கோப்பிச் செய்கைக்காக, தமிழ்த் தொழி லாளர்கள் வரட்சியும் பஞ்சமும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்த தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களில் இருந்து 'ஆள்கட்டி' களினால் திரட்டப்பட்டு, இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். "கண்டிச் சீமையில் கோப்பித் தூரில் தேங் காயும் மாசியும் விளைகின்றது. ஆற்று மண்ணில் தங்கம் விளை கின்றது, காது நிறைய நகை போடலாம் இடுப்பு நிறையச் சேலை கட்டலாம்." என்று ஆசை வார்த்தைகள் கூறி ஏமாற்றியே, இவர்கள் திரட்டப்பட்டனர். கடற் பயணத்தில் படகுகள் கவிழ்வதி

வெறும் தரவுகளாயும், புள் ளிவிபரங்களாயும் இருக்கும் வர லாற்றுக்கு இரத்தமும் சதையும் கொடுத்து, உயிரும் உணர்வும் ஊட்டும் பணியினை கலை-இலக் கியங்களே செய்யமுடியும். 'சி. வி.' என்ற கவிஞன் கண்டு, கேட்டு, உய்த்து உணர்ந்ததான வாழ்நிலை அனுபவங்கள், மெல்லுணர்வும் கலையுணர்வும் கொண்ட அவரது ஆளுமையினூடாக உருமாறி, கவிதையாக -இலக்கியமாக வெளிப்படுவதையே 'தேயிலைத் தோட்டத்திலே....' நூலில் காண் கிறோம்.

காலையில் தொழிலாளரை வேலைக்கழைக்கும் பேரிகையின் ஒலி எழுப்பும் எண்ண அதிர்வுக ளைப் பதிவு செய்வதான கட்ட மைப்பில் விரியும் இக்கவிதை நூல், இப்படித்தான் ஆரம்பிக்கி றது;

# சி.வி.வேலுப்பிள்ளையின் தேயிலைத்தோட்டத்திலே

தனது வாழ்வின் பிந்திய 45 ஆண்டுகளை மலையகத் தமிழ ரின் வாழ்வு மலர்ச்சிக்காக அர்ப்ப ணித்து, தொழிற்சங்க -அரசியற் துறைகளில் உழைத்த அவர், இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தில், தலவாக் கொல்லத் தொகுதி உறுப்பினரா கவும் (1947 -1952) இருந்தார். அவருக்கு மிக்க புகழைப் பெற்றுக் கொடுத்த 'In Ceylon's Tea garden' என்ற நீண்ட கவிதை நூலை, மலையகக் கவிஞரும் ஓவியரு மான சக்தி அ. பாலையா தமிழில் அருமையாக மொழிபெயர்த்துள் ளார். அதுவே தேயிலைத் தோட் டத்திலே.... என்ற பெயரில், 196-2இல் நூல் வடிவில் வெளிவந்துள் ளது.

லும், மன்னாரில் தொடங்கிய காட் டுவழி நடைப் பயணத்தில் காட்டு மிருகங்களினாலும் நோய்களினா லும் பட்டினியாலும் ஏராளமா னோர் மடிந்தனர். எஞ்சியோரே மலையகத்தை அடைந்து காடு களை அழித்து, கோப்பி -தேயி லைத் தோட்டங்களை உருவாக் கினர்; கட்டிடங்களை அமைத்த னர்; பாதைகளையும் பாலங்க ளையும் போட்டனர்; நகரங்களை உருவாக்கினர். வாழ்நாள் முழுதும் இரத்தமும் வியர்வையும் கண்ணீ ரும் சிந்தி அவர்கள் உழைத்த போதும், சவுக்கடிகள் பட்ட படி -உரிமைகளற்றவராய் -கொடிய சுர ண்டல்களுக்கு உட்பட்ட 'மக்கள் கூட்டத்தினராய்' வாழவே நிர்ப்பந் திக்கப்பட்டனர் என்பது வரலாறு.

பேரிகைக் கொட்டெழு
பேரொலித் துடிப்பும்
புலர்த லுணர்த்தப்
புரளுமாம் வைகறை
சஞ்சலம், வேதனை,
சாதல், அழிவு,
சகலமும் ஒன்றென
சார்ந்தவ் வேளைக்கண்-
இன்பமே அறியா
எம்மவர் சீவிய
எதிரொலித் துடிப்பென
எழும் பேரிகை ஒலி

இங்கெவர் வாழவோ' உழைத்து உழைத்து மாண்டுபோ கும் தோட்டத் தொழிலாளியை நினைப்பவர் இல்லை; பொருட்ப டுத்துவாரும் இல்லை. அவர் களை யாரும் ஒரு பொருட்டாகவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதியாத கசப்பான நிலைமையைக் கழிவிரக்கத்துடன் கூறும் வரிகள், நெஞ்சைப் பிசைவனவாகும்.

புழுதிப் படுக்கையில்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகல் மொழி இல்லை.
பழுதிலா அவர்க் கோர்
கல்லறை இல்லை;
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை.
ஊனையும் உடலையும்
எட்டி இம் மண்ணை
உயிர்த்த வர்க்(கு) இங்கே
உளங்கசிந் தன்பும்

பூணுவாரில்லை - அவர்
புதைமேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே!

■ ■ ■

ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்

சுரண்டலினால், உழைப்போர் நலிந்து மெலிய, சுரண்டுவோர் சுகமாய்க் கொழுப்பது வெறுப்பூட்டும் முதலாளித்துவ அமைப்பின் நியதி. மலைப்புறத்திலும் 'இதே கதைதான்' நிகழ்கிறது:

பொன்னை விளைக்கும்
எந்தமிழ் மக்களின்
பிச்சைக் கரங்கள்
பொலிந்த செல்வத்தால்

சின்ன துரைக்கும்
பெரிய துரைக்கும்
சித்தம் போலவே
சீவியம் உயரும்.

யாரோ சிலரின்
சுவர்க்க இன்பமாய்
ஆச்சுதே என் மக்கள்
ஆக்கிய பூமி!

ஒருபுறம் உழைப்பின் 'தாங்காச் சுமையைத் தாமே சுமந்து தளிர் இளம் மாதர்' சோர்கின்றனர்; மறுபுறம் பாலியற் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

எழில் மிகு குமரியர்
வாழ்வைக் கெடுப்பதை
இங்கவர் சீவியம்
பாழ்படச் செய்வதை
பொழியும் வானமும்
அன்னை பூமியும்
பொறுக்குமோ உள்ளம்
பொறுக்குமோ - அந்தோ!

துயர் நிறைந்த வாழ்க்கைக்கு 'மறுபக்கமும்' இருக்கிறது. 'இடர் களைந்து இனிமை சேர்க்கும் உயிரின் ஓயா முனைப்பிற்கு' இவர்களது வாழ்விலும் இடம் இருக்கிறது.

வாழ்க்கையின் இனிய
ஆசையை அள்ளி
வீசும் நிலவொளி
வாலிபர் - குமரியர்

வாழ்க்கைத் துணையையும்
வரிக்கச் செய்வதால்
வஞ்சமே இல்லாக்
குழந்தைகள் பிறக்கும்

பொங்கல், புத்தாண்டு, தீபாவளிப் பண்டிகை நாட்கள், கசந்த வாழ்வில் மகிழ்ச்சிச் சுடர் வீசுவனவாகும்.

நாட்டுக் கீதமும்
நட்டுவக் கூத்தும்
கும்மி ஓயில்
கோலாட்டம் முதல்

பாட்டுடன் தம்பூர்
மத்தளம் உறுமி
பலப்பல வண்ணப்
பண்ணிசை முழங்க....

அந்நாட்களில் மகிழ்ச்சியில் ஆழ்கின்றனர்.

கடந்தகால - நிகழ்காலத் துயரங்களை இல்லாது ஒழிக்கும் நிலைமைகள் மலையகத் தமிழ் மக்களிடையில் ஏற்படும் -ஏற்பட வேண்டும் என்ற நம்பிக்கைக் குரலுடன், இந்நீண்ட கவிதையைக் கவிஞர் முடித்து வைக்கிறார்:

கட்டி வதைக்கினும்
சுதந்திரத் தீச்சுடர்
கனவின் எழுச்சியை
அழிக்கவும் போமோ?

தோப்பு மரங்களைப்
பிளந்திடும் போது
தெறிக்கும் தீப்பொறி
தொடராது போமோ?

■ ■ ■

நூற்றாண்டு காலமாய்
நுழைந்த இவ்விருட்டை
வேரோடழிக்க
என்தமிழ் மக்கள்

கூறுவர் சிகர
உச்சியில் ஏறிக்
கூறுவர் திடல்கள்
யாங்கணு மடுக்கவே.

விடுதலைக் குரலது
வெற்றிக் குரலது
வீரக்குரலது
விரைந்தெழும் கேட்பீர்!

'பாட்டினையே பாட்டாய்ப் பெயர்க்கும் பணி பெரிது' என்றார் எங்கள் மஹாகவி. ஆங்கில மூலத்தின் உணர்வுநலன் சிதையாது, தமிழில் ஆக்கப்பட்ட முதன் நூலே போன்று மறுபடைப்பாக ஆக்கித் தந்த கவிஞர் சக்தீ அ. பாலையா, பாராட்டப்படவேண்டியவர். இவரது 'இனிப் படமாட்டேன்'; 'வீடற்றவன்'; 'நாடற்றவர் கதை' போன்ற நூல்களும் அனைவரும் வாசித்து அறிய வேண்டிய சிறந்த நூல்களாகும்.

அ. யேசுராசா-தமிழீழம்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

தங்கள் எரிமலை இதழின் வாசகர்களில் நானும் ஒருவன். தங்கள் மார்கழி இதழில் வெளியான 'களத்திலிருந்து ஒரு கடிதம்' என்னை சில வினாடிகள் மெய் மறக்க வைத்தது. புரட்சி எழுத்துக்களால் எம்மை சிந்திக்க வைக்கும் எரிமலை வளர என் இனிய வாழ்த்துக்கள்.

இங்ஙனம், பொ. பிரசாந்தன்

### அன்பின் எரிமலை ஆசிரியர்களுக்கு!

எரிமலை தவறாது வாசிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். தாய் மண்ணின் கலை, பண்பாட்டு, அரசியல் உணர்வை வெளிப்படுத்தும் சஞ்சிகையாக எரிமலை இருக்கிறது. எரிமலை மூலம் நான் எங்கள் தாய் மண்ணின் உண்மைச் செய்திகளை வாசித்து அறிந்தேன். எரிமலை சஞ்சிகை தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
பிரான்சிஸ், ஜேர்மனி.




எரிமலை எரிமலை
எட்டுத் திக்கிலும்
ஏகாந்தமாய் வரும்
எரிமலை எரிமலை
எந்தமிழ் கூறும்
எழில் மலை.

தீ நாக்குகள்
திசையெல்லாம் பரவி
தீந்தமிழை முழக்கி
தீயதை அழித்து
தீப ஒளியாய் ஒளிரும் -தீ
எதிரிக்கு எரிமலையாய்
வெடிக்கும்.

பொய்மையை போக்கி
வாய்மையை கூறி
வையத்தை சூழி
பையவே பவனி வரும்
பகைவரை எரிக்கும்
அடிமையை ஒழிக்கும்

அணையா எரிமலை
அழித்திடும் எதிரியை
சுடராய் பறந்திடும்
சுட்டெரிக்கும் பகைவரை
சுதந்திர ஈழத்தை
சுற்றம் காக்கும் எரிமலை.

முரதூர்
தி. தாமரைக்கண்ணன்.

### அன்புடையீர்!

வணக்கம். கார்த்திகை, 1992 'எரிமலை' இதழ் கிடைக்கப் பெற்றேன். இதழ் மிகவும் சிறப்பாகவும் உள்ளது. எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
தண்டபாணி-தமிழ் நாடு.

### இனிய 'எரிமலை' ஆசிரியர்க்கு!

புதிய எரிமலையின் செழுமை கண்டு மகிழ்ச்சி.

சி. சிவஞானசுந்தரம், ஜெர்மனி.

### அன்புடன் 'எரிமலை' ஆசிரியர்கட்கு!

உங்கள் எரிமலை இதழை மாதாந்தம் படிக்கும் தமிழ் மக்களில் நானும் ஒருவன். உங்கள் கார்த்திகை இதழ் மிகவும் தரத்தில் உயர்ந்ததாக உள்ளது. மேலும் இந்த மாத இதழில் தலைவர் வே. பிரபாகரனைப் பார்க்கும் ஆவலில் இருக்கும் ஒரு மூதாட்டியின் தவிப்பும், தன்னுயிர் தன் குடும்பம் என்றெண்ணாது விடுதலைக்காகத் தம்மை வித்திட்ட வேங்கைகளுக்காக பணி செய்த அன்னை திருமதி ஞா. சிவக்கொழுந்து அவர்களின் விடுதலை உணர்வும், 'தாய் நிலத்தைக் காதல் செய்' என்னும் கவிதையும் அனைத்தும் மிகவும் உணர்ச்சி பூர்வமாக உள்ளன. அடுத்த இதழில் இன்னும் பல நாட்டு நிலமைகளை வழங்க வேண்டும் என்று கேட்கின்றேன்.

வீ. ஜெயா, ஜேர்மனி.

### எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!

ஐயா! பழனிவேல் தியாகராஜன் ஆகிய நான் 27.08.92 அன்று இலங்கையை விட்டு வெளிநாடு புக புறப்பட்டேன். கடந்த நான்கு மாதங்களாக சொல்லொணா துயர் பல என்னை சூழ்ந்து வாழ்க்கையே வேண்டாம் என்கின்ற நிலையில் 21.11.92 'பிராங்போட்' வந்திறங்கி பின் 'ஜோனிசொப்ஹொட்டல்' என்ற விடுதியில் தற்போது இருக்கும் எனக்கு புத்தகங்கள் ஏதும் உண்டா என்று கேட்டு ஏங்கிய வேளை 'எரிமலை' என்ற எமது போராட்ட வரலாற்று ஏடு கிடைத்தது. இருண்ட என் வாழ்வுக்கு விடிவெள்ளிபோல் ஒளி கொடுத்த எரிமலைக்காக;

### அன்பின் எரிமலை ஆசிரியருக்கு!

குறுக்கெழுத்துப் போட்டி இல. 3 இற்கு எனக்கு மூன்றாவது பரிசு கிடைத்ததை மார்கழி எரிமலைப் பத்திரிகை மூலம் அறிந்து மிகமிக மகிழ்ச்சி அடைந்தேன்.

மேலும் தாங்கள் பரிசாக அனுப்பிய பத்திரிகையும் கிடைக்கப் பெற்றேன். மிகவும் நன்றி. ஆனால் நான் ஏற்கனவே எரிமலை பத்திரிகைக்கு வருட சந்தா கட்டியுள்ளேன். தவிர பணம் கொடுத்தே பத்திரிகையை வாங்கவும் விரும்புகிறேன். ஆதலால் மேற்கொண்டு எனக்குப் பத்திரிகை அனுப்பாதீர்கள். இதையிட்டு என்மேல் கோபம் கொள்ளாதீர்கள். போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஓர் ஆர்வத்திலேயே கலந்து கொண்டேன். அதற்கு நீங்கள் மூன்றாவது பரிசு தந்து என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விட்டீர்கள். அந்த சந்தோஷம் போதும்.

அன்புடன், திலீபன்

### மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு!

வந்தனங்கள் பல. மார்கழி எரிமலை இதழில் கவிஞர் புதுவையின் 'தலைவன் வாழி' கவிதை தமிழ் நெஞ்சங்களின் வாழ்த்துப் பாவாக அமைந்திருந்தது. கஸ்தூரியின் பேனா ஊற்றுக்களும் அவர் ஒரு 'போராளி' என்பதை நிரூபித்து நிற்கின்றன. ஆனையிறவு சமர்க்களம் மக்களின் பங்கு போதாமையினால் ஏற்பட்ட பின்னடைவை சொல்லி நின்றது. களத்திலிருந்து ஒரு கடிதம் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் மக்களின் செயல் எவ்வளவு வேதனைக்குரியது என்பதை விளக்கியது. தமிழர் ஒடுக்கி வைத்துள்ள பண்பாட்டம்சத்தில் விளக்கப்பட்டுள்ள கருத்தானது இதுவரை எமது சமூகத்தில் யாராலும் அறியப்படாத ஒன்று. வரவேற்கப்படவேண்டியது. குறுக்கெழுத்துப் போட்டி இடம்பெறாமை ஏமாற்றத்தை அளித்தது. மொத்தத்தில் இவ்விதழ் மாவீரருக்குச் சிறப்புச் சேர்த்துக் கதம்பமாக மணம் வீசியது. பாராட்டுக்கள்.

இரா. அன்பரசி ஜெர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மரக்கறிப் பயிர்ச் செய்கை

யாழ். மாவட்டத்தில் மரக்கறிப் பயிர்ச்செய்கை நன்கு விருத்தியடைந்துள்ளது. இங்கு பல்லின மரக்கறிகள் உற்பத்தியாகின்றன. பருவகால நிரம்பல் ஏற்படும் போது பழுதடையக் கூடிய நிலையும் ஏற்படுவதால் பதப்படுத்தல் தொழில் முயற்சிகள் பற்றிய ஆய்வுகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவரையின தாவரங்களின் உற்பத்தி - குறிப்பாக பயறு, உளுந்து, கௌபி, துவரை ஆகியவற்றின் உற்பத்தி அதிகரிக்கையில் அவற்றைத் தரம் பிரித்து பொதி செய்தல், மாவாக்கல் போன்ற சில தொழில்கள் ஆரம்பிக்கப்படுவது குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றது. அதிக உற்பத்தியாகும் விளைபொருட்களை எவ்வாறு பதப்படுத்தப்பட்ட பொருட்களாக மாற்றியமைக்கலாம் என்பது பற்றிய அறிவும் ஊட்டப்பட்டு வருகின்றது.



## ஆலைகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் புதுக்குடியிருப்பில் ஆரம்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் வேப்பெண்ணை ஆலையும், ஒட்டுசுட்டானில் பால் வெல்ல உற்பத்தியும், பாய்த்தறி ஆலையும், கயிறு, தும்புத்தடி தயாரிக்கும் தும்பு ஆலையும் இயங்கி வருகின்றன. இதன்மூலம் வேலை வாய்ப்பின்றி இருந்த அனேகமானோர் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றார்கள்.

## தேனீ வளர்ப்பு

யாழ். மாவட்டத்தில் சுயதொழில் முயற்சிகளாக தேனீ வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

## பயன் தரும் பனை வெல்லம்

மக்கள் தேநீருடன் பனை வெல்லத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். கரும்புச் சீனியைவிட பனை வெல்லம், புரதம், இரும்பு, கல்சியம், பொஸ்பரசு, உயிர்ச் சத்து பி, சி போன்ற ஊட்டச்சத்துக்களும் கொண்டதாக இருக்கின்றது.

## வருவாய் தரும் வீட்டுத் தோட்டங்கள்

வீட்டுத் தோட்டத்தைச் சிறந்த முறையில் திட்டமிட்டு மேற்கொள்வதன் மூலம் வீட்டை அழகாக வைத்திருப்பதுடன், குறிப்பிடக்கூடிய வருவாயையும் பெறலாம். இதன்மூலம் சுயதேவை பூர்த்தி செய்யப்படுவதோடு நாட்டின் தேசிய உற்பத்தியும் பன்மடங்கு அதிகரிக்கின்றது. வீட்டுத் தோட்டத்தில் பயிர் வகைகளுடன் கோழிகள், பசுக்கள் போன்றவற்றையும் இடவசதிக்கேற்ப வளர்க்கலாம். இதனால் பயிர் செய்வதிற்குரிய பசளையையும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு சிறிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் போது எமக்குத் தேவையான நிறை உணவைப் பெற்றுக் கொள்வதுடன், மேலதிக உற்பத்திகளைப் பெற்று மாதாந்தம் 500 ரூபா பெறுமதியான வருமானம் பெறக் கூடியதாக இருக்கும். நாமும் பயன் பெறுவோம், நாடும் பயன் பெற உழைப்போம், எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மக்களை இவ் வீட்டுத் தோட்ட முயற்சியில் ஈடுபட ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

## அன்னை பூமியில்

தென்னிலங்கைக்குச் செல்லும் பணம் எமது நாட்டிலேயே இருந்து நாணயப் புழக்கம் அதிகரித்துள்ளது. உள்ளூர் உற்பத்திகள் பெருகுவதால் தொழிற்சாலைகள் பெருகுவதோடு, மக்கள் பலர் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். சுயசார்புப் பொருளாதாரம் வளர்ச்சி அடைகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"மாவீரர் தடையுடைத்தார்
தமிழீழம் தரணியிலே பார்......."

யாழ். மாவட்ட ஓவியப் போட்டியில், முதற்பரிசு பெற்ற ஓவியம்
ஓவியர்: சு. செம்மலையான்